



# தமிழ் சிறார் இலக்கியம்

முனைவர் சு. மணிமாறன்





புத்தகக்குறிப்பு

9 788198 107848

# தமிழ் சிறார் இலக்கியம்

முனைவர் சு. மணிமாறன்

# Title Verso

**TITLE OF THE BOOK: Tamil Sirar Ilakkiyam**

**புத்தகத்தலைப்பு** : **தமிழ் சிறார் இலக்கியம்**

**AUTHOR** : Dr. S. Manimaran

**FIRST EDITION** : 2024

**PAGES** : 196

**PRICE** : 450

**ISBN NUMBER** : 978-81-981078-4-8

**PUBLISHER : Pandian Educational Trust,**
**3/350, Veterinary Hospital Backside,**
**Virudhunagar – 626001.**
**Tamil Nadu**

**PRINTER : Maheswari Publishers,**
**3/350, Veterinary Hospital Backside,**
**Virudhunagar – 626001.**
**Tamil Nadu**

**பதிப்புரிமை / Copyright © 2024 கட்டுரையாளர்களுக்கு / Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# மதிப்புரை

சிறார் இலக்கியம் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே நல்லெண்ணங்களையும், நற்பண்புகளையும் பயிற்றுவிக்க மிக முக்கியமான வழியாய் அமைகிறது. தமிழ் சிறார் இலக்கிய பதிவுகள் பன்நெடுங்காலமாகவே தமிழ் மொழியில் உள்ளது. உதாரணமாக, அவ்வையின் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகியவற்றை எடுத்துக் கொள்ளலாம். அவ்வையார் தமிழ்ச் சமுதாய நெறிகளைப் பாடல்கள் மற்றும் நீதிக் கதைகளாக எழுதியுள்ளார். பிற்காலத்தில், பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், கவிமணி, அழ. வள்ளியப்பா, சூடாமணி போன்றார் குழந்தைகளின் சிந்தனை வளர்ச்சி மற்றும் சமூக நலனில் கவனம் செலுத்தி கவிதைகளை மற்றும் ஏனைய படைப்புக்களைப் படைத்து உள்ளனர். சமகால எழுத்தாளர்களான அருணகிரி, நாஞ்சில் நாடன், பிரேமா ஸ்ரீனிவாசன், சரோஜா ராமமூர்த்தி, அம்புஜம் போன்றார் குழந்தைகளைக் கவரும் கதை நூல்களை உருவாக்கினர். குறிப்பாக, தமிழ் சிறார் இலக்கியம் மனித நேயம் மற்றும் இயற்கை பாதுகாப்பை நெறியெனக் கொண்டுள்ளது. இன்றைய தொழில்நுட்ப உலகில், சிறார்களுக்கான மாத இதழ்கள், செயலிகள் மற்றும் காமிக்ஸ் போன்ற புதிய வடிவங்களிலும் தமிழ் சிறார் இலக்கியம் தொடர்ந்து

வளர்ச்சியடைகிறது. இத்தொகுதியில் கூட Plotagon’ என்ற கதை வழி தமிழ் கற்றல் செயலி பற்றி ஒரு கட்டுரை உள்ளது. இவ்வாறு, தமிழ் சிறார் இலக்கியம் தமிழ் மொழி, பண்பாடு மற்றும் அறம் ஆகியவற்றின் அரணாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

**நன்றி**

**முனைவர் சு. மணிமாறன்**

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | இலக்கியமும் குழந்தைகளும்<br>முனைவர் சு. அய்யனார் | 1 |
| 2. | கவிமணியின் குழந்தை பாடல்கள் - பொருட்கட்டமைப்பு<br>முனைவர் மூ. கவிதா | 27 |
| 3. | சிறார்கள் கதைகளில் சுற்றுச்சூழலியல்<br>மு. சுமதி | 51 |
| 4. | பாரதியார் சிறார்களுக்குத் தந்த *பாப்பா பாட்டு*<br>முனைவர் பி. ஸ்ரீதேவி | 67 |
| 5. | விஞ்ஞான விக்ரமாதித்தன் கதைகள் வழி வெளிப்படும் மருத்துவ அறிவியல் உண்மைகள்<br>முனைவர் வெ. பிரபாவதி | 80 |

| | | |
|---|---|---|
| 6. | ‘Plotagon’ செயலி வழி ஒன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு ஆத்திசூடியையும் அதன்பொருளையும் கற்பித்தல்<br>புனிதா சுப்பிரமணியம் | 104 |
| 7. | சிறார் இலக்கியத்தில் குழந்தைச் செல்வம் படைப்பு<br>முனைவர் கு. புஷ்பாவதி | 118 |
| 8. | சிறார் இலக்கியங்களில் வெளிப்படும் உணர்ச்சிகள்<br>முனைவர் பீ. பெரியசாமி | 133 |
| 9. | சிறார் ஆளுமை உருவாக்க நோக்கில் ‘தன்வியின் பிறந்தநாள்’<br>முனைவர் சு. வினோத் | 161 |
| 10. | சிறுவர் இலக்கியத்தில் கல்வி தாக்கம்<br>க. ஜான்சி ராணி<br>முனைவர் க. அமலா கார்த்திகா | 172 |
| 11. | அழ. வள்ளியப்பாவின் பாடல்களில் கல்வி கற்கும் குழந்தைகளுக்கான அறிவுரைகள்<br>முனைவர் இரா. ஜீவாராணி | 186 |



**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக. (குறள் - 391)**

# 1

# இலக்கியமும் குழந்தைகளும்

**முனைவர் சு. அய்யனார்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 17.

## முன்னுரை

தமிழ் இலக்கியம் நீண்ட வரலாற்று பின்னணிகளை உடையது சமூகத்தின் இன்றியமையாத தேவைக்கு ஏற்ப இலக்கிய வகைகள் உருவாகின்றன. மனித வாழ்க்கையின் அனுபவங்களையும், அவர்களின் உள்ளத்து உணர்வுகளையும் வெளிப்படுத்துவதாக இலக்கியங்கள் அமைகின்றன. தமிழில் தோன்றிய அனைத்து இலக்கியங்களும் முன்பு எழுதாத இலக்கியங்களாக இருந்து, வாய்மொழி இலக்கியமாக தவழ்ந்து, பின்பு ஏட்டில் எழுதப்பட்டன. ஒவ்வொரு காலகட்டங்களிலும் சமூகத்தின் இன்றியமையாத் தேவைகளுக்கு ஏற்ப இலக்கிய வகைகள் உருவாகின்றன, அவை மக்களின் விருப்பு, அரசியல், சூழல், கல்வி நிலை, பிறமொழி இலக்கியச் செல்வாக்கு, சமூக மாற்றங்கள் போன்றவை இவ்வகை இலக்கிய வகை உருவாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன.இவை மக்களின் வாழ்க்கை அனுபவங்களையும் உள்ளத்து உணர்வுகளையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

 **ISBN Number:** 978-81-981078-4-8

**குழந்தைச்செல்வம்**

மனித வாழ்க்கையில் ஏற்படும் துயரங்களை மறப்பதற்கு மனிதருக்கு கிடைத்த அரும்பெரும் செல்வம் குழந்தைச் செல்வமாகும்.பொன்னாலும், பொருளாலும், உலகம் போற்றுகின்ற உயர்வை ஒருவர் பெற்றாலும் கொஞ்சி மகிழ்வதற்கு குழந்தை இல்லை என்றால் அவர்களின் வாழ்க்கையில் வெறுமையே மிஞ்சும்.

**பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற (குறள் - 61)**

என்று குழந்தைச் செல்வத்தின் இன்றியமையாமையைப் பற்றி பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே வள்ளுவர் கூறிச் சென்றுள்ளார். உலகத்தில் ஈடு இணையற்ற செல்வம் குழந்தைச் செல்வமாகும், கள்ளங்கபடமற்ற பருவம் குழந்தைப் பருவம் ஆகும்.

**நாட்டுப்புற இலக்கியங்களில் குழந்தைகள்**

குழந்தை இலக்கியத்தின் தோற்றுவாய் நாட்டுப்புற இலக்கியங்களாகும். நாட்டுப்புற மக்களின் பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் அவர்களின் உள்ளப்பாங்கினையும் நாட்டுப்புற இலக்கியங்களின் வழி நாம் அறியலாம். கல்வியறிவு இல்லாத மக்கள் தங்கள் உணர்ச்சிகளை ஏட்டில் வடிக்காமல் பாட்டில் வடித்துள்ளனர். நாட்டுப்புறப் பாடல்களில் தனி ஒருவராக பாடுகின்ற முறை ஒன்று உண்டு. தாங்கள் பேச நினைத்த வார்த்தைகளை தாலாட்டின் மூலமாக வடிவமைத்து

 **ISBN Number:** 978-81-981078-4-8

பாடினர். தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கின்றது, தாயின் நாவசைவில் தாலாட்டு பிறக்கின்றது எனவே தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசு தான் தாலாட்டு எனப்படுகின்றது. மனித வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாது அது போன்றே மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் பற்றி உறுதியாக கூற முடியாது.

**தாலாட்டு பாடல்கள்**

தாலாட்டு பாடல் முதலில் ஒலிக்குறிப்பாக அமைந்து நாளடைவில் கருத்து உருவாக்கம் பெற்றது. கற்றுக் கொடுப்பவர் இன்றி கற்கப் பட்டவை தாலாட்டுப் பாடல்கள் இதை எடுத்து எழுதியவர் இன்னார் என்று கூறுதல் இயலாது. தாய் ஆழங்காண முடியாத அன்புக் கடல் அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு எனப்படும். எனவே, தாலாட்டின் தொடக்கம் மாறுபட்டதாகும் பாடுவோரின் மன இயல்புகளுக்கு ஏற்றவாறு குழந்தையின் அழுகையைப் பொறுத்தும் தாலாட்டின் அமைப்பு அமைகிறது. **“ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிராரோ ராராரோ ராரிராரோ ராராரோ ஆராரோ ஆரிராரோ.”** இவ்வாறு பொருளற்ற ஓசைகள் மற்றும் பொருளுள்ள ஓசைகளும் கலந்து இடம் பெறுவதுண்டு.

**தொல்காப்பியத்தில் மக்கட்பேறு**

தமிழில் முழுமையாகக் கிடைக்கப் பெறும் முதல்

 **ISBN Number:** 978-81-981078-4-8

இலக்கண நூல் *தொல்காப்பியம்* ஆகும். மற்ற மொழிகளில் உள்ள இலக்கணங்களை நோக்குமிடத்து நுண்மையும், செறிவு மிக்கது, பழமையும், பெருமையும், அழகும், அமைப்பும் உடையது இத்தகைய சிறப்புடைய தொல்காப்பியத்தில் இல்லறச் செல்வமாகிய குழந்தைகளை குறித்து பல இடங்களில் சுட்டிச் செல்கிறார். தொல்காப்பியத்தில் குழந்தை என்னும் சொல் எங்கும் குறிக்கப் படவில்லை குழவி, மகவு என்றே குறிப்பிடப்படுகிறது.

**குழவியும் மகவும் ஆயிரண்டு அல்லவை**
**கிழவ அல்ல மக்கட் கண்ணே (தொல், மர. நூ. 1513)**

என்னும் நூற்பாவில் மக்களின் இளமைப் பெயராக குழவி, மகவு இரண்டையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். குழவியும் மகவும் மட்டுமே பொருத்தமுடையன என்றும், இவை அல்லாத மற்ற பெயர்கள் மக்களுக்கு இளமைப் பெயர்களாக கூறப் பொருத்தமற்றது என்பது இதனால் புலனாகும். பாடாண் திணையில் **"குழவி மருங்கினும் கிழவதாகும்" (தொல், பாடாண். நூ.1028)** என்பதில் மூவகை வர்ணத்தாருக்கும் குழவிப் பருவம் கழிந்த பின்பும் அவர்களைக் குழந்தையாக பாவித்துப் பாடும் மரபு உரைக்கப்பட்டுள்ளது.

**குழந்தை மூலம் ஊடல் தீர்த்தல்**

தொல்காப்பியர் கற்பியலில் தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே ஏற்படும் ஊடலைத் தீர்க்கக்கூடிய

 **ISBN Number:** 978-81-981078-4-8

வாயிலாக குழந்தைகள் விளங்குவதை, **“சிறந்த புதல்வனை தேராது புலம்பினும்” (தொல். கற்பு., நூ. 1116)** என்று குறிப்பிடுகின்றார்.

**தென்புலத்தார் கடனும் மக்கட்பேறும்**

சங்க காலம் வீரயுக காலமாகக் கருதப் பெற்றது,போரும், பூசலும் நிறைந்த அக்காலக் கட்டத்தில் வீரனின் உயிரிழப்பு இயல்பாகவே கருதப்பட்டது. போரில் வீரமரணமடைவதை தமிழர்கள் மேன்மையாகக் கருதினர், அக்காலச் சமயங்களும் இலக்கியங்களும் போரினை உயர்ந்த நிலையில் நோக்கின. அதோடு மட்டுமல்லாமல் அவற்றை ஆண்களின் கடமையாகும் அறிவுறுத்திச் சென்றன. அடிக்கடி நிகழ்கின்ற போரினால் உயிர் இழப்புகளை ஈடுகட்ட ஆடவர் எண்ணிக்கை அதிகம் தேவையானது என்பதை உணர்ந்த நம் முன்னோர்கள் மக்கட் பேற்றின் சிறப்பினை போற்றினர். மக்கட்பேறு தென்புலத்தார் கடன் என்னும் பண்பாடாக மக்களிடம் பரப்ப பெற்றது.

> **தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
> **பொன்போற் புதல்வரைப் பெறாதீரும். (புறநானூறு - 91)**

இங்கு குழந்தைச் செல்வம் இல்லாதவர்களுக்கு போரினின்று விலக்கு அளிக்கப்பட்டது இங்கு உற்று நோக்கத் தக்கதாகும். குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் போரில் ஈடுபடலாகாது என்று கூறி இருப்பினும் நேரடிப் பொருள் அது அன்று. புதிதாக மணம் ஆனவர்கள் இளம் பிள்ளைகளை

 **ISBN Number:** 978-81-981078-4-8

பெற்றெடுத்து அடுத்த போர்க்களத்திற்கு பிள்ளையைத் தயார் செய்த பின்னரே போருக்குச் செல்லுதல் வேண்டும். இதுவே மேற்காட்டிய பாடலில் மறை பொருளாகக் கருதப்படுகிறது. இக்கருத்தையே க. ப. அறவாணன் அவர்களும் கூறியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

> **போர்ப் பணிகள் செய்ய குழந்தைகள் வேண்டும், எனவே குழந்தைகளைப் பெற்றுத் தரும் நிலையில் உள்ள மணமக்களுக்கு போர் விலக்கு அளித்தனர். புது மணமக்களைப் போரில் கொல்லுதலைத் தவிர்க்கக் குறிப்பாக மறுமணம் இல்லாத தமிழகத்தில் பெண்களின் துயர்களை களையப் போரில் விலக்கு அளிக்கப்பட்டது. (செல்வராசு. நா.- பக். 207)**

கணவன் இறந்த பின்பு மறுமணம் மறுக்கப்பட்ட சூழலில் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவதை தடுக்க இது போன்ற சிறந்த உத்தி முறைகளைக் கையாண்டனர்.

**குழந்தை சார் நம்பிக்கைகள்**

காதலும், வீரமும் பழந்தமிழர்களின் இரு கண்களாக் கருதப்பட்டன. இது சங்கத் தமிழர்களின் வாழ்வாகவும் இருந்து வந்ததைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். ஆண் குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே வாள் பயிற்சி, விற்பயிற்சி கற்றுக் கொடுக்கப் பட்டிருக்கிறது. வீரர்கள் போர்க்களத்திலே மார்பில் விழுப்புண் பட்டு வீழ்ந்து

 **ISBN Number:** 978-81-981078-4-8

மடிவதைப் பேறாக கருதியுள்ளனர். குழந்தை இறந்தே பிறந்தாலும் மார்பிலே வாளால் வெட்டி புதைக்கும் வழக்கம் இருந்து வந்தது.

**குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார் (புறநானூறு - 74)**

மன்னர் குல வழக்கப்படி, குழந்தை இறந்து பிறந்தாலும், தசைப் பிண்டமாகவோ அல்லது குறைபாட்டுடனோ பிறந்தால் அவற்றை ஆள் அல்ல என்று எண்ணி வாளால் வெட்டி அடக்கம் செய்வார். அவ்வாறு செய்தால் அவர்கள் மேலுலகம் அடைவர் என்ற நம்பிக்கையும் தமிழ் மண்ணில் பிறக்கும் எந்தக் குழந்தையும் வீரனாகவே புதைக்கப்பட வேண்டும் என்ற தமிழர்களின் கோட்பாடு இப்பாடலில் புலனாகிறது.

**நல்ல குழந்தை நாட்டின் செல்வம்**

சின்னஞ்சிறு மழலையரை நாட்டின் தலை சிறந்த குடிமக்களாக உருவாக்கம் செய்வதற்கு பெற்றோருக்கு மட்டுமல்ல சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் பொறுப்புகளுண்டு, கடமைகளுமுண்டு. இதனை,

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறு**
**எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறநானூறு - 312)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

என்ற பாடல் எடுத்துரைக்கிறது. குழந்தை வளர்ப்பால் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்புகளைப் பட்டியலிட்டு இறுதியில் நற்பண்புகளால் தான் நாட்டின் சிறந்த நாட்டின் சமுதாயத்தை மேம்படுத்த வேண்டிய கடமை அக்குழந்தைக்கு உண்டு என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது.

**அறநூல்களில் குழந்தைகள்**

சமூக நிறுவனமான குடும்பத்தின் சிறப்பு மக்கட்பேறு. தலைவன், தலைவிக்கு கூறப்பெறும் கடமைகளில் மக்களை நன்முறையில் பேணல் தலையானதாகக் குறிக்கப்படுகிறது. மக்கட்பேறு வள்ளுவர் காலத்தில் இன்றிமையாததாக் கருதப்பட்டது. காரணம் வள்ளுவர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டைக் குரளில் வலியுறுத்துகிறார். இக்கோட்பாட்டின் விளைவாகத் திருமணம் புரிந்து கொண்டு, ஒருவன் ஒருத்தியுடன் வாழும் இல்லறத்தில் அவர்களுக்கு உண்டாகிற நேரடி வாரிசிற்குத்தான் தான் இவர்களுடைய சொத்து சென்றடையும். இந்த கொள்கை வள்ளுவர் காலத்தில் இருந்ததினால் அவர் காலத்தில் வாழ்ந்த மக்கள் குழந்தைப் பேற்றினை செல்வமாகக் கருதினர். அதனால் தான் காலச் சூழலுக்கு ஏற்றவாறு வள்ளுவரும் குடும்ப வாழ்க்கையை சிறப்படையச் செய்வதே மக்கட்பேறு. என்ற கருத்தை வலியுறுத்தும். இல்வாழ்க்கையின் சிறப்பு, வாழ்க்கைத்

 **ISBN Number:** 978-81-981078-4-8

துணையின் சிறப்பு, என்று கூறி மூன்றாவதாக மக்கட்பேற்றின் சிறப்பினை கூறுகிறார்.

**அமிழ்தினும் இனிமையானவர்கள்**

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று (குறள்-11)**

மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால் மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணர்த்தப்பட்டது. அமிழ்தத்தை விட இனிமையானது பிஞ்சுக் கரங்களால் அளாவப் பெற்ற உணவு. என்றுவள்ளுவப் பெருந்தகை சுட்டிச் சென்றதை பார்க்கும் போது குழந்தைகளின் சிறப்பை நம்மால் அறியமுடிகிறது. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ். இக்கருத்தையே புறநானூற்றிலும் பாண்டியன் அறிவுடைநம்பி பாடியுள்ளார். இதனையே பாரதிதாசனும் தன்னுடைய குடும்ப விளக்கு காவியத்தில் எழிலுறக் காட்சியாக விவரிக்கிறார்.

**தந்தை உண்ணும் தயிரின் சோற்றை**
**அங்கையால் அள்ளி ஆ ஆ என்றாள்**
**அப்பனும் வாய்திறந்து அதை வாங்கி உண்டான்**
**(இசையமுது – பா. 32)**

**மழலை மொழி**

சின்னஞ்சிறு குழந்தைகள் பேசும் குதலை பேச்சை மழலை மொழியை விரும்பாதவர்கள் இவ்வுலகில்

 **ISBN Number:** 978-81-981078-4-8

எவருமில்லையென்றே கூறலாம். குழந்தைகள் பேசும் மழலை மொழி இலக்கண வரம்புக்கு அப்பாற்பட்டது.

**குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர் (குறள் - 66)**

குழலும் யாழும் இனிமையை சுரக்கும் கருவிகளாகும். அந்த இசையின் இன்பத்திற்கு ஆட்படாத அவர்கள் எவரும் இருக்க முடியாது, குறிப்பாகத் தாங்கள் பெற்றெடுத்த குழந்தையின் மழலை மொழியை கேட்கின்ற பெற்றவர்களுக்கு குழலின் இனிமையும் எளிமையும் ஒரு பொருட்டாக தோன்றாது.

**குழவி தளர்நடை காண்டல் இனிது**
**அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே**
**(இனியவை. நாற்பது -14)**

என்று *இனியவை நாற்பது* பாடலும் குழந்தைகளின் தளர்நடையைக் காண்பதும் அவர்களின் மழலைப் பேச்சைக் கேட்பதும் அமிழ்தினும் இனியது என்கிறது.

**தக்கார் தகவிலார் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப் படும் (குறள் – 114)**

இக்குறளில் சுட்டப்படும் எச்சம் என்னும் சொல் குடும்பத்தின் வாரிசைக் குறிக்கும். ஒருவனுடைய நன்மை தீமைகளையும், அவன் எத்தகைய குணத்தை உடையவன் என்பதனையும் அவனுடைய வாரிசாக உண்டாகிற மக்களினாலே கண்டுகொள்ளலாம். இல்லறத் தலைவன் தன் மக்களை எம்முறையில் வழிநடத்திச் செல்ல வேண்டும் என்பதை

 **ISBN Number:** 978-81-981078-4-8

வலியுறுத்துகிறது. சமூகத்தில் நல்ல பெயரினை பெற மக்கட் பேற்றின் சிறப்பு எவ்வளவு இன்றியமையாதது என்பது தெளிவாகிறது. வள்ளுவர் காலத்துக்கு முன்பு வாழ்ந்த சங்கச் சான்றோர்களும் மக்களின் சிறப்பை உணர்ந்தே இருந்தனர் தம் மக்களை எவ்வழியில் வளர்க்க வேண்டும் என்பதையும் அற நூல்கள் விளக்குகின்றன. மக்கட்செல்வம் இல்லை எனில் நாம் பெற்ற வாழ்நாளில் எந்த பயனுமில்லை இத்தகைய சிறப்பு பெற்ற குழந்தைகளை தக்க முறையில் வளர்த்து சான்றோன் ஆக்குவது பெற்றோர் கடமை ஆகும். அதனால்தான் வள்ளுவர் நன்மக்கட்பேறு, அறிவறிந்த மக்கட்பேறு என்று சொற்களைக் கையாண்டுள்ளார்.

**காப்பியங்களில் குழந்தைகள்**

காப்பியங்களில் குழந்தையைப் பற்றிய தரவுகள் மட்டுமே கிடைக்கின்றன காப்பியத் தலைவர்களின் இளமைக் கால பருவ நிகழ்ச்சிகளே குறிப்பாக உணர்த்தப் பெற்றிருக்கின்றன. காப்பியங்களின் இலக்கணத்தைக் கூறும் தண்டியலங்காரம் காப்பிய கூறுகளில் ஒன்றாக குழந்தையையும் குறிப்பிடுகின்றது.

> **… பெருங்காப்பிய நிலை பேசும் காலை**
> **தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல் (தண்டி - நூ. 7)**

இனியதும் இழிவாகிய கள்ளை உண்டால் ஒத்த மயக்கத்தைத் தருகின்ற குழந்தை பெறுதல் என்ற குழந்தைச் செல்வத்தை காப்பியக் கூறுகளுள் ஒன்றாகக் கூறுகிறது.

 **ISBN Number:** 978-81-981078-4-8

**கம்பராமாயணத்தில் குழந்தைச் செல்வம்**

அளவில்லாத ஆண்டுகள் அறக்காரியங்களை இடையூறின்றி செய்து உலகத் தவர்க்கு எந்த ஒரு துன்பமும் இன்றி இந்நில உலகத்தை ஆட்சி செய்து வந்தவன் தசரதன். இவன் தான் செய்த நற்காரியங்களை தமக்குப் பின் செய்வதற்கு தனக்கு ஒரு குழந்தைச் செல்வம் இல்லையே என்று முறையிடுகிறான்.

**உவப்பு இல்பல் ஆண்டு எல்லாம் உறுகண்**
**இன்றியே**
**தலைப்பொறை ஆற்றினேன் தனையர் வந்திலர்**
**(கம்ப., திரு அவதாரப் படலம் - 202)**

பண்டைய காலங்களில் தன்னுடைய ஆட்சிக்குப்பின் அதிகாரம், செல்வம், பொருள்களெல்லாம் தம்முடைய வாரிசுகளுக்கே சென்று சேர வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர் என்பதை இது புலப்படுத்துகிறது.

**குழந்தைச்செல்வம் இல்லாதவர்கள்**

குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் பொன், பொருள், புகழ் ஆகிய செல்வங்களைப் பெற்றிருந்தாலும் உணவினைக் கையால் இட்டுந் தொட்டும் சிறுகை அளவளவாதற்கு குழந்தை இல்லையென்றால் மற்ற செல்வங்கள் பெற்றிருந்தால் வீணாகும் என்பதை நளவெண்பா உணர்த்துகிறது

**பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்…**


**ISBN Number:** 978-81-981078-4-8

**… மக்களை இங்கில்லாதவர் (நளவெண்பா, 246)** குழந்தைகள் மட்டும் இல்லையானால் இந்த உலகத்தில் நமக்கு பலன் எதுவும் இல்லை.

**குழந்தைகளும் சமயமும்**

குழந்தையின் மாசற்ற தன்மைதான் தெய்வத்தன்மை. இதனால் தான் குழந்தையை தெய்வமாகவும், தெய்வத்தை குழந்தையாகவும் கண்டனர். நம்முடைய நாடு குழந்தையை பாராட்டும் நாடு, குழந்தையைத் தெய்வமாக மதிக்கும் நாடு குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்ற பழமொழி குழந்தையையும் தெய்வத்தையும் இணைத்துக் கூறுகிறது. நம் நாட்டிலே பலர் குழந்தையை கடவுளாக கண்டுள்ளனர். இதிலிருந்துதான் கண்ணன் வழிபாடும், முருகன் வழிபாடும் தோன்றியிருக்க வேண்டும். தமிழில் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி என்று கருதப் பெறும் பெரியாழ்வார் பாடல்களில் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கான தோற்றுவாய் கிடைக்கப் பெறுவதை அறியலாம். இவையே பின்னாளில் பிள்ளைத்தமிழ் என்று ஒரு தனி இலக்கியம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தன.

**மாணிக்கங் கட்டி வயிரமிடைக்கட்டி**
**ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுதொட்டில்**
**பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்**
**மாணிக்கக் குறளனே தாலேலோ வையமளந்தானே**
**தாலேலோ (பெரியாழ்வார் திருமொழி – 44)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

பெரியாழ்வார், குலசேகராழ்வார் இருவரும் திருமாலைக் குழந்தையாக எண்ணி பல பாசுரங்களைப் பாடியுள்ளனர். இப்பாடல்களில் ஆழ்வார்களின் தாய்மையுணர்வு தந்தை அன்பு செய்திகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

**கண்ணனின் குறும்பு செயல்கள்**

தொட்டிலில் கை,கால் அசைத்து விளையாடுவது இடுப்பில் உட்கார வைத்தால் நழுவிக் கீழே இறங்குவது, ஏறுவது முதலியன குழந்தைகள் செய்யும் அற்புதமான செயல்கள். இத்தகைய செயல்களைச் செய்யும் பிள்ளைகளை ஆயர்பாடியில் உள்ள பெண்கள் பெற்றிருக்கிறார்களாம் ஆனால் யசோதையோ அதற்கு மாறாக செயல்களைச் செய்யும் பிள்ளையைப் பெற்று இருக்கிறாளாம்.

**கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்**
**எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்**
**ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்**
**மிடுகில்லாமையால் நான் மெலிந்தேன் நங்காய்**
**(பெரியாழ்வார் திருமொழி – 21)**

இவ்வாறாக கண்ணன் செய்யும் குறும்புகளை கூறுகிறார். இவை குழந்தைகள் செய்யும் குறும்புகள் நாம் விரும்பும் படியாகவும் அமைகின்றன. பெரியபுராணத்தில் 63 நாயன்மார்களின் குழந்தைப்பருவச் செய்திகளும் கம்பஇராமாயணத்தில் ராமரின் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகளும், வில்லிபாரதத்தில் பாண்டவர்களுடைய பிள்ளைப்பருவ செய்திகளும், நளவெண்பாவில்


**ISBN Number:** 978-81-981078-4-8

லோகிதாசனின் குழந்தைப் பருவங்களும், தேம்பாவணியில் வளன் சனித்த படலம், சீறாப்புராணத்தில் நபி அவதாரப் படலம் முதலியன குழந்தை இலக்கியத்திற்குரிய நிலைப்பாடுகளில் அமைந்துள்ளன.

**பாரதியின் பார்வையில் குழந்தைகள்**

பாரதி தேசியக் கவிஞர், புதுமைக்கு வித்திட்டவர், புதுமையைப் படைத்தவர். புரட்சி கருத்துகளாலே விடுதலை உணர்வுக்கு வித்திட்டவர். பாடல்களாலே மக்களின் மனதிலிருந்து அறியாமையை அகற்றியவர். அவர் இந்திய விடுதலையை மையமாக வைத்து பாடல்கள் பாடியவர். பிள்ளைகளின் இயல்பான செயல்களைக் கவினுறப் பாடல்கள் ஆக்கி குழந்தைச் செல்வத்தின் சிறப்பையும் பெருமையையும் உணர்த்தியவர் பாரதியார்.

**பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா**
**பேசும் பொற்சித்திரமே**
**அள்ளி அணைத்திடவே என் முன்னே**
**ஆடி வரும் தேனே ஓடி வருகையிலே**
**கண்ணம்மா உள்ளம் குளிருதடி**

**(கண்ணன் என் குழந்தை, பா. 32)**

என்று குழந்தைப் பருவத்தின் சிறப்புகளை பாரதியார் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

**பாரதிதாசன் பார்வையில் குழந்தை இன்பம்:**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ், தமிழ்நாடு, தமிழினம், சமூகம், கல்வி பொருளியல், அரசியல், அறிவியல்


**ISBN Number:** 978-81-981078-4-8

என அனைத்து வளங்களையும் பாடுபொருளாக்கி புரட்சி செய்தவர் பாவேந்தர் பாரதிதாசன். புதுமையான சந்தங்களில் குழந்தைகளுக்கு பாடல் எழுதிப் புகழ் பெற்றவர். அவருடைய குழந்தைப் பாடல்கள் இசையமுது என்னும் பெயருடைய இரண்டு கவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றுள்ளன குழந்தைப்பாடல்கள் மட்டுமே கொண்ட இளைஞர் இலக்கியம் என்ற நூலையும் எழுதியுள்ளார். இசையமுது என்னும் கவிதைத் தொகுப்பில் இன்பம், சிறார் பொறுப்பு, தாய்மை, மெய் சொல்லல், பொறுமை என்னும் கருத்துக்களை வலியுறுத்தி குழந்தைப் பாடல்கள் படைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தாம் ஒரு நாட்டின் உண்மையான சொத்து நாடு வளம் பெற வேண்டுமெனில் நாட்டின் குழந்தைச்செல்வம் வளம் பெற வேண்டும் இளம் வயதிலேயே பொறுப்போடு வளரவும், உயர் சிந்தனையோடு உயரவும் வேண்டும் என்பதனை பாரதிதாசன்.

**இன்று குழந்தைகள் நீங்கள் எனினும்**
**இனி என் நாட்டை ஆளப் பிறந்தீர்**
**நன்றாய் படியுங்கள் நாட்டில் குழந்தைகள்**
**ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்**

**(இசையமுது, பா. 32)**

என்று வலியுறுத்துகின்றார்.

**தற்கால இலக்கியங்களில் குழந்தைகள்**

தற்கால இலக்கியங்களில் குழந்தைகள் பற்றிய சிந்தனைகள் கவிதை படைப்பாக்கத்தில் கவிஞனின்


**ISBN Number:** 978-81-981078-4-8

ஆளுமைக்குட்பட்ட படைப்புகளில் மிகக் கடினமான படைப்பாளுமை தேவைப்படுவது குழந்தைகளை கவிதைகளில் கொண்டுவருவதுதான். தன்னாளுமை வெளிப்பாடுகளை முழுமையாக கொடுக்க இயலாமல், குழந்தைகளின் உலகத்தை குழந்தைத் தன்மையுடன் வெளியிடுவது என்பது மிகக் கடினமானது. குழந்தைகளின் உலகை அவர்களின் இயல்பு மாறாமல் படைத்து அவர்களின் உணர்வை உலகை வெளிப்படுத்தினால் தான் குழந்தையைப் பற்றிய படைப்புத் தன்மையை முழுமையாக வெளிக்கொணர இயலும்.

**குழந்தைகளைக் கொண்டாடுவோம்**

குழந்தைகளிடம் எவ்வகை திறன் இருக்கின்றது என்பதை வெளிக்கொண்டு வருவது தான் கல்வி. இன்றைய காலச்சூழலில் குழந்தைகளின் கல்வி என்பது மதிப்பெண்களை மட்டுமே முன்னிலைப்படுத்தி அவற்றைப் பெறுவதற்காக குழந்தைகளை இயந்திரங்களாக மாற்றி வருகின்றோம் அவர்கள் நாள்தோறும் இழந்து கொண்டிருக்கும் அவர்கள் அவர்களுடைய குழந்தைப் பருவம் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் வருடம் தவறாமல் குழந்தைகள் தினம் கொண்டாடுபவர்கள் தினங்களை விட்டு குழந்தைகளை எப்போதும் கொண்டாட போகிறீர்கள் மனிதர்களாகிய நாம் எல்லாவற்றையும் மேம்போக்காக வெறும் பிணங்களாய் மட்டுமே பார்க்கின்றோம். குழந்தைகளின் கனவுலக சிந்தனைகளை புறந்தள்ளிவிட்டு

 **ISBN Number:** 978-81-981078-4-8

குழந்தைகள் தினம் கொண்டாடுவதில் ஒரு பயனுமில்லை குழந்தைகளைப் போற்றுவதே அந்த தினத்தை கொண்டாடுவதற்கான அடையாளம் குழந்தைகளின் குதலை பேச்சில் தம்மை பதிவு கொடுக்காதவர்கள் இல்லை எனலாம் குழந்தைகளின் இனிமை அவர்கள் பேசுகின்ற வார்த்தைகளில் உள்ளது குழந்தைகளின் இயல்பு அவர்கள் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பது தான் தற்காலத்தில் குழந்தைகளிடம் உரையாடல்கள் குறைந்து கொண்டே வருகின்றன அவர்களின் உரையாடல்களுக்கு நாம் செவியும் மடிப்பது இல்லை.

**குழந்தைகளிடம்**
**கூச்சமே இல்லாமல் சொல்கிறோம்**
**சத்தம் போடாமல்**
**விளையாடுங்கள் என்று (புகழேந்தி பழ, ப. 76)**

குழந்தைகளின் அழகு அவர்களின் பேச்சில் தான் அடங்கியுள்ளது, குழல் மொழியை விடவும் யாழ் மொழியை விடவும் மழலை மொழி இனியது என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. சத்தம் போடாமல் விளையாடுங்கள் என்று குழந்தைகளைக் கூறி அவர்களின் உணர்வுகளை, மகிழ்ச்சியை, மழுங்கடிக்கத் தொடங்கிவிட்டோம். குழந்தைகள் புதியவற்றை தெரிந்துகொள்ள ஆர்வமாய் உள்ளனர், ஏன்? எதற்கு? எப்படி? என்று நம்மை கேள்விகளால் துளைப்பார்கள். அவர்கள் நம்முடன் உரையாடலை விரும்புகின்றனர், பெற்றோர்களாகிய


**ISBN Number:** 978-81-981078-4-8

நாம்தான் அவர்களின் கேள்விக்கு உரிய பதிலைக் கொடுப்பதில்லை, காரணம் அவர்கள் குழந்தைகள் தானே என்கிற மனப்போக்கு. குழந்தைகளின் பேச்சுகளுக்கு செவிமடுக்காத பெற்றோர்கள் இருக்கும் வரையில் வயதான பெற்றோர்களின் வார்த்தைகளை கேட்காத பிள்ளைகளும் உருவாகிக் கொண்டுதான் இருப்பார்கள். நாம் எதைக் குழந்தையின் மனதில் விதைக்கிறோமோ அவற்றையே அறுவடை செய்கிறோம்.

குழந்தைகளை முன்வைத்தது தாங்கள் வாழ நினைத்து அல்லது வாழத் தவறிய வாழ்க்கையைத் தங்களின் பிள்ளைகளின் வழி நிறைவேற்றிக்கொள்ள விழைவது பெற்றோர்களின் மனப்பாங்காக உள்ளது என சமூகவியலாளர்களும் உளவியலாளர்களும் கூறுகின்றனர். இது குழந்தைகளின் சுயத்தை குழந்தைப் பருவத்திலே தடுக்கும் கொடூரம் என்றும் கூறலாம். இந்த அவலத்தை புதுக்கவிஞர்கள் தங்களுடைய கவிதைகளில் வெகு சிறப்பாகக் கையாண்டுள்ளனர். கடவுளையும் குழந்தைகளையும் ஒன்றாக காணும் சமூகத்தில் குழந்தைப்பருவத்தில் கடவுளுக்கும் அவர் உலகத்திற்கான சாவி அவரிடம் இல்லை. பெற்றோர்களிடமே உள்ளது என்றும் கூறுகிறார்கள்.

**யாரும் படிக்காத**
**கடிதங்களை போல்**
**மூடியே கிடக்கின்றன**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**குழந்தைகளுடனான உரையாடல்**

**(நா. முத்துக்குமார், பக். 21)**

**குழந்தைகளும் பொம்மைகளும்**

கள்ளமில்லா குழந்தைகளுக்கு பொம்மை கூட உயிருள்ள ஒன்று தான் பொம்மைகள் குழந்தை பருவத்தின் உற்ற தோழன் என்னும் அளவிற்கு தனித்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. குழந்தைகளின் மனமும் பொம்மைகளுக்கும் உயிர் உருவம் கொடுக்கும் ஒரு பொருளின் உருவத்தை ஒத்திருக்கும் உயிரற்ற பொம்மைக்கும் அப்பொருளின் உயிருள்ள செயல்பாடுகளோடு உறவாடுவது குழந்தைகள் மனம் பொம்மைகளை வைத்து விளையாடும் குழந்தைகளின் வெள்ளை மனம் மாறாத அன்போடு பொம்மைகள் மேல் வைக்கும் அன்பும் குழந்தைகளின் தாய்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது மேல் குழந்தைகள் அன்பும் பொம்மை பேசும் உண்மையான குழந்தை மேல் உள்ள உண்மையான பாசமும் வியப்பிற்குரியது

**தூங்கிப் போனது குழந்தை**
**அழத் தயாராகிவிட்டன**
**பொம்மைகள் (சுரேஷ்குமார், நா., பக். 23)**

எல்லாருமே குழந்தைகளாக இருந்து வளர்ந்தவர்கள் தான், அன்றாடம் குழந்தையோடு வாழ்பவர்கள் தான், ஆனபோதிலும் குழந்தைகளோடு இருக்கிற ஒவ்வொரு கணமும் ஏதேனும் ஒரு கவிதையை நாம் கவனிக்காமல் விட்டு விடுகின்றோம், உலகத்தின் இயக்கமே

 **ISBN Number:** 978-81-981078-4-8

குழந்தைகள்தான் குழந்தைகளின் கைகளில் உள்ள பல்வேறு விளையாட்டு பொருட்களில் ஒன்றாய் இப்பூமியும் ஒரு பந்தைப் போல் உள்ளது.

**கடவுளுக்கும் ஆசை**
**குழந்தைகள் விளையாடும்**
**பொம்மையாய் மாற (சுரேஷ்குமார். நா., பக். 28)**

விளையாடும் குழந்தைகளுக்கு எல்லாப் பொம்மைகளும் ஒன்றே. யானை, கரடி, மான், குருவி, பட்டாம்பூச்சி, கிளுகிளுப்பை, பந்து கூடவே சில கடவுள் பொம்மைகளும். குழந்தைகளின் உலகில் கடவுள் பொம்மை ஆகிறார், பொம்மைகளின் உலகில் கடவுள் குழந்தை ஆகிறார்.

**குழந்தைகளற்ற வீடு**

குழந்தைகளே இல்லாத பூமியை என்னால் கற்பனை செய்து பார்ப்பதே இயலாது என்பார் மேல்நாட்டு கவிஞர் ஒருவர் குழந்தைகள் இல்லாத வீட்டை கூட நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாது இங்கு ஒரு கவிஞர் குழந்தைகள் அற்ற ஒரு வீட்டின் நிகழ்வுகளை நம்முன் காட்சிப் படுத்துகின்றார்.

**உட்கார்ந்து பேசுகிற உயரத்தில் தொலைபேசி**
**மீன்கள் அலையும் கண்ணாடித் தொட்டி**
**உடையாத உறையிடப்படாத டிவி ரிமோட்**
**சீராய் விரிக்கப் பட்ட படுக்கை விரிப்பு**
**தரையிலே கிடக்கும் செல்போன்**
**கலையாமல் இருக்கும் புத்தக வரிசை**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**கிறுக்கல்கள் ஏதுமற்ற வண்ணச்சுவர்**
**வெள்ளைத்தாள் ஒன்றின்மேல் திறந்தே இருக்கும்**
**பேனா பார்த்த கணத்திலேயே சட்டென**
**உணரமுடிகிறது இது குழந்தைகளற்ற வீடென**
**(முருகேஷ், மு., பக். 112)**

குழந்தைகளற்ற வீடுகளில் உள்ள எல்லா பொருட்களும் கலையாமல் இருந்தாலும் அவை அழகற்றவையாகவே தெரிகின்றன. குழந்தைகளின் பார்வையில் கலைந்திருப்பது தான் அழகு குழந்தைகளின் மனநிலையில் இருந்து இவற்றைக் காண வேண்டும்.

**புத்தகங்களே சமர்த்தாய் இருங்கள்**

நம் மனம் எதை நினைக்கிறதோ அதுவே நம் செயலாக உருவம் பெறும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று அதனால்தான் நம்மால் அடைய முடியாத கல்வி, வசதி வாய்ப்புகள், எல்லாவற்றையும் நம் குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற முனைப்பில் நமது நிறைவேறாத எண்ணங்களை குழந்தைகளின் தலையில் சுமத்தி விடுகிறோம், கல்வி என்ற பெயரில் குழந்தைகளுக்கு வெளி உலகத்தை காட்டாமல் அவர்களை புத்தகப் புழுக்களாக மாற்றி விடுகிறோம் இதனை அப்துல்ரகுமான்,

**குழந்தைகளே பாடப் புத்தகங்களாக இருக்கிறார்கள்**
**அவர்கள் கையில் ஏன் காகிதக் குப்பைகளை**
**தருகிறீர்கள். (அப்துல் ரகுமான், பக். 80)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

குழந்தைகளுக்கு நாம் அன்பைக் கற்றுத் தரலாம், நமது சிந்தனைகளை அல்ல ஏனென்றால் அவர்களுக்கென்று தனிப்பட்ட மன உலகம் என்ற ஒன்று உண்டு என்பதை அறிய வேண்டும் குழந்தைப் பருவத்தை வீணடிக்கும் கல்வி முறை மற்றும் புத்தக சுமை பற்றிய சிந்தனையானது இன்றளவில் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கவனத்துக்குரியது.

**குழந்தைகளைக் கொண்டாடுவோம்**

குழந்தைகளிடம் எவ்வகைத் திறன் இருக்கிறது என்பதை வெளிக்கொண்டு வருவதுதான் கல்வி. இன்றைய காலச் சூழலில் கல்வி என்பது மதிப்பெண்களை மட்டுமே முன்னிலைப்படுத்தி அவற்றைப் பெறுவதற்காக குழந்தைகளை இயந்திரங்களாக மாற்றி வருகிறோம். அவர்கள் நாள்தோறும் இழந்து கொண்டிருக்கும் அவர்களுடைய குழந்தைப் பருவம் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

**வருடம் தவறாமல்**
**குழந்தைகள் தினம் கொண்டாடுபவர்களே**
**தினங்களை விட்டு**
**குழந்தைகளை எப்பொழுது**
**கொண்டாடப் போகிறீர்கள் (அப்துல் ரகுமான், பக். 90)**

மனிதர்களாகிய நாம் எல்லாவற்றையும் மேம்போக்காக வெறும் தினங்களாய் மட்டுமே பார்க்கின்றோம். குழந்தைகளின் நனவுலக சிந்தனைகளை புறந்தள்ளிவிட்டு

 **ISBN Number:** 978-81-981078-4-8

குழந்தைகள் தினம் கொண்டாடுவதினால் ஒரு பயனுமில்லை. குழந்தைகளைப் போற்றுவதே அந்த தினத்தை கொண்டாடுவதற்கான அடையாளம்.

**தொகுப்புரை**

குழந்தை இலக்கியம் தற்கால இலக்கியங்களில் வளர்ந்து வரும் துறையாக இருப்பினும் அவற்றிற்கான விதை தொல்காப்பியத்தில் விதைக்கப்பட்டுள்ளது. தாய் தன் நாவை அசைத்து குழந்தைகளுக்காக பாடல் பாடிய போதே குழந்தைப் பாடல்களுக்கான சிந்தனை நாட்டுப்புற இலக்கியத்தில் விதைக்கப்பட்டுள்ளது. சங்க காலம், சங்கம் மருவிய காலம், காப்பிய காலம், சிற்றிலக்கிய காலம், தற்காலம் வரையிலான காலகட்டங்களில் குழந்தைகளைப் பற்றிய பதிவுகளை மட்டுமே காண முடிகின்றது. காப்பிய இலக்கியங்களில் காப்பியத் தலைவர்களின் பிறப்புச் செய்திகள் அவர்கள் கல்வி கற்ற நிலைமை ஆகியவை மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. சமய இலக்கிய காலங்களில் கடவுளர்களை குழந்தையாக பாவித்து பாடியிருப்பது அவர்கள் குழந்தைகளின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துகிறது. பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் குழந்தை பருவத்து செயல்பாடுகளை வயது அடிப்படையில் பாகுபடுத்தி காட்டுகின்றன ஆனால் அவற்றில் உள்ள கருத்துக்கள் குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு ஏற்புடையதன்று. தற்காலக் கவிதைகளில் குழந்தைகளின் நிகழ்வு உருவ அமைப்பு எதிர்கொள்ளும்

 **ISBN Number:** 978-81-981078-4-8

சவால்கள் போன்றவை கவிதைகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன

**துணைநூற்பட்டியல்**

[1] அப்துல் ரகுமான். *அப்துல் ரகுமான் கவிதைகள்.* நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை.

[2] அறவாணன், க. ப. *தமிழ்ச் சமுதாய வரலாறு.* சபாநாயகம் அச்சகம், சிதம்பரம்.

[3] சுரேஷ்குமார், ந. *குழந்தைகளும் பொம்மைகளும்,* ஓவியா பதிப்பகம், சென்னை.

[4] செல்வராசு, நா. *பண்டைத் தமிழர் திருமண வாழ்க்கை,* காவ்யா வெளியீடு, சென்னை.

[5] தமிழண்ணல். *தொல்காப்பியம்,* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

[6] திருஞானசம்பந்தர், ச. (உ.ஆ). *தண்டியலங்காரம்,* கதிர் பதிப்பகம், திருவையாறு.

[7] பரிமேலழகர் (உ.ஆ). *திருக்குறள்.* சாரதா பதிப்பகம், சென்னை.

[8] பாரதிதாசன். *இசையமுது.* மணிவாசகம் பதிப்பகம், சென்னை.

[9] பாரதியார். *பாரதியார் கவிதைகள்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை .

[10] மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ). *தொல்காப்பியம்.* உமா பதிப்பகம், சென்னை.

 **ISBN Number:** 978-81-981078-4-8

[11] மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ). *புறநானூறு*. உமா பதிப்பகம், சென்னை.

[12] மாணிக்கனார், அ. (உ.ஆ). *பதினெண்கீழ்க்கணக்கு*. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

[13] முத்தரசன், கு. *பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள்*, தமிழ்சோலை பதிப்பகம், சென்னை.

[14] முத்துக்குமார், நா. '*அ'னா, 'ஆ' வன்னா*. கலைஞன் பதிப்பகம், சென்னை.

[15] ஜெகத்ரட்சகன், (உ.ஆ). *நாலாயிரத்திவ்யப் பிரபந்தம்*. வேமன் பதிப்பகம், சென்னை.

 **ISBN Number:** 978-81-981078-4-8

# 2

# கவிமணியின் குழந்தை பாடல்கள் - பொருட்கட்டமைப்பு

**முனைவர் மூ. கவிதா,** தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீ எஸ். இராமசாமிநாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி. சாத்தூர்.

குழந்தை இலக்கியத்திற்கு முதன்முதல் வித்திட்டவர் பாரதியார். அவருடைய பாப்பாப் பாட்டு, புதிய ஆத்திச்சூடி, முரசு போன்ற பாடல்களில் இப்பண்பைக் காணலாம். பாரதியைப் பின்பற்றி பாவேந்தர் பாரதிதாசனும் ஒரு தாயின் உள்ளம் மகிழ்கின்றது, இளைஞர் இலக்கியம் என்ற இரண்டு நூல்களை இயற்றிக் குழந்தை இலக்கியப் படைப்பின் வளத்தினைப் பெருக்கினார். இவ்விரு கவிஞர்களின் கவிதை மரபினை அடியொட்டிக் கவிமணியால் எழுதப்பட்ட குழந்தை இலக்கியங்கள் சாகா வரம் பெற்றுத் திகழ்கின்றன எனலாம். குழந்தைச் செல்வம் நூலை முதன்மையாகக் கொண்டு கவிமணியின் குழந்தைப் பாடல்களின் பொருட்கட்டமைப்பு குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைய உள்ளது. பாரதியின் குழந்தைப் பாடல்களில் மனம்பறி கொடுத்தவர் கவிமணி என்பதை, **“பாப்பாப் பாட்டிலே – நெஞ்சைப்**


**ISBN Number:** 978-81-981078-4-8

/**பறிகொடுத்தேனடா!** / **சாப்பாடேதுக்கடா!** – ***சீனி*** / **சர்க்கரை ஏதுக்கடா!”** என்று பட்டிக்காட்டான் வாயிலாக வெளிப்படுத்துவதைக் காணலாம். அதனால் தான் நாமக்கல் கவிஞர் கவிமணியின் குழந்தை இலக்கியத்தினைக்,

**கோழி குலவி வரும் கிளி கொஞ்சும்**

**குழந்தை எழுந்து துள்ளிக் களி மிஞ்சும் (மலரும்**

**மாலையும், சிறப்புப் பாயிரங்கள்)**

என்று புகழ்ந்துள்ளார். கவிமணியின் பாடல்கள் தமிழ் மக்களுக்கு கிடைத்த பெரும் செல்வம். திட்டாத அமிர்தம் என்று ரசிக மணி டி. கே. சியும் புகழ்ந்து பேசுகிறார். குழந்தைச் செல்வம் வாய்க்காத இவர் குழந்தைகளின் இன்ப துன்பங்களைப் பாலிலே வடித்தெடுத்த அமுதம் போல் கவிதைகளை பல யாத்துள்ளார். அக்கவிதைகள் யாவும் மலரும் மாலையும் என்ற கவிதைத் தொகுப்பாக வெளிவந்துள்ளது. பெருந்தொகுதிகளாக அவை இருத்தலால், கள் பள்ளிச்சிறுவர் சிறுமியர்கள் எளிதில் பெற்று வாசிக்க இயலாதிருந்தது. கவிமணி அவர்களின் கவிதைகளை மாணவருலகமும் படித்துப் பயனுற வேண்டும் என்பது கருதி, இக்குழந்தைச் செல்வம் இப்பொழுது வெளிவருகிறது எனும் முன்னுரையோடு **குழந்தை செல்வம்** எனும் நூல் பாரி நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. சிறுவர் சிறுமியர்க் கேற்ற

 **ISBN Number:** 978-81-981078-4-8

பாடல்கள் மட்டுமே இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. குழந்தைகள் தாமே விரும்பிக் கற்கும் வண்ணம் அத்தனை எளிமையுடனும் இனிய ஓசையுடனும் இப் பாடல்கள் அமைந்துள்ளன. குழந்தைகள் பாடி நடிப்பதற்கும் இப்பாடல்களில் பல ஏற்றவைகளாகும். குழந்தைப் பாடல்கள், 'மழலை மொழி', 'இயற்கை இன்பம்', 'காட்சி இன்பம்', 'கதைப் பாட்டு', ‘பஞ்சாமிர்தம்' என ஐந்து பகுதிகளாகத் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

‘செந்தமிழ் நாட்டு சிறுவர் சிறுமியர்களுக்கு இந்த நூல் உரியதாய் என்றும் வாழ்கவே’ என்று தம்முடைய கவிதை நூலையே தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்களுக்கு உரிமையாக்கினார் கவிமணி.

**தேனொழுகக் கவிபாடும்**
**தேசிய விநாயகமே!**
**நானுனது கவி பாடி**
**நாடோறும் மகிழுவனே!**
**(குழந்தைச் செல்வம் நூலின் முன்னுரை)**

என்று குழந்தை கவிஞர் அழ வள்ளியப்பா கவிமணியின் கவிதைகளைப் புகழ்ந்து பேசியுள்ளார்.

**குழந்தைப்பருவ நிகழ்வுகள்**

குழந்தைப்பருவ நிகழ்வுகளைப் பத்துப் பருவங்களாகக் காட்சிப் படுத்தியுள்ளதைப் பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகிறோம்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

அப்பருவங்களை எல்லாம் எளிய நடையில் கொஞ்சும் தமிழில் குழந்தைகள் மனம் மகிழும் படி அவருக்கேயுரிய நடையில் கவிமணி வெளிப்படுத்தியுள்ளார்.

**முத்தம் தருதல்**

மழலை மொழி என்னும் தலைப்பில் முத்தம்தா என்பது முதல் பாண்டியாடுதல் முடிய உள்ள 16 பாடல்களும் குழந்தை அனுபவத்தை ஒட்டிய பாடல்கள் ஆகும். பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் உள்ள முத்தப் பருவத்தினை எளிய வார்த்தைகளால் எதுகை மோனையுடன் கவிமணி முத்தம் தா என்று கேட்பது இனிதாக இருக்கிறது

**கண்ணே மணியே முத்தந் தா**
**கட்டிக் கரும்பே முத்தந் தா**
**வண்ணக்கிளியே முத்தந் தா**
**வாசக்கொழுந்தே முத்தந் தாதேனே!**
**பாலே! முத்தந் தா,**
**தெவிட்டாக் கனியே! முத்தந் தா;**
**மானே! மயிலே! முத்தந் தா,**
**மடியில் வந்து முத்தந் தா. (ப. 1)**

குழந்தைகளுடன் வாழ்ந்து, குழந்தைகளுக்கான எளிய இனிய பாடல்களைப் பாடி அளித்து, தமிழ் நாட்டில் குழந்தைகளுக்கேற்ற பாடல்கள் வெளிவருவதற்கு வழிகாட்டியவர் நமது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை


**ISBN Number:** 978-81-981078-4-8

அவர்களே. அவர்களுடைய வழியைப் பின்பற்றி, பலரும் இப்பொழுது குழந்தைப் பாடல்கள் பாடி வருகிறார்கள்.

**தாலாட்டு**

தாலாட்டு இலக்கிய வகை மிகப் பழமையானது. பெரியாழ்வார் ‘தாலே தாலேலோ’ என்று குழந்தைக் கண்ணனைத் தாலாட்டுவதைக் காணலாம். பிள்ளைத்தமிழ் இலக்கணம் தாலப்பருவம் என்று இதனைக் குறிப்பிடும். தாலாட்டுப் பாடல்களைப் பாரதியார் பாடவில்லை. பாரதிதாசன் ஆண் குழந்தை, பெண் குழந்தைகளுக்குத் தனித்தனியே தாலாட்டுப் பாடியுள்ளார். அப்பாடல்களில் இறை மறுப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு முதலான சிந்தனைகள் பரவி இருக்கின்றன. ஆனால், கவிமணியின் தாலாட்டுப் பாடல்களோ குழந்தைகளை உறங்க வைக்கும் பாணியில் மட்டுமே இருக்கிறது.

**முல்லை நறுமலரோ?**
**முருகவிழ்க்குந் தாமரையோ?**
**மல்லிகைப் பூவோ?**
**மருக்கொழுந்தோ? சண்பகமோ? (பா. 3)**
**தெள்ளமுதம் உண்டு,**
**தெவிட்டாக் கனி உண்டு, எம்**
**உள்ளங் குளிர**
**உரையாடும் பைங்கிளியோ? (பா.4)**


**ISBN Number:** 978-81-981078-4-8

**தித்திக்கும் தேனும்,**

**தினைமாவும் கொண்டுன்றன்**

**அத்தை வருவாள்,**

**அழவேண்டாம்; கண்மணியே! (பா.10)**

**மாங்கனியும், நல்ல**

**வருக்கைப் பலாக்கனியும்**

**வாங்கி, உன் அம்மான்**

**வருவார்; அழவேண்டாம்! (பா. 11)**

கண்ணுறங்கு, கண்ணுறங்கு; கண்மணியே! கண்ணுறங்கு... தாய்மார்கள் தாலாட்டும் போது ராசா என்று விளிக்கின்ற மரபு உண்டு. கவிமணி அரசே! என்று விளித்துப் பாடுகிறார்.

**திருப்பள்ளி எழுச்சி பாடுதல்**

குழந்தைகளுக்காக கவிமணி தாலாட்டவும் செய்கிறார் அவர்கள் விழிப்பதற்காகத் திருப்பள்ளி எழுச்சியும் பாடுகிறார் அப்பாடல் பாடுகின்ற பொழுது காலைப் பொழுதின் அருமையையும் பறவை விலங்கு நிலைகளின் இயல்பு நிலையையும் சொல்லிப் பாடங்கள் படிக்க வேண்டும், பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று குழந்தைகளுக்கு அன்றாட கடமையையும் திருப்பள்ளியெழுச்சி வாயிலாக அறிவுறுத்துகிறார் கவிமணி.

**அப்பா! எழுந்திரையா!**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**அரசே! எழுந்திரையா!**

**கொக் கொக்கோ என்று,**

**கோழி அதோ கூவுது பார்! (அரசே எழுந், பா. 1)**

**கா கா கா என்று,**

**காகம் பறக்குது பார்!**

**கிழக்கு வெளுக்குது பார்!**

**கிரணம் பரவுது பார்! (அரசே எழுந், பா. 2)**

**பூ மலர்ந்த ரோஜா**

**புதிய மணம் வீசுது பார்!**

**வந்து வந்து வண்டு**

**வட்டம் சுழலுது பார்! ( அரசே எழுந்,பா.3)**

**கறவைப் பசுவை அதன்**

**கன்று சுற்றித் துள்ளுது பார்!**

**பால் குடிக்க வேண்டாமோ?**

**பழம் தின்ன வேண்டாமோ? (அரசே எழுந், பா. 4)**

**பாடங்கள் எல்லாம்**

**படித்திட வேண்டாமோ?**

**சீக்கிரம் பள்ளிக்குச்**

**சென்றிட வேண்டாமோ? (அரசே எழுந், பா. 5)**

**காலையும் ஆச்சுதையா!**

**கண்விழித்துப் பாரையா" (அரசே எழுந், பா. 6)**

பறவை விலங்குகளைக் கருப்பொருளாகக் கொண்டு பாடுதல், குழந்தைகளுக்கு மிகப்பிரியமாக

 **ISBN Number:** 978-81-981078-4-8

இருக்கின்ற, விளையாடுகின்ற கோழி ,காக்காய் ,கிளி ,கன்று குட்டி, நாய் இவைகளை வைத்து அதனதனுடைய இயல்பையும் அவற்றின் மூலம் குழந்தைகளுக்கு வாழ்க்கைக் கல்வியினையும் கற்றுத் தருகிறார் கவிமணி.

***காக்கை குருவி எங்கள் ஜாதி***

**நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்**" என்று பாடிய பாரதியின் மனோ நிலையைக் கவிமணியும் குழந்தைகளுக்கு ஏற்படுத்துகிறார்.

**காக்காய்! காக்காய்! பறந்து வா**

**கண்ணுக்கு மை கொண்டு வா.**

**கோழீ ! கோழீ! கூவி வா**

**குழந்தைக்கு பூக் கொண்டு வா.**

**வெள்ளைப் பசுவே ! விரைந்து வா**

**பிள்ளைக்குப் பால் கொண்டு வா. (காக்காய், பா. 1)**

வீட்டில் செல்லமாக வளர்க்கும் பிராணிகளுள் நாய் மிகவும் முக்கியமானது. காவல் காப்பதில் வல்லது, நன்றி உடையது என குழந்தை மனதிற்கு ஏற்றவாறு பாடல்களை அமைத்துள்ளார்.

**வீட்டு வாசல் காப்பவன்,**

**வேட்டை யாட வல்லவன்,**

**ஆட்டுக் கிடைப் பாண்டியன்,**

**அன்பு மிக்க தோழன்.**

**உண்ட சோற்றை எண்ணி**


**ISBN Number:** 978-81-981078-4-8

**உயிரும் விடத் துணிபவன்.**

**மண்டலத்தில் நாய்போல்**

**வாய்த்த துணை உண்டோ?**

**தாயில்லாப் பிள்ளைகட்குத்**

**தாய் ஆவாய்; நோயால்**

**தளர்பவர்க்கு மருத்துவச்சி**

**தானாவாய், பசுவே! (நாய், பா. 2)**

சேவல், பெட்டைக்கோழி குறித்தும் தனித்தனியாகப் பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றைக் கற்பிக்கும் போது சேவலுக்குக் கொண்டை உண்டு. அதுதான் விடியற் காலையில் கூவும். பெட்டைக்கோழிக்குக் கொண்டை இல்லை. அதுதான் முட்டை இட்டு அடைகாக்கும். இரைதேட குஞ்சுகளைக் கூட்டிச்செல்லும் .பருந்திடமிருந்து காப்பாற்றும் என்ற கருத்துக்களும் குழந்தையின் மனதில் ஆழமாகவும் பதியும்.

**காலை கூவி எங்களைக்**

**கட்டில் விட்டெழுப்புவாய்;**

**வேலை செய்ய ஏவுவாய்;**

**வெற்றி கொண்ட கோழியே! (கோழி, பா. 3)**

கிளிகளைப் பற்றிப் பாடும் பாடலில் கிளியின் நிறத்தையும் அதள் இயல்பினையும் அப்படியே சொற்களால் காட்சிப்படுத்தும் பான்மையை அறிய முடிகின்றது.

 **ISBN Number:** 978-81-981078-4-8

**பச்சைக் கிளியே! வா வா;**

**பாலும் சோறும் உண்ணவா;**

**கொச்சி மஞ்சள் பூச வா;**

**கொஞ்சி விளையாட வா. (கிளி, பா.1)**

**கவலை எல்லாம் நீங்கவே,**

**களிப் பெழுந்து பொங்கவே,**

**பவழ வாய் திறந்து நீ**

**பாடுவாயோ தத்தம்மா! (கிளி, பா.2)**

**வட்டமாய் உன் கழுத்திலே**

**வான வில்லை ஆரமாய்,**

**இட்ட மன்னர் யாரம்மா!**

**யான் அறியக் கூறம்மா! (கிளி, பா.3)**

**மனனப்பயிற்சி**

குழந்தை வளரும் நிலையில் அக்குழந்தை நன்றாகப் பேசுவதற்கும் பாடுவதற்கும் மனனம் செய்வதற்கும் தாயும் பள்ளி ஆசிரியர்களும் பயிற்சி தருதல் வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்று சொல்லுவது உண்டு. அதற்கேற்றவாறு குழந்தைகளுக்குப் பாடல்கள் வாயிலாகப் இப்பயிற்சியினைக் கொடுக்கும் முகமாகக் கவிமணி பாடலை இயற்றியுள்ளார்.

**தோட்டத்தில் மேயுது,**

**வெள்ளைப் பசு—அங்கே**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**துள்ளிக் குதிக்குது,**
**கன்றுக் குட்டி. (பசுவும் கன்றும், பா. 1)**
**அம்மா என்குது,**
**வெள்ளைப் பசு—உடன்**
**அண்டையில் ஓடுது,**
**கன்றுக் குட்டி. (பசுவும் கன்றும், பா. 2)**
**நாவால் நக்குது,**
**வெள்ளைப் பசு—பாலை**
**நன்றாய்க் குடிக்குது,**
**கன்றுக் குட்டி. (பசுவும் கன்றும், பா. 3)**
**முத்தம் கொடுக்குது,**
**வெள்ளைப் பசு—மடி**
**முட்டிக் குடிக்குது,**
**கன்றுக் குட்டி. (பசுவும் கன்றும், பா. 4)**

இந்தப் பாடலை பாடாத குழந்தைகள் யாருமே இருக்க முடியாது என்னும் அளவிற்கு கவிமணியின் இப்பாடல் மிகவும் புகழ் பெற்றது. இவைதவிர பொம்மை கல்யாணம், எலி கல்யாணம் போன்ற பாடல்களில் பாடல்களில் மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவின் நிலையைப் பிணைப்பைச் சொல்லி சூழலியல் அறிவையும் குழந்தைகளுக்குப் புகுத்துகிறார் கவிமணி.

மேலைநாட்டு அறிஞர்களான ரூசோ, மாண்டிசாரி போன்றோர் குழந்தை கல்வியில் அதிக கவனம்


**ISBN Number:** 978-81-981078-4-8

செலுத்திக் குழந்தைக் கல்வியில் புதிய முறைகளை வகுத்துக் காட்டி யுள்ளனர். ரூசோவின் *எமிலி* என்ற நூல் தான் புதிய முறைகளின் வித்து என்று குறிப்பிடுவர். கல்வி கற்பதில் குழந்தைகள் தான் முதன்மையானவர். மனிதனின் பண்பாடு அல்ல என்பது ரூசோவின் கருத்து. அதாவது குழந்தைகளை மையமாக வைத்து கல்வியைப் புகட்ட வேண்டுமே தவிர பாடப் பொருளை வலிந்து புகட்டக்கூடாது என்பது ரூசோவின் கருத்தாகும். புத்தகங்கள் வாயிலாகப் புகட்டும் கல்வியை விடப் புலன்கள் வாயிலாகப் புகட்டும் கல்வியே மேன்மையானது என்று உளவியலாளர்கள் கூறுவர். ரூசோவின் கருத்தை அடிவொற்றியதாக குழந்தைகளின் மனநிலையை உணர்ந்து இயற்கையோடு கூடிய பாடல்களைக் கவிமணி அவர்கள் வடித்திருக்கிறார் எனலாம்.

**தீபாவளி பண்டிகை**

**தீபாவளி, தைப்பொங்கல் குறித்து இரண்டு பாடல்களைக் கவிமணி இயற்றியுள்ளார்.** தீபாவளிப் பண்டிகையின் போது கதர் ஆடை அணியுமாறு பரிந்துரைக்கும் கவிமணி அந்த ஆடையின் பெருமையினை தொழிலாளி வாயிலாகவும் பேசுகிறார்.

**பண்டிகை தீபாவளிப் பண்டிகையாம் - இந்தப்**
**பாரத நாட்டுக்கோர் பண்டிகையாம்;**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**தண்டிகை மன்னவர், ஏழை எளியவர்,**
**சந்தோஷம் கொண்டாடும் பண்டிகையாம்.**

**(தீபாவளி, பா. 1)**

**ஆண்டிலோர் தீபா வளியாம், அடா! - அதை**
**ஆண்டியும் கொண்டாட வேண்டும்.அடா!**
**தீண்டு துயர்போகும் நாள் இதடா!-உள்ளம்**
**தேடித் தவித்திடும் நாள் இதடா! (தீபாவளி, பா2)**
**பெண்டுகள் பிள்ளைகள் நெய்த கதருடை**
**பீதாம் பரத்தினும் மேலாம், அடா**
**கொண்டாடிப் பண்டிகை நாளில் அணிந்திடில்**
**கோடி கோடிப்புண்யம் உண்டாம். அடா!**

**(தீபாவளி, பா. 6)**

ஆண்டிற்கு ஒருமுறை வருகின்ற தீபாவளிப் பண்டிகையை எப்படிக் கொண்டாடவேண்டும்என்று வலியுறுத்துவதோடு மட்டுமன்றிச் சுதேசி சிந்தனையையும் குழந்தைகளின் மனத்திலே விதைத்துச் செல்கிறார் கவிஞர்.

**காகத்துக்கும் இடுவோம்.**
**உடனிருந்தெல் லோரும்**
**உண்டுமகிழ்ந் திடுவோம்.**

**ஒற்றுமை, உழைப்பு**

சமூகம் சிறப்புடன் திகழ வேண்டுமானால் மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். ஒற்றுமையே

 **ISBN Number:** 978-81-981078-4-8

உயிர்நிலை எனும் கருத்தை குழந்தைகளுக்கு வலியுறுத்தும் கவிமணி தீண்டாமை மற்றும் குலப்பரிவுகள் யாவும் ஒழியவேண்டுமென்றும் பாடுபடுகிறார்.

**ஒற்றுமையாக உழைத்திடுவோம் - நாட்டில்**
**உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்;**
**வெற்றுரை பேசித் திரிய வேண்டாம் - இன்னும்**
**வீணாய்ப் புராணம் விரிக்கவேண்டாம்.**

**(ஒற்றுமை, பா. 1)**

**மன்னுயிர்க் காக முயல்பவரே - இந்த**
**மாநிலத் தோங்கும் குலத்தினராம்;**
**தன்னுயிர் போற்றித்திரிபவரே - என்றும்**
**தாழ்ந்த குலத்தில் பிறந்தோர், அம்மா!**

**(ஒற்றுமை, பா. 2)**

**ஆக்கம் வேண்டு மெனில் - நன்மை**
**அடைய வேண்டுமெனில்,**
**ஊக்கம் வேண்டுமப்பா! - ஓயாது**
**உழைக்க வேண்டுமப்பா! (ஒற்றுமை, பா. 5)**
**ஜாதிச் சண்டையெலாம் - ஓய்ந்து**
**தணிய வேண்டுமப்பா!**
**நீதி நாடெங்கும் - நிலைத்து**
**நிற்க வேண்டுமப்பா! (ஒற்றுமை, பா. 6)**
**உலக மக்களெலாம் - அன்பொடு**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**ஒருதாய் மக்களைப்போல்**
**கலக மின்றிவாழும் - காலம்**
**காண வேண்டுமப்பா. (ஒற்றுமை, பா. 8)**

**கவிஞர்களைப் பாடல்களில் அறிமுகம் செய்தல்**

தமிழ்மூதாட்டி அவ்வை, அரிய மறை நூலாம் எழுதிய திருவள்ளுவர், விருத்தம் என்னும் ஒண் பாவிற்கு உரிய கம்பன், பாரதியார் போன்ற புலவர்களைக் குழந்தைகளுக்குப் பாடல்கள் வாயிலாக அறிமுகம் செய்து வைக்கும் பணியை மேற்கொள்கிறார் கவிமணி. வெவ்வேறு காலங்களில் அவ்வை என்னும் ஒரே பெயரில் வாழ்ந்த புலவர்களை நினைவு கூறும் வண்ணம் ஒரு பாடலில் எடுத்துரைக்கிறார்.

**ஔவைக் கிழவி நம்கிழவி,**
**அமுதின் இனிய சொற்கிழவி;**
**செவ்வை நெறிகள் பற்பலவும்**
**தெரியக் காட்டும் பழங்கிழவி. (ஔவை, பா. 1)**
**நெல்லிக் கனியைத் தின்றுலகில்**
**நீடு வாழும் தமிழ்க்கிழவி;**
**வெல்லற் கரிய மாந்தரெல்லாம்**
**வியந்து போற்றும் ஒருகிழவி. (ஔவை, பா. 1)**
**கூழுக் காகக் கவிபாடும்**
**கூனக் கிழவி; அவளுரையை**
**வாழும் வாழ்வில் ஒருநாளும்**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**மறவோம் மறவோம் மறவோமே! (ஔவை, பா. 4)**

என்றும், திருவள்ளுவரை,

**இம்மை மறுமையின் - பயன்கள்**

**எவருமே யடையச்**

**செம்மை நெறியினை - விளக்கும்**

**தெய்வ நூல் செய்தோன். (திருவள்ளுவர், பா. 1)**

**வழுக்கள் போக்க வந்தோன் - நல்ல**

**வாழ்வை ஆக்க வந்தோன்;**

**ஒழுக்கம் காட்ட வந்தோன் - தமிழுக்கு**

**உயிரை ஊட்ட வந்தோன். (திருவள்ளுவர், பா. 2)**

என்றும், கம்பனை,

**ஆரியம் நன்குணர்ந்தோன் - தமிழின்**

**ஆழம் அளந்து கண்டோன்;**

**மாரி மழைபோலக் - கவியின்**

**மழைபொ ழிந்திடு வோன். (கம்பன்,பா.1)**

**எவரும் போற்றிடவே - தமிழில்**

**இராம கதைபுனைந்தோன்;**

**புவனம் உள்ளளவும் - அழியாப்**

**புகழ் பரந்திடு வோன். (கம்பன், பா. 3)**

கலைவாணியின் அருள்பெற்றுத் தமிழ்த்தாய் செய்ததவத்தால் கம்பன் பிறந்தான் என்றும், பாரதியைப்பற்றி,

**ஊரறிய நாடறிய உண்மை யெல்லாம்**


**ISBN Number:** 978-81-981078-4-8

**ஒருவரையும் அஞ்சாமல் எடுத்து ரைத்தோன்,**
**சீருயரும் தமிழ்மக்கள் செய்த வத்தால்**
**தென்னாடு சிறக்க வந்த சுப்ரமண்ய**
**பாரதியார் பெயர்போற்றி ஏத்து வோமே**
**பாமாலை புனைந்தவற்குச் சாத்துவோமே.**

பாட்டுக்கொரு புலவன் பாரதியையும் கவிஞன் அறிமுகப்படுத்தும் பாங்கு அற்புதமாக உள்ளது.

**உடல்நலம் பேணல்**

சமூக நலம் பேணுவதில் முக்கிய கூறு உடல் நலம் பேணுவது ஆகும். தனிப்பட்டோரின் உடல்நலம் நன்கு அமைந்தால் சமூக நலனும் பொலிவுறும். “நோய்க்கு இடம் கொடேல்” என்பது அவ்வைப் பாட்டியின் அமுதமொழி. கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பது வழிவழியாக வழங்கி வரும் பழமொழிகள். இதனைக் கவிமணி,

**உடலின் உறுதி உடையவரே**
**உலகில் இன்பம் உடையவராம்;**
**இடமும் பொருளும் நோயாளிக்கு**
**இனிய வாழ்வு தந்திடுமோ? (உடல்நலம் பே., ப. 1)**
**சுத்த முள்ள இடமெங்கும்**
**சுகமும் உண்டு; நீ அதனை**
**நித்தம் நித்தம் பேணுவையேல்,**
**நீண்ட ஆயுள் பெறுவாயே. (உடல்நலம் பே., ப. 2)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

என்றும் தூய்மையான காற்றும் நடைப்பயிற்சியும் இன்றி யமையாது என்றும் இனிமையாகக் குழந்தைகளுக்கு எடுத்துரைக்கிறார்.

**காலை மாலை உலாவிநிதம்**
**காற்று வாங்கி வருவோரின்**
**காலைத் தொட்டுக் கும்பிட்டுக்**
**காலன் ஓடிப் போவானே! (உடல்நலம் பே., ப. 3)**

மேலும்,

**ஆளும் அரசன் ஆனாலும்**
**ஆகும் வேலை செய்வானேல்,**
**நாளும் நாளும் பண்டிதர் கை**
**நாடி பார்க்க வேண்டாமே. (உடல்நலம் பே., ப. 4)**

என்னும் அடிகளில் உழைப்பையும் வற்புறுத்துகிறார்.

**கூழை யேநீ குடித்தாலும்,**
**குளித்த பிறகு குடி,அப்பா!**
**ஏழை யேநீ ஆனாலும்,**
**இரவில் நன்றாய் உறங்கப்பா! (உடல்நலம் பே., ப. 5)**

உடல் தூய்மை, ஆடைத் தூய்மையையும் வலியுறுத்துகிறார் கவிமணி. அதுமட்டுமன்றி மீதூண் விரும்பேல் என்பது அவ்வையின் வாக்கு. அற்றான் அளவறிந்துண்க என்பது வள்ளுவர் வாய்மொழி. இதனைக் கவிமணி மிக எளிமையாகப் பாடுகிறார்.

**மட்டுக் குணவை உண்ணாமல்**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**வாரி வாரித் தின்பாயேல்,**
**திட்டு முட்டுப் பட்டிடுவாய்;**
**தினமும் பாயில் விழுந்திடுவாய்!**

**(உடல்நலம் பே., ப. 8)**

பசித்தபின் உண்டால்நோயும் வராது நூறு வயதும் வாழலாம். "வருமுன் நோயைக் காப்பாயே; / வையம் புகழ வாழ்வாயே" என்று கூறி நிறைவாக உடலின் உறுதி உடையவரே, உலகின் இன்பம் உடையவர் என்று குழந்தைகளுக்கு முத்தாய்ப்பான வரிகளைச் சொல்லி பதிய வைக்கிறார்.

**இயற்கை இன்பம்**

இயற்கையைப் பற்றிக் கவிமணி இயற்றிய பாடல்கள் அனைத்தும் பண்பாட்டு உணர்ச்சியைப் பகர்வனவாய் அமைந்துள்ளன எனலாம். கவிமணியின் பாடல்களில் புல் பேசுகிறது. அந்த பசும்புல் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தன் சுயசரிதையைப் பேசுவதாகக் கவிதை இயற்றியுள்ளார்.

**பூமகளின் புன்னகைபோல்**
**பூத்திடு வோமே! - கம்பன்**
**பாமணக்குந் தமிழினைப் போல்**
**பரிமளிப் போமே! (மலர்கள், பா. 1)**
**வண்டின் வரவெதிர் பார்த்துநிற்போம் - நல்ல**
**வாசனை வீதியில் வீசிநிற்போம்;**


**ISBN Number:** 978-81-981078-4-8

**உண்டு களிக்க மது அளிப்போம் - சற்றே**
**உட்காரப் பீடமும் இட்டுவைப்போம்.! (மலர்கள், பா. 2)**
**காயும் கதிரவன் மேனியை நோக்க, உன்**
**கண்களும் கூசிக் கலங்காவோ?**
**நேயம் மிகுந்தவர் காய வருத்தம்**
**நினைப்பதும் இல்லையோ? சொல், அடியே!**

எங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கெல்லாம் இறைவன் இருப்பதாகக் கொள்வது தமிழரது பண்பாடு. அவ்வகையில் இயற்கையைப் பாடாத கவிஞர்கள் யாருமே இல்லை எனலாம். அந்த வரிசையில் வானத்தைப் பார்க்கின்ற கவிமணியின் சிந்தனையோட்டம் விரிவடைகின்றது. அது பாடலாக மலருகின்றது.

**வானம் கறுத்தால் மழை பெய்யும்,**
**மழை பெய்தால் மண் குளிரும்;**
**மண் குளிர்ந்தால் புல் தழைக்கும்,**
**புல் தழைத்தால் பசு மேயும்;**
**பசு மேய்ந்தால் பால் சுரக்கும்.**
**பால் சுரந்தால் கன்று குடிக்கும்;**
**கன்று குடித்து மிஞ்சியதைக்**
**கறந்து கொண்டு வந்திடலாம்;**
**காப்பியில் விட்டுக் குடித்திடலாம். (இயற்கை, பா.1)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

இப்பாடல் குழந்தைகளுக்கு இயற்கை வட்டம் செயல்படுவதைக் காட்சிப்படுத்துகிறது. மேலைநாட்டு கவிஞர்களான வோர்ட்ஸ்வொர்த், வால்ட்விட்மன் ,டென்னிசன் போன்ற கவிஞர்களின் கவிதைகளை, இயற்கையை வருணிக்கும் திறனை திறனாய்வாளர்கள் விதந்து பேசுவது உண்டு. கவிமணியின் கவிதைகளிலும் அத்தன்மையினைக் காணமுடிகின்றது.

**அல்லும் பகலும் அலைந்துவந்தேன் - எங்கள்**
**ஆழி இறைவனைக் காணவந்தேன்;**
**நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்**
**நீண்ட வழிபோக வேண்டும் அம்மா! (ஆறு, பா.1, 2)**

கற்களும் பாறைகளும் அடர்ந்த கடற்கரையில், கடல் கொந்தளிப்பாயிருந்த தருணத்தில், மணலிலே விளையாடிக் கொண்டிருந்த குழந்தை கடலை நோக்கிப் பேசுவது வியப்பிற்குரியது.

**எல்லை அறியாப் பெருங்கடலே! - நீதான்**
**இரவும் உறங்காயோ? கடலே!**
**அல்லும் பகலும் அலைகடலே! - உனக்கு**
**அலுப்பும் இலையோ? கருங்கடலே! (கடல், பா. 1)**

**குதிரைகளின் அவல நிலை**

குதிரைகளின் அவல நிலை குறித்தும் கவிமணி பாடியுள்ளார். வீட்டுப் பிராணிகளாகவும் செல்லப் பிராணிகளாகவும் சிலவற்றை வளர்க்கின்றோம்.


**ISBN Number:** 978-81-981078-4-8

பாலிற்காகப் பசு, எருமைகளையும். செல்லப் பிராணிகளாக நாய், பூனை, கிளிகளையும் வளர்க்கின்றோம். சொந்தப் பிள்ளைகளை விட இப்பிராணிகளைச் செல்லமாகவும் வளர்க்கின்றோம். ஆனால் குதிரைகளைமட்டும் வண்டி இழுக்கவும், சவாரி செய்யவும், போர் தொழிலில் பயிற்றுவிக்கவும் இவற்றுக்காக நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் அந்த குதிரையின் புலம்பலை நாம் செவிமடுப்பதே இல்லை என்று கவிமணி குதிரையின் புலம்பலாகக் கவிதையை யாத்துள்ளார். வால் வெட்டுவதையும் வாயில் கடிவாளம் போடுவதையும் உடம்பிர் சேணமிடுவதையும் குதிரைகள் விரும்பவில்லை,

**வண்டியில் கொண்டெமை மாட்டுகின்றீர் - காலை**
**மாலையெல்லாம் தட்டி ஓட்டுகின்றீர்;**
**நொண்டினா லும்விட்டுப் போகமாட்டீர் - உடல்**
**நோவ அடித்து வெருட்டுகின்றீர்.**

**(குதிரைகள்புலம்பல், பா. 7)**

**ஆழக்குக் காணம் அளித்திடுவீர் - அதற்கு**
**ஆயிரம் வேலையும் இட்டிடுவீர்;**
**ஏழைக் கிரங்கெனும் நீதிமொழி - நீங்கள்**
**ஏட்டில் படித்ததை ஏன்மறந்தீர்?**

**(குதிரைகள்புலம்பல், பா. 9)**

**சித்தம் இரங்கிட வேண்டுகின்றோம் - எம்மை**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**சேஷமமாய்க் காத்திடக் கெஞ்சுகின்றோம்;**
**புத்த முனியருள் போதனையை - என்றும்**
**போற்றுதல் உங்கள் கடனாமே. .**

**(குதிரைகள்புலம்பல், பா. 10)**

குதிரைகள் புலம்பல் எனும் தலைப்பில் கவிமணி அற்புதமாகப் பாடியுள்ளார். விலங்குகளைச் சித்திரவதை செய்வதைக் கூட கவிமணியால் தாங்க இயலாத அவரின் மக்கட் பண்பு பேணும் தன்மை இப்பாடல்களில் வெளிப்படுவதைக் காண முடிகிறது.

**நிறைவுரை**

கவிமணியின் பாடல்களில் படிமங்கள் அமைந்திருப்பதால் பாடல்களைப் பயில்வோர் மனதில் அக்காட்சிதோன்றி கவிதை அனுபவத்தைத் தருகின்றது. எதுகை, மோனைகளின் வாயிலாக எளிய சொற்களால் கவிதையைப் படைக்கின்ற போது நினைவாற்றலும் அதன் காரணமாகக் கருத்து நிலைத்தூண்டல்களும் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றன. கவிமணி பாரதியின் பரம்பரையைச் சார்ந்தவராக இருப்பதால் நடை, கற்பனை, சந்தம் முதலானவற்றிலும் கவிதைப் போக்கிலும் பாரதியைப் பின்பற்றுவதைக் காண இயலுகிறது. உள்ளத்து உள்ளது கவிதை, இன்பம் உருவெடுப்பது கவிதை எனும் கவிமணியின் கவிமொழிக்கேற்ப அவருடைய குழந்தைப் பாடல்கள்


**ISBN Number:** 978-81-981078-4-8

அமைந்துள்ளன. தமிழ்ப்பண்பாட்டிலும் மரபிலும் தோய்ந்த, இனிமை நிறைந்த, உண்மை நிரம்பிய அத்துணைபேருக்கும் இன்பம் அளிக்கக்கூடிய கவிதைகளாய் கவிமணியின் கவிதைகள் விளங்குவதை

**"தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை**
**தினமும் கேட்பது என் செவிப்பெருமை"**

என்ற நாமக்கல்கவிஞரின் கூற்று மெய்ப்பிக்கின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1] நாமக்கல் கவிஞர் கவிமணி. *குழந்தைச் செல்வம்.*
[2] நாமக்கல் கவிஞர் கவிமணி. *குதிரைகள்புலம்பல்.*
[3] நாமக்கல் கவிஞர் கவிமணி. *இயற்கை.*
[4] நாமக்கல் கவிஞர் கவிமணி. *ஆறு.*
[5] நாமக்கல் கவிஞர் கவிமணி. *கடல்.*
[6] நாமக்கல் கவிஞர் கவிமணி. *மலர்கள்.*
[7] நாமக்கல் கவிஞர் கவிமணி. *உடல்நலம் பே.,*


**ISBN Number:** 978-81-981078-4-8

# 3

# சிறார்கள் கதைகளில் சுற்றுச்சூழலியல்

**மு. சுமதி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி,
தமிழ்நாடு, இந்தியா.

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதன் தன்னைச் சுற்றியுள்ள ஐம்பெரும் பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய அனைத்தையும் பாதுகாக்க வேண்டும். மேலும், உயிரினங்கள் என்பது ஆறறிவு உடைய மனிதன் மட்டும் கிடையாது. ஓரறிவுடைய மரம் முதல் மீன்கள், தவளைகள், தேனீக்கள், அணில், காட்டு விலங்குகளான கரடி, சிங்கம், யானை, புலி, குரங்கு போன்றவையும் மண்புழு, பூச்சிகள், பல்லி, ஓணான், பாம்பு, உடும்பு, எலிகள், சில்வண்டு இவ்வாறு பல்வேறு உயிரினங்கள் நம்மைச் சுற்றி வாழ்கின்றன. இவ்வாறு வாழும் உயிரினங்களைப் பேச வைத்து அவர்களோடு அன்பு செலுத்திப் பழகி வாழ்பவர்கள் சிறார்களே. சிறார்களின் உலகத்தில் சுற்றுச்சூழலானது வண்ண மயமாகக் காணப்படும். அவர்களின் கதைகளில் சிறார்களே*

 **ISBN Number:** 978-81-981078-4-8

*கதாநாயகர்களாகவும், புத்திசாலிகளாகவும் இயற்கையைக் காப்பாற்றும் பொதுநல வாதிகளாகவும் காணப்படுவார்கள். சுற்றுச்சூழல் கல்வி என்பது தற்காலத்தில் கல்விக் கூடங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது. சிறார் இலக்கியங்களில் சிறார்கள் வனதேவதையைக் காப்பவர்களாகவும், பூமியைக் காக்கத்தக்க நடவடிக்கை எடுப்பவர்களாகவும் காட்டப்பட்டுள்ளனர் அவற்றைப் பற்றிக் காண்போம்.*

**திறவுச்சொற்கள்:** நெகி - நெகிழி, தொல் - தொல்காப்பியம், புறம் - புறநானூறு, பா.வா.வீ.நே.த.அ. – பாரதி வாழ்ந்த வீடும் நேதாஜி தங்கிய அறையும்.

**முன்னுரை**

சிறார்கள் எனப்படுபவர்கள் சிறுவயதுடைய குழந்தைகள் முதல் பதினேழு வயதுடைய குழந்தைகள் வரை உள்ளவர்கள் குழந்தைகள் மனதில் சமூகத்தைப் பற்றி சிறுவயதிலேயே நல்ல செய்திகளைப் பதித்துவிட்டால் அவர்கள் தன்வாழ்நாள் முழுவதும் தன்னைச் சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்துப் பொருட்களுடனும் நேசமுடன் நடந்து கொள்வார்கள். தீய எண்ணங்கள் வளராமல் தடுக்கப்படும். கதை கேட்பதன் மூலம் மிகச் சிறந்த ஆளுமை உடைய நபர்களாக வலம் வருவார்கள் என்பது உண்மை. சிறார்களுக்காக நிறைய

 **ISBN Number:** 978-81-981078-4-8

கதையாசிரியர்கள் கதை எழுதி வருகிறார்கள். அவர்கள் தங்கள் வயதிலிருந்து இறங்கி சிறார்களின் உலகத்திற்குள் நுழைந்து அவர்களுக்கேற்ற மொழி நடையினை வடிவமைக்கிறார்கள். உதாரணமாக அறம் சிறுகதைத் தொகுப்பினை எழுதிய ஜெயமோகன் அவர்களாலேயே வெள்ளி நிலம் என்ற சிறார் நாவல் எழுதப்பட்டது. இவ்விரண்டு கதைகளையும் எழுதியவர் ஒருவர் தானா என்று நினைக்கத் தோன்றும். மனதளவில் குறைத்துக் சிறார்களுக்கு ஏற்றவாறு நேர்த்தியாகப் படைக்க வேண்டும். அப்போதுதான் சிறார்கள் தொடர்ந்து கதைகளை வாசிப்பார்கள். தொலைக்காட்சி, திறன்பேசி போன்ற மாயவலைக்குள் கிடக்கும் சிறார்களுக்கு வாசிப்புப் பயிற்சியும், தாய்மொழிப் பற்றும், சிந்தனையும் சிறார் இலக்கியத்தின் மூலமாகவே கிடைக்கின்றது. சிறுவயது முதல் வாசிக்கும் சிறார்களே நிறையக் கதைகளைக் கூறுகிறார்கள். எனவே சிறார் இலக்கியம் என்பது இச்சமூகத்திற்கு இன்றியமையாதது.

**சுற்றுச்சூழலியல் - விளக்கம்**

உலகில் வாழும் உயிரினங்களைப் பாதுகாப்பது இயற்கையை அழிவிலிருந்து மீட்டெடுப்பது நம் ஒவ்வொருவரின் கடமை ஆகும். இதனை,

> **சுற்றுச்சூழலில் மனிதனின் பங்கு மிக முக்கியமானது ஆகும். மனிதனின் சொகுசான**

 **ISBN Number:** 978-81-981078-4-8

> **வாழ்க்கை சுற்றுச்சூழலைப் பாதிக்கிறது. மற்ற விலங்குகளுடன் ஒப்பிடும்போது மனிதனே சுற்றுச்சூழலைக் கெடுப்பவனாக இருக்கிறான். மனிதன் நீண்ட காலமாகவே இயற்கை வளங்களைத் தன்னுடைய சுயநலத்திற்காகச் சுரண்டி வருகிறான். இவன் தன்னுடைய தேவைக்கு மீறி இயற்கையைப் பயன்படுத்துகிறான். இதன் காரணமாக சுற்றுச்சூழல் சீர்குலைந்து போகிறது. (ஏற்காடு இளங்கோ, சுற்றுச்சூழல் ஒரு பார்வை, ப. 1)**

என்ற இளங்கோவின் வார்த்தைகளின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இதனைப் பகைவி என்ற சிறார் இலக்கிய நாவல் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. நாளுக்கு நாள் தன் சக்தியை அதிகரித்துக் கொள்வதற்காக நெகி என்ற ஓர் அரக்கி திட்டமிடுகிறார். அதனால் காட்டு விலங்குகளின் சக்திகள் அனைத்தையும் பறித்துக் கொள்கிறாள். வன தேவதையையும் சிறைப்படுத்தி வைக்கிறாள். காட்டிற்குள் வழிதவறி வந்த எட்டுவயது சிறுமி சாரா என்பவளும் அரக்கியாள் ஆட்கொள்ளப்படுகிறாள். யானையின் தும்பிக்கையையும், கழுகுகளின் சிறகினையும், காண்டாமிருகம், காட்டெருமையின் கொம்பினையும், குதிரைகளின் ஓடும் சக்தி, பல்லிகளிடமிருந்து சுவர் ஏறும்


**ISBN Number:** 978-81-981078-4-8

சக்தி, தேனீக்களின் கொட்டும் சக்தி, வௌவால்களின் தலைகீழாய்த் தொங்கும் சக்தி, இரவில் விழித்திருக்கும் சக்தி, டிராகனின் நெருப்பு உமிழும் சக்தி, வானில் பறக்கும் சக்தி, சாராவின் ஆறாவது அறிவு என்று அனைத்தையும் பறித்து விடுகிறாள்.

இறுதியில் நெகி என்ற சூனியக்காரியின் முழுப்பெயர் 'நெகிழி' என்று கதையாசிரியர் கதைக்குள் ஒரு வறளைவ வைக்கிறார். நெகியை சாரா அழித்தபின் அவள் பின்வருமாறு கூறுகிறாள்.

> **நான் என்னோட பழைய உருவத்தைத் தூக்கி வீசிட்டேன். வேற வடிவத்துல உங்க உலகத்துல வர்றேன். ஏற்கனவே என் வாரிசுகள் உங்க உலகத்துல எல்லா எடத்துலயும் தூங்கிக்கிட்டு இருக்காங்க. அவங்களயெல்லாம் முழிக்கவெச்சி, அவங்க மூலமாவே பஞ்சபூதங்களை அடக்குவேன். நிலத்தை மாசுபடுத்துவேன். நீர் நிலைகளைக் கெடுத்து, அங்க வாழும் உயிரினங்களைக் கொல்வேன் பிரபஞ்சத்தையே அழிப்பேன். (பகைவி, துரை ஆனந்த் குமார், ப. 86)**

நெகிழி என்பது உண்மையிலேயே அரக்ககுணம் வாய்ந்ததாகும். நெகிழியை அரசு தடை செய்திருந்தாலும் அவை மக்களின் பயன்பாட்டில் இரண்டறக் கலந்து சுற்றுப்புறச் சூழலை அழிப்பதில் முதல் இடத்தில்

 **ISBN Number:** 978-81-981078-4-8

உள்ளது. அரசாங்கம் நெகிழியைப் பயன் படுத்துபவர்களுக்கு தண்டனையாக பணம் வாங்குகிறது. அப்படி இருந்தும் மக்கள் நெகிழியைப் பயன்படுத்துகின்றனர். பிளாஸ்டிக்குகள் எளிதில் மட்குவதில்லை. பொதுவாக பிளாஸ்டிக் மட்குவதற்கு 1000 ஆண்டுகள் ஆகின்றன. நெகிழியை ஆங்காங்கே தூக்கி எரிந்து செல்வதால் மண்ணின் வளம் மற்றும் நீர்நிலைகளின் தன்மை பாதிப்புக்குள்ளாகின்றன. குறிப்பாக கால் நடைகள் நெகிழியை உண்டு இறந்து விடுகின்றன. எனவே மக்களாகிய நாம் நெகிழியை முதலில் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். குழந்தைகள் என்பவர் நம் நாட்டின் எதிர்காலத் தூண்கள். ஒன்பது வயது சிறார்கள் படிக்கும் பகைவி என்ற நாவலில் ஆசிரியர் நெகிழி ஒரு அரக்கி என்று சித்தரித்து கதையை அழகாக கொண்டு சென்றுள்ளார். நெகிழியை அழிக்க வேண்டும் என்பதை ஆசிரியர் கதையில் பின்வருமாறு கூறுகிறார்.

> **மக்களிடம் நெகிழி பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். நெகிழியைத் தவிர்க்கச் சொல்லித்தர வேண்டும். எல்லா டிராகன்களையும் இங்கு வரவழைத்து, பெரிய பெரிய ஊது உலை, ஃபர்னல் அடுப்பு என அவற்றையும் வடிவம் மாற்றி நெகிழியை எரித்து, மறு சுழற்சி செய்து**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**கொண்டே இருக்க வேண்டும். பஞ்சபூதங்களிடம் நெகிழி சென்று தேங்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். (பகைவி, துரைஆனந்த் குமார், ப.87)**

உலகத்தைக் காக்க வந்த தேவதை சாரா என்று கூறுகிறார்.

**சுற்றுச்சூழல் மேலாண்மை**

சிறார் இலக்கியங்களில் 'குட்டியானை ஜோ' சிறுகதைத் தொகுப்பில் காட்டில் வாழும் மிருகங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கதை கூறியுள்ளார் கதை சொல்லி கவிதா அத்தை அவர்கள். அவரின் கதையில் சுற்றுச்சூழல் மேலாண்மை காணப்படுகிறது. "சுற்றுச்சூழலைப் பாதுகாக்க, அதனை மேம்படுத்த ஒவ்வொரு மாநிலமும் முயல வேண்டும். காட்டு வளத்தையும், வன உயிரினத்தையும் அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 51 ஏ-இன்படி சுற்றுச்சூழலைக் காத்தல் இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இயற்கை வளங்களான காடுகள், நீர்நிலை ஆதாரங்கள், விலங்கினங்கள் போன்ற அனைத்தையும் காக்க வேண்டும் என்பதற்காக பல சட்டங்களை இயற்றியுள்ளது. **"வன உயிரின பாதுகாப்புச் சட்டம் 1972; வனப் பாதுகாப்புச் சட்டம் 1980"**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**(சுற்றுப்புறச்சூழல் கல்வி, ப. 105)** சுற்றுப்புறத்தில் உள்ள உயிரினங்கள் படும் துன்பத்தை குட்டியானை ஜோ என்ற சிறுகதையில் குழந்தைகளுக்குப் புரியும் வகையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

ஜோ என்பது ஒரு குட்டி யானை. அது தன் தாயை விட்டு வேகமாக ஓடுகிறது. அப்போது, "ஏ ஜோ அந்தப் பக்கம் ஓடாதே என்றபடி பதறித்துடித்த அம்மா விரைந்து வந்து தன் தும்பிக்கையால் ஜோவை இழுத்துப் பிடித்தது. அங்கே காட்டுப் பகுதியை மனுசங்க வளைச்சிக்கிட்டு நம்ம நடமாட்டத்தைத் தடுக்க மின்வேலி அமைச்சிருக்காங்க. அந்த கம்பி நம்ம மேலே பட்டா உயிரே போயிடும்." என்று பின்னாடியே ஓடி வந்த அண்ணன் கிட்டு பதட்டத்துடன் கூறியது. (கதை சொல்லி கவிதா அத்தை, குட்டியானை ஜோ, ப. 33) சுற்றுலா என்ற பெயரிலும் மனிதர்கள் காடுகளை அழித்துக் கொண்டு, அங்கு இருக்கும் வனவிலங்குகளுக்கு துன்பத்தை ஏற்படுத்தி விட்டு நீங்குவார்கள் என்பதையும், இக்கதை எடுத்துக் கூறுகிறது.

> **மனுசங்க காடுகளுக்கு வருவதும், கேளிக்கைகளில் ஈடுபட்டு மதுபாட்டில் உடைச்சி வீசுறதும் இப்போதெல்லாம் வாடிக்கை ஆயிடுச்சு என்று அம்மா கவலையுடன் சொல்ல ஆரம்பித்தது. உண்மைதான். அந்த கண்ணாடித்**

 **ISBN Number:** 978-81-981078-4-8

> **துண்டுகள் நம்மலோட பாதங்களைக் குத்திட்டா அவ்வளவுதான். புண்ணாகி, சீழ் பிடிச்சு தாங்க முடியாத வலியும் உயிர்போகும் சூழலும் ஏற்பட்டுவிடும் என்று வேதனையுடன் சொன்னது அப்பா. (கதைசொல்லி கவிதா அத்தை, குட்டியானை ஜோ, ப. 34)**

யானைகளின் காலில் பீர் பாட்டில்கள் குத்தினால் அவை பெரிதும் பாதிப்படையும் என்பதைப் பற்றி ஜெயமோகன் அவர்கள் யானை டாக்டர் என்ற சிறுகதையில் கூறியுள்ளார். இதனை, “யானையின் காலில் பாதி பீர் புட்டி ஒன்று முழுமையாக உள்ளே ஏறியிருந்தது. அதைச் சுற்றி சீழ்கட்டி சீழில் புழு வைத்து சிறு தேன் கூடு போல பொருக்கோடியிருந்தது. கத்தியால் டாக்டர் கே அந்தப் பொருக்கை வெட்டியதும் பெரிய தயிர்க் கலயம் உடைந்தது போல சீழ் வெளியே கொட்டியது. தேன்கூடு போல சிறிய துறையறைகளுக்குள் வெண் புழுக்கள் நெளிந்தன. டாக்டர் அந்த சீழ்பட்ட சதையை முழுக்க சிறிய கோடாலி போன்ற கருவியால் வெட்டி எடுத்தார். புழுக்கள் என் கைகளில் ஏறின. அவற்றை சுண்டி எறிந்தேன். மொத்த சீழையும் வெட்டி வீசியபின் பீர்க் குப்பி ஆழப்பதிந்திருந்த சதையை கத்தியால் அறுத்து எடுத்து வீசி காயத்தை நன்றாக விரித்து புட்டியை உருவி எடுத்தார். ஆச்சரியமாக

 **ISBN Number:** 978-81-981078-4-8

இருந்தது. கிட்டத்தட்ட என் கையளவு பெரிய புட்டி" (யானை டாக்டர், ஜெயமோகன், ப. 45-46) ஆறறிவு படைத்த மனிதர்கள் செய்யும் தவறுகளை சிறார்களுக்கு எடுத்துக் கூறி எதிர்காலத்தில் அவர்கள் தவறு செய்யாமல் இருக்க அழகாக கதை வடிவமைத்துள்ளனர்.

**பூச்சிக்கொல்லியும் இயற்கை உரமும்**

பூச்சிக்கொல்லியால் நிலம், பூச்சிகள் போன்றவை பாதிப்படைகின்றன என்பதை பாரதி வாழ்ந்த வீடும் நேதாஜி தங்கிய அறையும் என்ற சிறுவர் கதைத் தொகுப்பில் 'மண்புழு மாயாக்கா' என்ற கதையில் ஆசிரியர் கதை கூறியுள்ளார். மண்புழு வினோதினியிடம் பின்வருமாறு தன்னைப் பற்றி அறிமுகம் செய்து கொல்கிறது.

> **எங்களை எல்லாரும் மண்புழுன்னும், மழைப்புழுக்கள்னும் சொல்வாங்க. சித்த மருத்துவத்திலே எங்களை பூமி வேர், நாங்கூழ் புழன்னும் சொல்வாங்க. நாங்க வளைத்தசை உருளைப் புழுக்கள் அப்படீங்கிற தொகுதியைச் சேர்ந்தவங்க. எங்க சாப்பாடு தாவரக் கழிவுகள் தான். அதைத் தின்னு நாங்கள் வெளியேத்தும் செறிமானக் கழிவுகளே இந்த மண்ணை வளப்படுத்துது. அதுமட்டுமில்லே, இந்த மண்ணும் மிருதுவா மாறுது. அதனால மண்ணில்**

 **ISBN Number:** 978-81-981078-4-8

> **காற்றோட்டமும் நீரும் அதிகமாக தங்கி, மரங்கள், செடிகளுக்குத் தேவையான நீர் கிடைக்குது. எங்களோட சிறப்பே எங்கள் உடலமைப்புதான். எங்கள்ல மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இனங்கள் இருக்கு. இந்த மண்னோட வளத்திற்கும், விவசாயத்திற்கும் பேருதவியா இருக்கிற நாங்க இப்போதெல்லாம் பயந்து பயந்து வாழ்றோம். என்றது மாயாக்கா (மு. முருகேஷ், பா. வா. வீ. நே. த. அ., பக். 30-31)**

விவசாயத்திற்கு உற்ற நண்பர்கள் இயற்கை உரங்கள், மண்புழுக்கள் போன்றவை. இதனை விட்டு விட்டு தற்போது பூச்சிக்கொல்லியை அதிகமாக புழங்குகிறார்கள் விவசாயிகள். இதனை, **"நம்ம நாட்டிலே விவசாயத்திற்கு ரொம்ப அதிக இரசாயன உரங்களைப் பயன்படுத்துறாங்க. இந்த இரசாயன உப்புக்கள் எங்க மேலே பட்டா, நாங்க செத்துப் போயிடுவோம். ஒரு வருசத்திற்கு மூவாயிரத்து முந்நூறு கோடி கிலோ யூரியா இந்த நிலத்துல போடப்படுது. இவ்வளவு யூரியாவைப் போட்டா நாங்க எப்படி வாழ்றது? அதே மாதிரி விஷத்தன்மையுள்ள பிளாஸ்டிக் கழிவுகளையும் மண்ணிலே போடுறாங்க. அதுவும் எங்களை அழிக்கிறது" (மு. முருகேஷ், பா. வா. வீ. நே. த. அ. ப. 32)** என்று

 **ISBN Number:** 978-81-981078-4-8

மண்புழு மாயாக்கா அழுது கொண்டே வினோதினி என்ற தனது தோழியிடம் கூறுகிறது.

> **பூச்சிக் கொல்லிகள் என்பது பூச்சிகளை மட்டும் தான் கொல்லும், மற்றவற்றுக்கு பாதிப்பில்லை என்கிற நம்பிக்கை பலரிடம் உள்ளது. உண்மையில் பூச்சிக் கொல்லிகள் எல்லா உயிரினங்களுக்குமே பாதிப்பை ஏற்படுத்துபவை. பூச்சிக் கொல்லி மருந்துகள் உயிரினங்களின் கொழுப்புத் திசுக்களில் ஊடுருபவை. இவற்றின் எச்சங்களை நாம் காற்று, நீர், மண் என யாவற்றிலும் காணமுடியும். மனிதன் மட்டுமல்லாமல் அரியவகைக் கழுகுகள், மயில்கள், மீன் இனங்கள், விவசாயத்திற்கு உதவும் பூச்சிகள், தேனிக்கள் என எல்லாமே பலியாகின்றன. நீர், உணவு, பால், இறைச்சி போன்ற அனைத்துப் பொருட்களிலும் தேவைக்கு அதிகமாகப் பூச்சிக் கொல்லிகள் இருக்கின்றன. (சுற்றுச்சூழல் ஒரு பார்வை, ஏற்காடு இளங்கோ, ப. 138)**

இயற்கை உரங்களைப் பயன்படுத்தாமல் பூச்சிக்கொல்லி மூலம் உணவினை செய்வதன் மூலம் பசுவின் பால், தாய்மார்களின் தாய்ப்பால் போன்றவற்றிலும் பூச்சிக் கொல்லியின் பாதிப்பு காணப்படும். இதனால்,

 **ISBN Number:** 978-81-981078-4-8

மலட்டுத்தன்மை, கருச்சிதைவு, புற்றுநோய், தோல் வியாதி போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன. ஓரறிவு முதல் ஐந்தறிவு உள்ள உயிரினங்கள் இயற்கையைப் பாதுகாக்கின்றன. மனிதன் தான் சுற்றுச்சூழலை மாசு அடையச் செய்கிறான் என்பதை சிறார் கதைகள் அறிவிக்கின்றன.

தொல்காப்பிய நூற்பாக்கள் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த வாழ்க்கையையே பகர்கின்றன. கருப்பொருளில்,

**தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப**

**(தொல், இரா. இளங்குமரனார், ப. 20)**

என்று மரம், புள் போன்றவற்றைக் கூறுவதிலிருந்து மனித வாழ்வானது இயற்கையைப் போற்றி வாழ்வதாகும் என்பதை உணர வைக்கிறது. இயற்கையானது மிகப்பெரிய ஐந்து ஆற்றல்களை உடையது என்று புறம் இரண்டாவது பாடல் கூறுகிறது. இதனை,

**மண் திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும், என்றாங்கு**


**ISBN Number:** 978-81-981078-4-8

**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல. (புறம், கு.வெ. பாலசுப்பிரமணியன், ப. 3)**

என்ற பாடலின் மூலம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நமது மக்கள் அணுக்களால் செறிந்த நிலத்தையும், நிலத்தின்கண் ஓங்கியிருக்கும் வானம், வானளவு பொருந்தித் தடவி நிற்கும் காற்று, காற்றினால் பெருகும் தீ, தீயுடன் மாறுபட்ட நீர் என்று ஐந்து வகையான பெரிய ஆற்றல்களை உடையது இயற்கை என்று சுற்றுச்சூழல் பற்றிய சிந்தனையை விதைத்துள்ளது. அப்படிப்பட்ட இயற்கையைப் போற்றிப் பாதுகாக்காமல் சீரழித்துக் கொண்டிருக்கிறோம்.

**தொகுப்புரை**

நெகிழி எனப்படுபவை ஆயிரம் ஆண்டுகள் ஆன பின்பே மட்கும் தன்மையுடையது. நெகிழிகளால் நீர்நிலைகள் மாசுபாடு அடைகின்றன. வாறுகாலில் இடுவதால் நீர்க்கட்டி, தேங்கி கொசுக்கள் உற்பத்தி ஆகின்றன. டெங்கு மலேரியா போன்ற கொடிய வியாதிகள் வர ஏதுவாகிறது. கால்நடைகள் நெகிழியை உண்டு இறக்கின்றன. நெகிழியில் உணவுப் பொருளை வாங்கிச் சாப்பிடுவதால் பல்வேறு நோய்களின் தாக்கம் ஏற்படும். நெகிழிக்குப் பதில் மக்கள் மஞ்சள் பை போன்றவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.


**ISBN Number:** 978-81-981078-4-8

நெகிழியை எரிப்பதால் காற்றும் மாசுபாடு அடையும். புதைத்தால் மண் பாதிப்படையும்.

காட்டில் வாழும் உயிரினங்களைக் காப்பது நமது கடமை ஆகும். யானையின் தும்பிக்கை, யானையின் சாணம் போன்றவை காட்டின் வளமைக்குக் காரணம் ஆகும். மனிதர்கள் மின்வேலி அமைத்தல், பீர் பாட்டில்களை நொறுக்கிப் போடுதல் போன்ற தீய செயல்களைச் செய்வதன் மூலம் காட்டில் வாழும் உயிரினம் அழியும். பின் காடு அழியும். புவி வெப்பமடைதல் காரணமாக மனிதர்கள் அனைவரும் அழிவர். பிற உயிர்களைப் பாதுகாப்பதன் மூலமாகவே மனித இனத்தைக் காக்கமுடியும்.

இயற்கையான மண் உரங்களைப் பயன்படுத்தி பூமித்தாயைப் பாதுகாக்க வேண்டும். மனிதன் செயற்கை உரம் கலந்து பூமியை மலடாக்கினால் பின் அவனும் மலடாவான். பூமியை ஆள வாரிசின்றி அனைவரும் நோயால் மடிந்து போவார்கள்.

மாயாஜாலக் கதைகள், தேவதைக் கதைகள், பேய்க் கதைகள், துப்பறியும் கதைகள் என்று சிறார் கதைகள் பல்வேறு வடிவங்களில் இருந்தாலும் தற்காலத்தில் சிறார்களுக்கு இயற்கையின் மீது அன்பும், அறிவியலும் கலந்து சிறுகதைகள் எழுதப்படுகின்றன. நாளைய உலகம் இன்றைய சிறார்களின் கைகளில்

 **ISBN Number:** 978-81-981078-4-8

உள்ளதை மனதில் கொண்டு துரை ஆனந்த் குமார், கதை சொல்லி கவிதா அத்தை, மு.முருகேஷ் போன்ற ஆசிரியர்கள் சிறார் கதைகளில் சுற்றுச்சூழலியல் பற்றி சிந்தனைகளை அழகாக விதைத்துச் சென்றுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**துணைநூல் பட்டியல்**

[1] துரை ஆனந்த்குமார். *பகைவி சிறார் நாவல்*. வம்சி புக்ஸ், முதற்பதிப்பு, டிசம்பர், 2022.

[2] *குட்டி யானை ஜோ சிறார் சிறுகதைகள், கதை சொல்லி கவிதா அத்தை*, வம்சி புக்ஸ், 2023.

[3] ஜெயமோகன். *யானை டாக்டர்*. ரிதம் வெளியீடு, 2022.

[4] மு.முருகேஷ். *பாரதி வாழ்ந்த வீடும் நேதாஜி தங்கிய அறையும் சிறுவர் கதைகள்*. முதற்பதிப்பு, 2023.

[5] கு.வெ. பாலசுப்பிரமணியன். *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2004.

[6] தொல்காப்பியம் பொருளதிகாரம், நான்காம் தமிழ்ச் சங்கம் வெளியீடு, முதற்பதிப்பு, 2018.

[7] இரா. இளங்குமரனார் & கோ. பெரியண்ணன். *சுற்றுப்புறச் சூழல் கல்வி*. வனிதா பதிப்பகம், 2018.

[8] ஏற்காடு இளங்கோ. *சுற்றுச்சூழல் ஒரு பார்வை*. சாரதா பதிப்பகம், 2012.

 **ISBN Number:** 978-81-981078-4-8

# 4

# பாரதியார் சிறார்களுக்குத் தந்த *பாப்பா பாட்டு*

**முனைவர் பி. ஸ்ரீதேவி**, தமிழ்த்துறைத் தலைவர் (சுயநதி), ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.

## ஆய்வுநோக்கம்

*சிறார் இலக்கியங்களில் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கும் பாரதியாரின் பாப்பா பாட்டு, கவிதையில் புலனாகும் செய்திகளை எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது. சிறிய வயதிலேயே பசுமரத்து ஆணி போல பதியக்கூடிய செய்திகள் யாவும் பாரதியாரின் ஒரு பாடலில் இடம்பெற்று இருக்கிறது. பாரதியார் பாடிய பாப்பா பாட்டு அதில் கடவுளேஅன்பு, நாட்டுப்பற்று, பிற உயிர்கள் மீது கொண்டிருக்க வேண்டிய அன்பு, தமிழ்ப் பற்று, சாதிய எண்ணம் இல்லாது மேலோர் யார் என்கின்ற பாரதியின் உன்னதமான கருத்து. இவை யாவும் குழந்தைகள் அறிந்து கொண்டு அதன் வழி நடப்பது, பின்னாளில் சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு அடிகோலாக இருக்கும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.*

 **ISBN Number:** 978-81-981078-4-8

**திறவுச்சொற்கள்:** பாரதியார், சிறார், *பாப்பா பாட்டு.*

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் யாவும் கடல் போன்றது. அதன் வீரியமும், வளர்ச்சியும் அதன் போக்கும் மாறிக்கொண்டே இருக்கும். அலைகள் ஒன்று போலவே அடுத்தடுத்து வருவதாக இருந்தாலும் ஒவ்வொன்றிற்கும் சிறு மாறுபாடு இருப்பது போல, ஒரே வகையான இலக்கியங்கள் பல வகைகளாகத் தோன்றினாலும், ஒவ்வொன்றிற்கும் அதன் படைப்பாளரின் சிந்தனை, நடைநயம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு சில சில மாறுதல்கள் இருக்கத்தான் செய்கிறது.

**தமிழில் சிறார் இலக்கியம்**

ஆரம்பக் காலகட்டங்களில் சிறார் இலக்கியங்கள் என்று தனியாக எதுவும் இல்லை என்றாலும், குழந்தைகளுக்காகப் பாடப்பட்ட பாடல்கள் வாய்மொழிக் காலத்தில் இருந்து இன்று வரையிலும் அதிகம் காணப்படுகிறது. சிறார் இலக்கியம் பெரும்பாலும் குழந்தைகளுக்கு அறத்தை போதிக்கின்றன.

> **இந்திய மொழிகளில் தமிழ் மொழியில் மட்டும் தான் சிறார் இலக்கியம் மிகப்பெரும் அளவில் விளங்கி வருகிறது. 16-ஆம் நூற்றாண்டில் அவ்வையார் தந்த 'ஆத்திச்சூடி' குழந்தை**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**இலக்கியத்தில் முதல் நூல் என்பதுடன் அவனைத் தொடர்ந்து அவருடைய கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, கல்வி ஒழுக்கம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தொடர்ச்சியாக அதிவீரராம பாண்டியர் தந்த 'வெற்றி வேட்கை, உலகநீதி',கவிமணியின், 'மலரும் மாலையும்' பாரதியின் 'பாப்பா பாட்டு', பாரதிதாசனின் 'இளைஞர் இலக்கியம்' சிறார் இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்கின்றன. (தமிழில் சிறார் இலக்கியம், பக்: 8 -9)**

**12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையாருக்கு முன்பே 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் தமது ஐந்தாம் திருமுறையில் (97 ஆம் பதிகம்) உயிரெழுத்துகளையும், மெய்யெழுத்துகளையும் முதலாக வைத்துப் பாடல்களை இயற்றியுள்ளார் என்ற செய்தியும் இங்கு அறியதக்கதாகும். இவ்வகையில் ஔவையாருக்கு வழிகாட்டியாக அமைந்தவர் திருநாவுக்கரசராவார். (தமிழறிஞர் அடிகளாசிரியர், பக்: 2-3)**

அதனைத் தனியாகப் பிரித்துக் காட்ட இயலாத அளவிற்கு அவை இலக்கியங்களோடு ஒன்றிணைந்து காணப்பட்டது.

 **ISBN Number:** 978-81-981078-4-8

**பாரதியாரின் *பாப்பா பாட்டு***

பாரதியாரின் பாப்பா பாட்டும் அந்த வகையில் சிறார் இலக்கியம் என்று சொல்லப்படாத, சிறுவர்களுக்காக அவர்களின் நேர்த்தியான வளர்ச்சிக்காக வடிவமைக்கப்பட்ட ஒப்பற்ற ஒரு பாடலாக அமைந்துள்ளது. ஒரு குழந்தை எந்த நேரத்தில் எந்த விதமான உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும், எப்படி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும், என்பதை அறிவுப்பூர்வமாக குழந்தைக்கு அமுதம் போல எடுத்துரைத்திருக்கிறார் பாரதியார் .

நாட்டு விடுதலைக்காகத் தன் வாய்மொழியாலே, அறிவு என்னும் ஆயுதம் கொண்டு பேனாவால் தீட்டிய போர் முழக்கத்தை, மக்களின் சிந்தையில் ஏற்றி அவர்களின் வீரவாளை, நெஞ்சில் வைராக்கியம் என்கின்ற உணர்வாக எழுப்பிய பாரதி தான், சுதந்திரச் சிந்தனை ஒவ்வொரு மனிதனுக்கும் எவ்வளவு இன்றியமையாததோ அதேபோல், ஒரு குழந்தையின் குழந்தைப் பருவம் இன்றியமையாதது என்று உணர்ந்தமையால் பாப்பா பாட்டு என்ற ஒன்றை எழுதி இருக்கிறார் .அவர் தன் குழந்தைக்காக எழுதியிருந்தாலும் குழந்தைகள் யாவுமே ஒன்றுதான், அவை இந்தச் சமுதாயத்தை எப்படி எதிர் நோக்க வேண்டும் என்கின்ற

 **ISBN Number:** 978-81-981078-4-8

ஒப்பற்ற சிந்தனை அவர் பாடல் முழுவதுமாக வெளிப்பட்டு நிற்கிறது.

குழந்தைகள் என்றால் ஓய்ந்திருக்கக் கூடாது. ஓடி விளையாடிக்கொண்டே இருக்க வேண்டும். அதேபோல் தனியாக இருந்து விளையாடுவது என்பதை தவிர்த்துக் கூடி விளையாட வேண்டும் என்கின்ற சமத்துவ நிலையை எடுத்துரைக்கிறார். இன்னொரு குழந்தையை வையக்கூடாது என்பதில், வைதல் என்பது பேச்சு நடையாக இருக்கிறது. இயல்பாக இந்தப் பாடலை குழந்தைக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

**சின்னஞ்சிறு குருவி போலே- நீ**
**திரிந்து பறந்து வா பாப்பா!**
**வண்ணப் பறவைகளைக் கண்டு- நீ**
**மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா! (பாப்பா**
**பாட்டு கவிதை, ப: 196)**

வளர்ந்த பின்பும் மனதை குழந்தையாகவே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் ஆன்மீகத்தின் பெரும் சாரமாக உள்ளது. ஆக குழந்தைப் பருவத்திலேயே குழந்தை ஒவ்வொரு நிமிடமும் இயற்கையை அனுபவிக்கவும், அதனைக் கண்டு மகிழவும் வேண்டும் என்கின்ற தத்துவத்தை எழுதியிருக்கிறார்.

குருவி எங்ஙனம் பறந்து கொண்டே இருக்கிறது. அதுபோல, குழந்தைகளும் ஓரிடத்தில் முடங்கிக் கிடப்பது

 **ISBN Number:** 978-81-981078-4-8

என்பது ஆகாத ஒன்றுக சிறகை விரித்துப் பறக்கும் குருவி போல, குழந்தைகள் எந்நேரம் உலாவித் திரிந்து விளையாடுவது தான் அவர்களின் உடலுக்கும் மனதிற்கும் இனிமையானது என்பதை எடுத்துரைத்திருக்கிறார். **"பாரதியாரே காக்கைக் குருவிகளுக்கு சமையலுக்காக வைத்திருந்த அரிசியை எடுத்துப் போட்டு விடுவாராம். இவரைப் போலவே பறவைகளிடம் குழந்தைகள் அன்பாக இருக்கவேண்டும் என்கிறார்." (பாரதியும் பாப்பாவும், ப. 33)**

கோழிகள் ஒன்றினை ஒன்று கொத்தித் திரியும். ஆனாலும் அதையும் கூட்டி விளையாடும் காக்கைகள் பிறரை ஏய்த்துத் திருடும், அதற்கும் இறக்கப்பட வேண்டும் என்கின்றார். இங்கே கோழியையும், காக்கயையும் கூறும் பொழுது, அதன் குணநலன்களையும் எடுத்துக் கூறுகிறார். உயிரினங்களுக்கு இடையில் இத்தகைய வேறுபாடுகள் இருந்தாலும் அதனை ஒதுக்கி விடாமல், அதனை அனுசரித்து அதனோடு பழக வேண்டும் என்கின்ற ஒரு திறத்தையும் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுவதாய் அமைத்திருக்கிறார். பசுவும் நாயும் மனிதர்களுக்கு நல்லது செய்யும் பிராணிகள் என்பதை எடுத்துக் கூறுகிறார். குதிரை ,மாடு ,ஆடு இவைகளை ஆதரிக்க வேண்டும் என்று கூறுபவர், ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு அடைமொழியையும் கூறுகிறார்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

பசு மிக நல்லது, நாய் மனிதருக்குத் தோழன், வண்டி இழுக்கும் குதிரை, உழுது வரும் மாடு, அண்டிப் பிழைக்கும் ஆடு என்று, ஒவ்வொன்றும் நம்மைச் சுற்றி நமக்காக, நம்முடன் வாழும் தன்மையை குழந்தைகளுக்காக எடுத்துரைக்கிறார் .

**பாரதி நினைவூட்டும் குழந்தைகளின் கடமைகள்**

காலையில் படிப்பு இன்றி அமையாதது அதன் பின்பு நல்ல பாட்டு. மாலை முழுவதும் விளையாடுவது தான் உடலுக்குச் சிறந்தது. இதனை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் இது ஒரு நாளைக்கு என்று இல்லாமல், இதையே நாட்கள் தோறும், குழந்தைப் பருவத்தில் இருந்து கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் கூறுகிறார்.

**பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்**
**புறஞ் சொல்லலாகாது பாப்பா!**
**தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு**
**தீங்குவர மாட்டாது பாப்பா! (பாப்பா பாட்டு**
**கவிதை, ப. 196)**

பொய் சொல்லுவதும், புறம் கூறுவதும் ஆகிய இந்த செயல்கள் என்றும் நம்மைக் காப்பாற்றாது, ஒவ்வொருவருக்கும் கடவுள் துணை இருக்கிறார். ஆதலால் எந்தத் தீங்கும் நமக்கு வராது. எந்தக்


**ISBN Number:** 978-81-981078-4-8

காரணத்திலும் பொய்யும், புறமும் வேண்டாம் என்பதை குழந்தைகளின் அடுத்த கடமையாக எடுத்துரைக்கிறார்.

பாதகம் செய்பவரை கண்டு அஞ்சி நடுங்க வேண்டிய அவசியம் இல்லை, அவர்களைப் பார்த்தால் மோதி மிதித்து விடு என்கின்றார். அவர்களின் பாதகச் செயலால் அச்சுண்டு, அவர்களுக்கு அடி பணிவதற்குப் பதிலாய் அவர்கள் முகத்தில் உமிழ்ந்துவிடத் தூண்டி விடுகிறார். துன்பங்கள் பல நெருங்கி வந்த போதும் நாம் சோர்ந்து விடக்கூடாது. **“சோராமல் இருப்பதற்கு பாரதியாரின் வாழ்க்கையே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இவர் எத்தனையோ துன்பங்களை பாண்டிச்சேரியில் அனுபவித்துக் கொண்டிருந்த போதிலும் மனம் சோராமல் இருந்து, அழகான கவிதைகளை எல்லாம் நமக்குத் தந்திருக்கிறார் அல்லவா?” (பாரதியும் பாப்பாவும், ப. 36)**

**துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்**
**சோர்ந்துவிட லாகாது பாப்பா!**
**அன்பு மிகுந்த தெய்வ முண்டு- துன்பம்**
**அத்தனையும் போக்கிவிடும் பாப்பா! (பாப்பா பாட்டு கவிதை, ப. 197)**

அன்பு மிகுந்த தெய்வம் உண்டு துன்பம் அத்தனையும் போக்கிவிடும் என்கிறார். தெய்வம் என்றால் அன்பு தான் என்பதை, இந்த இடத்தில் ஆணித்தரமாகக் கூறி

 **ISBN Number:** 978-81-981078-4-8

இருக்கின்றார். குழந்தைகளிடம் தெய்வம் கோவமானது, கண்ணைக் குத்தி விடும், பழி வாங்கி விடும் என்று தெய்வத்தைக் கண்டு அஞ்ச வைத்த நிலையை மாற்றி, அன்பு தெய்வம் உண்டு. அது நம்மைக் காக்கும், நமக்குத் துணையாக வரும் என்று குழந்தைகளிடம் அந்தப் பருவத்திலேயே தெய்வம் பற்றிய, ஒரு இனிமையான செய்தியைப் பதிய வைக்கிறார். குழந்தைப் பருவத்திலேயே தெய்வத்தை நண்பனாகவும், தூய அன்பாகவும் ஏற்றுக்கொண்ட பின்பு குழந்தைகள் ஒரு சமுதாயத்திற்கு நல்ல முன் உதாரணமாக வருவார்கள் என்ற ஒரு நம்பிக்கையும் இங்கே வெளிப்படுகிறது. உண்மையில் கடவுளை அன்பாகவே ஏற்றுக்கொண்ட ஒருவர் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு உயிரினத்திலும் அந்த அன்பையே காண்பார்கள். எந்த உயிருக்கும் தீங்கு நினைக்க என்ன மாட்டார்கள் என்கின்ற உண்மை இதன் வழி புலப்படுகிறது.

பூமியில் பிறந்த ஒவ்வொரு உயிரும் இயங்க வேண்டும். இயங்குதல் என்பது உலக நியதி அப்படி இருக்க, சோம்புதல் சோம்பி இருத்தல் என்பது ஒவ்வொரு உயிருக்கும் கெடுதி. அதனையே சோம்பல் மிகக் கெடுதி என்றார். திடம் கொண்டு போராடு ஒவ்வொரு செயலையும், எறும்பு கூட தன் உணவை மிகப்பெரிய கட்டியாக இருந்தாலும், அதனை சிறு சிறு துண்டுகளாகக்

 **ISBN Number:** 978-81-981078-4-8

கடத்திச் சென்று சேர்த்து வைக்கிறது. ஆக சோம்புதல் என்பது உயிருக்கு ஒவ்வாமை. யார் நொண்டி என்பதை அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். தேம்பி அழும் குழந்தையை நொண்டி என்கிறார். ஆக திடம்கொண்டு ஒவ்வொரு செயலிலும் போராடி வெற்றி பெற வேண்டும். போராடுதல் என்பது, நம்மால் முடியாது என்கின்ற அந்த எண்ணத்தைத் தூக்கி எறிவது தான். அந்தப் போராட்டம் உண்மையில் ஒவ்வொன்றையும் செய்ய முடியும் என்கின்ற, உள்ளத்துத் துணிவை குழந்தைப் பருவத்திலேயே கொண்டு வர வேண்டும் என்கின்ற, பாரதியின் உள்ளக் கிடக்கை இங்கே வெளிப்பட்டு நிற்கிறது.

**குழந்தைகளுக்குப் பாரதி புகட்டும் நாட்டுப் பற்று**

ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் தாய்நாடு இன்றியமையாதது. குழந்தைப் பருவத்திலேயே தாய் நாட்டின் மீது அன்பும் பற்றும் வரவேண்டும் என்பதனை, தன் தாய் நாட்டை தாயைப் போல அன்பு செலுத்தவும் கூறியுள்ளார். அமிழ்தில் இனியது நம் தேசம், சொல்லில் உயர்வானது நம் தாய் மொழிச் சொல் அது தமிழ்ச்சொல்.

**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே- அதைத்**
**தொழுது படித்திடடி பாப்பா! (பாப்பா பாட்டு**
**கவிதை, ப. 197)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

அதனை ஒவ்வொரு நாளும் தொழுது படிக்கச் சொல்கிறார். நம் இந்திய நாடு புகழ் நிறைந்த நாடு அதைத்தினமும் புகழ்ந்திட வேண்டும் என்கிறார். வடக்கில் இமயம் முதல் தெற்கில் குமரி வரை நம் நாடு. அதில் கடல் உண்டு கிழக்கிலும் மேற்கிலும் என்று தன் நாட்டை, நாட்டுப் பற்றுடன் குழந்தைகளுக்கு அடையாளம் காட்டியிருக்கிறார்.

**வடக்கில் இமயமலை பாப்பா-தெற்கில்**
**வாழும் குமரிமுனை பாப்பா! (பாப்பா பாட்டு**
**கவிதை, ப. 197)**

இந்த நாடு வேதத்தையும் தந்திருக்கிறது, நல்ல வீரர்களையும் தந்திருக்கிறது, இதை தெய்வம் என்று கும்பிட வேண்டும் என்கிறார் பாரதி.

**குலத்தினால் அல்ல உயர்வு தாழ்வு**
**சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!**
**நீதி, உயர்ந்த மதி, கல்வி – அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்! (பாப்பா**
**பாட்டு கவிதை, ப. 197)**

என்கிறார் பாரதியார். குலத்தினால் உயர்வு தாழ்வு காண்பது பெரிய பாவம் என்று அன்றைக்கே குழந்தைகளுக்கு எடுத்து ஓதியிருக்கிறார் பாரதியார். இவ்வடிகளை அப்படியே குழந்தைகள் தம் மனதில்


**ISBN Number:** 978-81-981078-4-8

ஆணியைப் போல் பதிந்து கொண்டால் தான் அவர்கள் வளரும் காலகட்டத்தில் சாதிகளால் நடக்கக்கூடிய கொலைகளும், கொடுமைகளும் நீங்கி இந்தியா என்கின்ற ஒரு ஒற்றுமைச் சமுதாயம் உருவாகும் என்பதை அன்றே நினைந்து குழந்தைகளுக்காகவே பாடி இருக்கிறார்.

யார் மேலோர் என்பதையும் மிக நேர்த்தியாக எடுத்துரைக்கிறார். உயர்ந்த மதியையும், நெஞ்சில் நீதியையும், கல்வியையும், அன்பையும் நிறைய உடையவர்கள் தான் மேலோர். மற்றபடி சாதியால் உயர்ந்தவர் மேலோர் அன்று என்பதையும் குழந்தைகள் மனதில் பதித்திருக்கிறார். உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும், தெய்வம் உண்மை என்பதை அறிந்திட வேண்டும் ஏனென்றால், ஒவ்வொரு உயிரினத்திலும் உரைந்து இருப்பது தெய்வம். அந்த தெய்வத்திற்கு உன் அன்பு செல்ல வேண்டும் என்பதை எடுத்துரைத்திருக்கிறார். நெஞ்சம் என்றும் வைராக்கியம் நிறைந்ததாய் இருக்க வேண்டும்.

இதுவே வாழ்க்கை முறை என்று குழந்தைகளுக்கு எடுத்து ஓதி மிக நேர்த்தியான சமுதாயம் உருவாவதற்காக குழந்தைகள் அன்றாடப் பொழுதும் இதை நினைவில் வைத்துக் கொண்டு வாழ்வதற்காக, அழகான குழந்தைப் பாடலை பாடிய நம் பாரதியின் *பாப்பா பாட்டு* கவிதை என்றுமே போற்றத்தக்கவை.


**ISBN Number:** 978-81-981078-4-8

**துணை நின்ற நூல்கள்**

[1] அடிகளாசிரியர், திரு. *சிறுவர் இலக்கியம்*. (பதி அ. சிவபெருமான்) திருவருள் வெளியிட்டகம், விழுப்புரம், 2004.

[2] சிவபெருமான், அ. முனைவர். *தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்*. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை. 2009.

[3] தூரன், பெ. *பாரதியும் பாப்பாவும்*. தி மாக்மில்லன் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட், மெட்ராஸ், 1979.

[4] *தமிழில் சிறார் இலக்கியம்*. தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

[5] *பாரதியார் கவிதைகள்*. வானதி பதிப்பகம், சென்னை 2002.

 **ISBN Number:** 978-81-981078-4-8

# 5

# விஞ்ஞான விக்ரமாதித்தன் கதைகள் வழி வெளிப்படும் மருத்துவ அறிவியல் உண்மைகள்

**முனைவர் வெ. பிரபாவதி,** தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
வே. வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை**

சிறார் இலக்கியம் என்பது சிறுவர்களுக்காக எழுதப்படும் இலக்கியம் ஆகும். சிறார் இலக்கியம் பொதுவாக பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டோருக்காக எழுதப்படுகின்றது. சிறார்களின் கல்வியில் மட்டுமல்ல அன்றாட வாழ்விலும் சிறார் இலக்கியம் ஒரு முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. சிறார்களுக்கு நல்ல ஒழுக்கங்களைக் கற்பித்து நல்லறிவு உடையவர்களாக திகழ வைப்பது நம் கடமையாகும். நற்பண்புகளையும், நல்வாழ்க்கை முறைகளையும் வலியுறுத்துவதாக இருப்பது சிறார் இலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியங்கள் வழி சிறார்களை மனிதர்களாக மட்டுமல்ல நல்ல குடிமக்களாகவும் நெறிப்படுத்த முடியும்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

அவ்வகையில் சிறார்களுக்கு நல்லறிவைப் புகட்டும் விதத்தில் கதைகள் எழுதுவதில் வல்லவர் ஆயிஷா இரா.நடராசன் அவர்கள். அவர் தம் கதைகளில் வெறும் அறிவினை மட்டுமல்ல மருத்துவ அறிவியல் அறிவினையும் புகட்டுகிறார். அவர் எழுதிய விஞ்ஞான விக்ரமாதித்தன் கதைகள் வழி வெளிப்படும் மருத்துவ அறிவியல் உண்மைகளை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**விஞ்ஞான விக்கிமாதித்தன் கதைகள்**

பொதுவாக கதைகள் என்பது மனிதர்களின் சொத்தாகும். கதை கேட்பதும் கதை சொல்வதும் ஒருவரின் தனித்திறன்களில் ஒன்றாக அமையும். கதைகள் வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் உருவாக்கப்படுவதில்லை. **"கதைகள் அனுபவங்களின் சொத்து, அறிவின் சுரங்கம், பண்பாட்டின் புதையல், வளரும் தலைமுறைகளின் வழிகாட்டி, முதுமையின் அறிவுக் கருவூலம் ஆகும்" (ப. இப்ராஹிம், ப. 16)** கதைகள் சிறார்களை மகிழ்விப்பதோடு உயர்ந்த எண்ணங்களையும் அவர்களின் மனதில் விதைக்கின்றன. இந்த கதைக் கூறும் மரபு, தொல்காப்பியத்திலேயே இருந்திருக்கிறது என்பதை, **"பொருள் மரபில்லா பொய்ம்மொழி யானும்" (செய் – 137)** என்னும் நூற்பா வழி அறிய முடிகின்றது. இதில் 'பொய்ம்மொழி' என்பது

 **ISBN Number:** 978-81-981078-4-8

வாய்மொழிக் கதைகளைக் குறிக்கக் கூடியதாக உள்ளது. தொடக்கக் காலத்தில் பாட்டிகள் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக் கதைகளையும், பஞ்சதந்திரக் கதைகள், தெனாலிராமன் கதைகள், விக்ரமாதித்யன் கதைகள், நல்லதங்காள் கதைகள் போன்றவற்றைக் குழந்தைகளுக்குச் சொல்லி மகிழ்ந்தனர். விக்கிரமாதித்தன் கதைகளை, நம்மில் பலரும் கேட்டிருப்போம். அரசனான விக்கிரமாதித்தன் தோளில் ஒரு வேதாளம் எப்போதும் இருக்கும். அது அவனிடம் கோபித்துக் கொண்டு அடிக்கடி முருங்கை மரத்திலோ, சுடுகாட்டிலுள்ள புளியமரத்திலோ ஏறி விடும். அப்படி ஏறும் போது தன்னோடு பாதி எரியும் பிணத்தையும் எடுத்துச் சென்று விடும்.

விக்கிரமாதித்தன் அப்பிணத்தினைச் சுடுகாட்டில் எரிப்பதற்கு எடுத்துச் செல்லும் போது, வேதாளம் அவனிடம் ஒரு கதையைச் சொல்லி சில கேள்விகள் கேட்கும். அதற்கு அவன் வேதாளத்திற்குத் திருப்தி தரும் வகையில் பதிலைச் சொல்லாவிட்டால் அவன் தலை சுக்கு நூறாக வெடித்து விடும் என்று பயமுறுத்தும். எனவே வேதாளம் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் விக்கிரமாதித்தன் பதிலளிப்பான். விஞ்ஞான விக்கிரமாதித்தன் கதைகள் எழுதிய ஆயிஷா இரா. நடராசன் அவர்கள், இந்தப் பழையப் பாணியைச் சற்று

மாற்றி தற்கால மருத்துவ அறிவியல் உண்மைகளைச் சொல்ல இக்கதையை உத்தியாகப் பயன்படுத்தியிருப்பது புதுமை ஆகும். மருத்துவத்துறை அற்புதங்களையும், மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அறிவியல் உண்மைகளையும் நவீன விக்கிரமாதித்தன் கதைகள் வழி விளக்கி கூறியுள்ளார். இந்நூலுக்கு, 2014 ஆம் ஆண்டு பால சாகித்திய புரஸ்கார் விருது கிடைத்தது கூடுதல் பெருமையே ஆகும்.

**சர்க்கரை நோய் பற்றிய மருத்துவ அறிவு**

சர்க்கரை நோய் என்பது பாவங்கள் மற்றும் முன்ஜென்ம பாவத்தால் வரும் நோய் அல்ல. நாம் அன்றாடம் உண்ணும் உணவில் உள்ள குளுக்கோஸ் சத்துக் குறைபாட்டால் வருவது என்பதை மெய்ப்பிக்கும் அறிவியல் பூர்வமான கதையே "**சர்க்கரைக் குண்டன்**" கதையாகும். சர்க்கரைக் குண்டன் சிறுவயதிலிருந்தே சாப்பாட்டுப்பிரியன். அனைவர் சாப்பாட்டையும் எடுத்து சாப்பிடுவான். உணவு அதிகம் உண்டு உடல் பருத்தது. அவனுக்குத் திருமணமும் நிகழ்ந்தது. திடீரென ஒரு நாள் சர்க்கரைக் குண்டன் நோயில் படுத்தான். அவனுக்குச் சர்க்கரை நோய் என தெரிந்தது. அவன் ஊசி எடுத்துக் கொள்ள மறுத்தான். மாத்திரைகள் உண்டான். பலனின்றி அவன் இறந்தான். வேதாளம் மாத்திரைச் சாப்பிட்டும் அவன் இறந்ததுக்கான காரணத்தைக் கேட்டது.

 **ISBN Number:** 978-81-981078-4-8

அப்போது விக்கிரமாதித்தன் சர்க்கரைநோய் பற்றியும், அது ஏற்படுவதற்கான காரணம் பற்றியும் விளக்குகிறான். மேலும் இன்சுலினைக் கண்டுபிடித்த ஆய்வாளர் பிரெடிரிக் பாண்டிக் பற்றியும் அவரின் ஆய்வு பற்றியும் விரிவாக எடுத்துரைக்ககிறான். இக்கதையின் முடிவில் அன்றாடம் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய ஊட்டச்சத்து குறித்த அட்டவணையும், உடலுக்குச் சரியான சக்தியைக் கொடுக்கும் உணவுப்பொருள் அடங்கிய அட்டவணையும் கொடுக்கிறார் ஆசிரியர். இதன் மூலம் சிறார்கள் சர்க்கரை நோயிற்கான காரணங்களையும் முறைப்படி சரியாக இன்சுலின் எடுத்துக் கொள்ளாத காரணத்தாலே சர்க்கரைக்குண்டன் இறந்தான் என்பதையும் உணர்ந்து கொள்கின்றனர். மேலும் கதையில் சர்க்கரைக்குண்டன் இறந்தற்குக் காரணம் அவன் அனைவர் உணவினையும் திருடி தின்றதன் சாபமே ஆகும் என மக்கள் கூறுவது மூட நம்பிக்கை அவன் இறப்பிற்கு ஊசி போடாததே முக்கிய காரணம் என சிறார்கள் மனதில் பதிய வைக்கிறார்.

**போலியோ நோய் குறித்த மருத்துவ அறிவு**

**“கைகாலன்”** எனும் கதை போலியோ எனப்படும் காய்ச்சல் வைரஸ் பாதிப்பால் மட்டுமே வரும் என்பதை விளக்கக் கூடிய கதையாகும். இதில் கைகாலன் என்பவன் தாயின் வயிற்றில் இருக்கும் போது பசு வயிற்றில் மிதித்த

 **ISBN Number:** 978-81-981078-4-8

காரணத்தினால் குறைப் பிரசவத்தில் பிறந்து விடுகிறான். அவனுக்குச் செல்வேந்திரன் எனப் பெயரிட்டு வளர்த்தனர் பெற்றோர். அவனது ஐந்தாவது வயதில் அவனுக்கு வந்த காய்ச்சலால் அவனுக்கு இரண்டு கால்களுமே சூம்பிப்போனது. கைகளைக் கொண்டு அவன் நடந்தலால் அவனை அனைவரும் கைகாலன் என்றழைத்தனர்.

வேதாளம் விக்ரமாதித்யனிடம் பசுமாடு தாக்கியதால் தான் கை காலனுக்கு இப்படி ஆனதா என கேட்கிறது. அதற்கு விக்கிரமாதித்யன் அவனுக்கு வந்தது போலியோ என்னும் வைரஸ் காய்ச்சலாகும். இந்த நோய் மூன்று வகை வைரஸ்களால் ஆனது என்றும் குழந்தைகளின் மூக்குவழியாகக் காற்றிலுள்ள வைரஸ் உள்ளே சென்று நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் எனக் கூறினான். மேலும் 5 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகளை இது பாதிக்கும் இந்நோயினைக் கண்டறிந்தவர் மற்றும் இதற்கான தடுப்பு ஊசிகளைக் கண்டறிந்தவர்களின் விவரத்தினையும் விக்கிரமாதித்யன் எடுத்துரைக்கிறான். இன்று உலகம் முழுக்க போலியோ நோய் குறைந்து காணப்படுவதற்குக் காரணம் சாபின் கண்டுபிடித்த சொட்டு மருந்துதான் என்றும் கூறுகிறான். இக்கதையின் வழி சிறார்களுக்கு போலியோ குறித்த அறிவு கிடைக்கிறது. இன்று உலக போலியோ தினம்


**ISBN Number:** 978-81-981078-4-8

கடைப்பிடிக்கப்பட்டு அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச சொட்டு மருந்து கொடுப்பதையும் நாம் காண முடிகின்றது. போலியோ இல்லாத ஒரு புத்துலகம் இன்று உருவானத்திற்குக் காரணம் இது குறித்த விழிப்புணர்வே என்றால் அது மிகையில்லை.

**நாய்க்கடி குறித்த மருத்துவ அறிவு**

வெறிநாய் கடிப்பது என்பது ஒரு விபத்து. அதற்கு முறையான மருத்துவ சிகிச்சை மேற்கொண்டால் உயிர் பிழைக்க முடியும் என்பதே **"நாய்க்கடி நந்திவர்மனின் கதை"** யாகும்.

பள்ளிக்கூடம் விட்டு வரும்போது நந்திவர்மனை வெறிநாய் கடித்து விடுகிறது. தந்தை திட்டுவாரோ என நினைத்து மறைக்கிறான். சில நாட்களுக்குப் பிறகு உடலில் மாற்றங்கள் ஏற்பட்டு கிட்டத்தட்ட நாயாகவே மாறி விடுகிறான். சங்கிலியால் கட்டப்பட்ட அவன் இரண்டு வாரத்தில் இறந்தும் விடுகிறான். இவன் இறந்தது விதியா? காலத்தின் கோலமா? என வேதாளம் கேட்டது ஒருவன் வெறிநாயால் கடிபடுவது என்பது விபத்தாகும். அது எப்படி விதியாக இருக்க முடியும் என விக்கிரமாதித்யன் கூறினான். வெறிநாய் கடிக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடித்தவர் குறித்தும் அதை மேற்கொள்ளும் முறை குறித்தும் கூறினான். வெறிநாய் கடிக்குத் தொப்புளில் 16 ஊசிகள் போடப்படுகிறது, அது மிகவும்


**ISBN Number:** 978-81-981078-4-8

பாதுகாப்பானது. அது போடப்படாத காரணத்தினால் தான் நந்திவர்மன் இறந்தான் எனத் தெளிவாக விக்கிரமாதித்யன் வேதாளத்திடம் எடுத்துரைத்தான். இதிலிருந்து "ஹைட்ரோபோபியா" எனப்படும் வெறிநாய்க்கடி நோய் குறித்த மருத்துவ அறிவினைச் சிறார்கள் மனதில் விதைப்பதினை உணர முடிகின்றது.

**மலேரியா குறித்த மருத்துவஅறிவு**

மலேரியா எனும் காய்ச்சல் புரோட்டோ சோவா என்னும் ஒரு செல் உயிரினால் பரவுகிறது. அந்நோய் பரவாமல் தடுக்க அனைத்து மக்களின் கூட்டு முயற்சி தேவை என்பதை வலியுறுத்துவதே மலேரியா மங்காத்தாள் கதையாகும். ஏழை விவசாயிக்கு எட்டாவதாகப் பிறந்த மகள் மங்காத்தா. விவசாய வேலைக்குப் போகாமல் பள்ளிக்கு அனுப்பப்பட்டாள். மற்ற ஏழு பெண்களுக்குத் திருமணம் நடந்தது. மங்காத்தாவிற்கு மட்டும் தகுந்த வரன் அமையவில்லை. ஊர் குழந்தைகளுக்குப் பாடம் நடத்தினாள். திடீரென்று மங்காத்தா நோய் வாய்பட்டு படுத்த படுக்கையாகி விட்டாள். மலேரியா நோயினால் பின் இறந்தும் போனாள். அவளுக்கு மலேரியா பரவியது விதி என்பதா? சதி என்பதா? என வேதாளம் கேட்டது. ஏனெனில் அனைத்துப் பெண் பிள்ளைகளும் விவசாய வேலைக்குச் சென்றனர். மங்காத்தா மட்டும் படிக்கப் போனாள்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

அன்றையக் காலத்தில் ஆண்கள் மட்டுமே படித்தனர். பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. இக்கதையில் மங்காத்தா படித்து அனைத்து குழந்தைகளுக்கும் பாடம் கற்றுக் கொடுத்தாள். இவள் மற்றவர்கள் போல தந்தைக்கு வேலையில் உதவாமல் இருந்தலால் தான் இவளுக்கு இந்த நிலை என்று வேதாளம் கருதியது.

இதைக் கேட்ட விக்கிரமாதித்யன் முட்டாள் வேதாளமே, "ஆணுக்குப் பெண் எந்த விதத்திலும் சளைத்தவளில்லை" இந்த நோய் எப்படி பரவுகிறது என்பதைத் தன் உயிரைக் கொடுத்து கண்டுபிடித்த ரொனால்ட்ராஸ் கதையை விக்கிரமாதித்யன் கூறுகிறான். மலேரியா நோய் புரோட்டோ சோவா எனப்படும். ஒரு செல் உயிரினால் பரவுகிறது என்றும், அது இரத்தத்தில் கலந்து பெருங்குடல் வழியாக வேகமாக இனப்பெருக்கம் செய்வதையும் குறிப்பிட்டான். மேலும் இது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவும் தொற்றுநோய். அது யாரிடமிருந்தும் யாருக்கும் பரவலாம். மலேரியா நோயின் இறுதிநிலையில் மூளையை மறுத்துப் போகச் செய்ய வைப்பதால் இறப்பு ஏற்படுகிறது. இது விதியாலும் அல்ல! சதியாலும் அல்ல! இதற்கு சுகாதரத்தைப் பேணுவது அவசியம். ஒட்டுமொத்த மக்களின் கூட்டு முயற்சியால் மட்டுமே இது சாத்தியப்படும் என்ற உண்மையினை வேதாளத்திற்குக்

 **ISBN Number:** 978-81-981078-4-8

கூறுவதன் வழி சிறார்கள் மனதிலும் பதிய வைக்கிறார் ஆசிரியர்.

**இருதய நோய் குறித்த மருத்துவ அறிவு**

மாரடைப்பு என்பது பணக்காரர்களுக்கு மட்டும் வரும் நோய் அல்ல, யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். உடலின் இரத்தத்தை உள்வாங்கி அனைத்துப் பாகங்களுக்கும் அனுப்பும் கருவியான இதயத்தில் உள்ள இரத்த நாளங்களில் ஏற்படும் கொழுப்பு அடைப்பினால் மாரடைப்பு நோய் ஏற்படுகிறது. இதை விளக்கும் கதையே **"மாரடைப்பு மாணிக்கத்தின் கதை"** யாகும். செல்வந்தரின் இரண்டாவது மகன் தான் மாணிக்கம் சிறுவயதிலேயே புகைப்பழக்கத்திற்கும், மது பழக்கத்திற்கும் ஆளானான். இடையிடையே மார்புவலி வரும். அவன் பெரிதுபடுத்தவில்லை தொடர்ந்து கெட்டப் பழக்கத்தினை மேற்கொண்டு தான் இருந்தான். பின் உடல் நலம் குன்றி மருத்துவரிடம் சென்று இதயநோய் இருப்பதை அறிந்து கொண்ட பிறகும் மாணிக்கம் மாறவில்லை. இறுதியில் இறந்துப் போனான். இந்நோய் பணக்காரர்களுக்கு வரும்நோய் என வேதாளம் நினைத்தது.

அதற்கு விக்கிரமாதித்யன், மிகத் தெளிவாக இதயநோய் ஏற்படுவதன் காரணங்களை விளக்குகிறான். இதயம் பழுதாக இரண்டு காரணங்கள் உள்ளன.

 **ISBN Number:** 978-81-981078-4-8

சாப்பிடும் உணவிலுள்ள கொழுப்புகள் இரத்த நாளத்தில் அடைத்து ரத்தஓட்டம் குறைவதால் வரும். அடுத்ததாக மற்ற காரணங்களால் இதயம் விரிவுடையும் போதும் வரும் எனக் கூறி தெளிவுபடுத்துகிறான். மேலும், இதய மாற்று அறுவை சிகிச்கை செய்து சாதனை செய்த கிறிஸ்டின் நீத்லீஸ் பெர்னார்டு குறித்து கூறினான். மாணிக்கம் அதிகமாக கொழுப்புச்சத்து உணவினை உண்டதாலும் மது அருந்தி, புகை பிடித்ததாலும் மாரடைப்பு வந்தது எனவும் உணவுப் பழக்கத்தினை மாற்றி முறையான உடற்பயிற்சியினை மேற்கொண்டால் விதியையும் மாற்றலாம் என்பதையும் இக்கதை வலியுறுத்துகிறது.

இதுபோல் அன்றைய காலத்திலே அறுவை சிகிச்சைகள் மேற்கொண்ட முறைமையை இலக்கியங்களில் காண முடிகின்றது. பழுதுபட்ட உறுப்பினை எடுத்துவிட்டு வேறொரு உறுப்பினைப் பொருத்துதல் என்பது இன்றைய மருத்துவ உலகின் மாபெரும் சாதனையாகும். சிலப்பதிகாரம், பழமொழி நானூறு, குணநாற்பது போன்ற பல நூல்களில் பொற்கை பாண்டியன் செய்தி கூறப்பட்டுள்ளது. குண நாற்பதில்,

**ஆடு மழைத்தடக்கை யறுத்து முறை செய்த**
**பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்.**

**(பாண்டியன். அ. ப. 1)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

என பாண்டியனின் கைக்குப் பதில் பொன்னாலான மாற்று வகைப் பொருத்தப்பட்ட செய்தியினைக் காண முடிகின்றது. மேலும், பெரிய புராணத்தில் சிவலிங்கத்தின் கண்ணில் குருதி வடிவதைக் கண்ட திண்ணன் தன் கண்ணை எடுத்து சிவனுக்குப் பொருத்தியதை,

**தங்கண்**

**முதற்சரமடுத்து வாங்கி முதல்வர்தங்**

**கண்ணில் அப்ப (பெ. புரா. 178)**

எனும் அடிகள் மெய்ப்பிக்கிறது.

**புற்றுநோய் குறித்த மருத்துவஅறிவு**

இரத்தப்புற்று நோய் என்பது செய்வினை போன்ற மூடநம்பிக்கையால் வருவதல்ல. புகைப்பிடிக்கும் பழக்கத்தினால் வரக் கூடியது என்பதை உணர்த்தும் கதையே **"இரத்தப்புற்று ராவுத்தர் கதை"** யாகும். ராவுத்தரின் தொழில் பீடி சுற்றுதல் ஆகும். வேலை செய்யும் போது பீடி பிடிக்கப் பழகினான். பின்பு அதுவே பழக்கமாகி முழுநேரமும் புகைத்தான். திடீரென்று இரத்தவாந்தி எடுத்து இறக்கிறான். ஊரார் இரண்டு விதமாக பேசிக் கொண்டார்கள். சலீம்பாய் என்பவன் செய்வினை வைத்ததால் தான் என்றும், இறைவனுக்குப் பிடிக்காத புகை பீடி சுற்றியதால் தான் என்றும் பேசிக் கொண்டனர். ராவுத்தரின் மரணத்திற்குக் காரணம் செய்வினையா? அல்லது தெய்வகுத்தமா எனக் கேட்ட

 **ISBN Number:** 978-81-981078-4-8

வேதாளத்திற்கு விக்கிரமாதித்யன் பதில் உரைத்தான். புற்றுநோய் என்பது தனது செல் பிரிதலைக் கட்டுப்படுத்த முடியாத திசுக்களின் அபரீத வளர்ச்சி கட்டியாவதால் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்த ஜெர்ட் பில்லி எலியானின் ஆராய்ச்சி முறையினை விக்கிரமாதித்யன் எடுத்துரைத்தான். மேலும் எலியான் மற்றும் அவரின் உதவியாளர் இச்சிங்ஸீம் இணைந்து கண்டுபிடித்த "இமோதெரபி" எனப்படும் கதிர்வீச்சு முறை தான் புற்றுநோயாளிக்குப் புகலிடமாக இருக்கிறது என்பதையும் கூறுகிறான். இது செய்வினையுமல்ல சாபமுமல்ல எனக் கூறி இதற்குப் பின் உள்ள அறிவியல் உண்மையை எடுத்துக் கூறியது மிக அழகு.

**எய்டஸ் நோய் பற்றிய மருத்துவ அறிவு**

ஒருவன் பிறந்த நேரத்திற்கும் வாழ்க்கைக்கும் தொடர்பே கிடையாது. தவறான பழக்கவழக்கங்களால் தான் எய்ட்ஸ் எனும் உயிர்க்கொல்லி வருகிறது என்பதை வலியுறுத்தும் கதையே **"எய்ட்ஸ் ஏகாம்பரத்தின் கதை"** யாகும். பசுபதியின் மூன்றாவது மகனே ஏகாம்பரம் ஆவான். ஏகாம்பரம் சிறுவயதிலேயே புகைப்பிடிப்பது, பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் இருப்பது என இருந்தான். மேற்படிப்பு படிக்க போய் அங்கேயும் கெட்ட பழக்கவழக்கங்கள், சிற்றின்ப வாழ்க்கையில் எல்லாவற்றையும் தொலைத்து நோயாளி ஆனான். அவன்


**ISBN Number:** 978-81-981078-4-8

பிறந்த நேரம் சரியில்லாத காரணத்தினால் தான் விதி வந்து விளையாடிவது எனக் கேட்ட வேதாளத்திடம் விக்கிரமாதித்தான் பதில் கூறத் தொடங்கினான். அவனுக்கு வந்திருப்பது எய்ட்ஸ் என்னும் கொடிய நோய் பிறந்த நேரத்திற்கும் நோய்க்கும் தொடர்பு இல்லை. எய்ட்ஸ் என்னும் நுண்ணுயிரி எப்படி மனிதனைத் தாக்குகிறது என்பதை ஆராய்ந்த லுக் மாண்டேக்னர் பற்றி அவன் கூறுகிறான்.

எய்ட்ஸ் மனிதனின் உடலுறுப்புகளைத் தாக்கவில்லை. வெள்ளை அணுக்களைப் பாதிக்கிறது. இந்த வைரஸ் நுண்ணோக்கியால் கூட பார்க்க இயலாத சிறிய அளவுள்ள வைரஸ் என தன் ஆய்வில் கூறுகிறார். இவரின் கருத்துப்படி நோய் தாக்கியோருக்குப் போடப்பட்ட ஊசியினைப் பிறருக்குப் பயன்படுத்தும் போதும், முடிதிருத்துபவரின் கத்தியில் இவரின் ரத்தம்படும் போதும், பாதுகாப்பற்ற உடலுறவின் மூலமும், தாயிடமிருந்து குழந்தைக்கு மகப்பேற்றின் மூலமும் பரவுகிறது என்று கூறினார். இந்த வைரஸ் வெள்ளை அணுக்கள் போலவே இருப்பதால் வெள்ளை அணுக்களால் கண்டுபிடித்து எதிர்க்க முடியவில்லை. இனப்பெருக்கத்தின் மூலம் வெள்ளைஅணுக்களை அழிப்பது முதல்நிலை. இந்த நோயின் இரண்டாம் நிலை வெள்ளை அணுக்கள் முற்றிலும் அழிந்து விடுவதால்

 **ISBN Number:** 978-81-981078-4-8

எத்தகைய நோய் வந்தாலும் உடல் போராடும் நிலையை இழந்து விடுகிறது. இந்த நிலை தான் எய்ட்ஸ். இந்த நோய் ஏகாம்பரத்தின் கெட்ட பழக்கவழக்கங்களால் வந்ததே அல்லாமல் பிறந்த நேரத்தால் அல்ல என விக்ரமாதித்யன் வேதாளத்திற்கு எடுத்துரைப்பதன் வழி சிறார்களுக்கு ஹெச்.ஐ.வி. கிருமி பரவும் முறை குறித்தும் கெட்டப்பழக்கங்களைத் தவிர்த்து ஆரோக்கிய வாழ்வு வாழ்ந்தால் எயிட்ஸ் நோயிடமிருந்து தப்பிக்க முடியும் என்ற அறிவியல் உண்மையையும் வலியுறுத்துவதை உணர முடிகின்றது.

**உடல் காயங்கள் குறித்த மருத்துவ அறிவு**

ஒருவனின் இறப்பிற்கு ஜோதிடம் காரணமாக அமையாது உடலில் ஏற்படும் காயங்களினால் சீழ் பிடித்தால் பாக்டீரியா போன்ற கிருமிகள் உட்புகுந்து இறப்புக்கு வழி வகுக்கும் என்பதை விளக்கும் கதையே **“காயகந்தன் கதை”** யாகும். லட்சுமிகாந்தனுக்கு எப்போதும் சண்டைபுத்தி, அடிக்கடி கீழே விழுந்து காயங்களோடு வருவான் ஒரு சமயம் மாடி வீட்டிலிருந்து கோலி விளையாடும் போது கீழே விழுந்ததில் இருந்து அவன் பெயர் காயகாந்தனாக மாறியது. காயகாந்தன் தன் காயங்களுக்கு முறையான வைத்தியம் பார்க்கவில்லை. அதன் காரணமாக இறந்துபட்டான். அவன் தந்தையார் பூசாரி. அவர் குறி சொல்வதில் கெட்டிகாரர்


**ISBN Number:** 978-81-981078-4-8

லட்சுமிகாந்தன் பிறக்கும் போதே மருத்துவச்சியின் கையிலிருந்து விழுந்து விட்டான். இது நல்ல சகுனமில்லை என்று அவனது தந்தையான பூசாரி நினைத்தார். இவன் இறந்த பிறகு அவர் குறி சொல்வதையே விட்டு விட்டார். காயகாந்தனின் இறப்பதற்குக் காரணம் யாது? என வேதாளம் கேட்டது. அதற்கு விக்ரமாதித்யன் அவன் இறப்புக்குக் காரணம் முறையான வைத்தியம் பார்க்காதது தான் என்றுக் கூறி பென்சிலின் கண்டுபிடித்த கதையைக் கூறியது. காயம் என்பது தோல் உரிந்து உடலின் ரத்தநாளங்கள் உள்பட உள்ளிருக்கும் செல்களை வெளியே திறப்பதாகும். திறந்த இடத்திற்குள் காற்றிலுள்ள நுண்ணுயிர்கள் உள்ளே சென்று இனப்பெருக்கம் அடைந்து வெள்ளை அணுக்களை அழித்து சீழை வெளியேற்றம். இதை எதிர்த்துப் போராடுவது தான் ஆன்டிபயாடிக் உலகின் முதல் ஆன்டிபயாடிக் பென்சிலின் ஆகும். அதைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் பிளம்மிங் கதையையும் கூறினான் விக்கிரமாதித்யன்.

இந்த உடல் காயங்களைப் பற்றி கூறும் போது புறநானூற்றுப் பாடல் தான் ஞாபகத்திற்கு வருகிறது. வெட்டுண்டு கிழிந்த உடல் தசையினைத் தைத்து மருந்தூட்டி அப்புண்ணின் மேல் பஞ்சினை வைத்து சிகிச்சை செய்தமையை,

 **ISBN Number:** 978-81-981078-4-8

**செருவா யுழக்கிக் குருதியோட்டிக்**
**கதுவாய் போகிய துதிவாயெஃகமொடு**
**பஞ்சியுங் களையாப் புண்ணர். (புறம் – 353)**

எனும் அடிகள் உணர்த்துகின்றன. இதை நோக்கும் போது இன்றைய மருத்துவ முறையின் நவீனமான சிகிச்சை முறைகளை முறைப்படி அன்றே அறிய முடிகின்றது. நம் முன்னோர் சரியாக செய்து வந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

**விஞ்ஞான கதைகள் வழி சிறார்களுக்கு எடுத்துரைக்கும் பிற செய்திகள்**

விஞ்ஞான நவீன விக்கிரமாதித்யன் கதைகள் வழி பல செய்திகளை ஆசிரியர் சிறார்களுக்கு எடுத்துரைக்கிறார். அவைகள்,

- **சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்**
- **நுட்பமான ஆராய்ச்சசித்திறனை வளர்த்தல்**
- **சிறார்கள் மனதில் தன்னம்பிக்கை மற்றும் துணவினை விதைத்தல்**
- **விஞ்ஞானத்தால் வாழ்க்கை மேம்படல்**
- **நல் எண்ணங்களை விதைத்தல்**
- **மூட நம்பிக்கைகளைக் களைத்தல்**
- **வரலாற்று ஆர்வத்தைத் தூண்டுதல்**

போன்ற பலவாகும். இன்றைய உலகத்தில் அறிவியல் படிப்படியாக வளர்ந்து மாபெரும் வளர்ச்சிகளைப் பெற்று


**ISBN Number:** 978-81-981078-4-8

வருகிறது. அதை சிறார்களிடம் கொண்டு சேர்ப்பது சவாலான ஒன்றாகும். **“அறிவியலின் அதிசயங்களைக் குழந்தைகளுக்குப் புரியும் வகையில் எடுத்துரைப்பது மிக இன்றியமையாததாகும்” என்கிறார் அங்கயற்கண்ணி (அங்கயற்கண்ணி. ப. 1)** இதை ஆயிஷா இரா. நடராசன் மிகச் செவ்வனே செய்துள்ளார்.

**சிந்தனைத் திறன் மேம்படுத்தல்**

விஞ்ஞான விக்கிரமாதித்யன் கதைகள் வாயிலாக சிறார்களின் சிந்தனைத் திறன் வளர்வதைக் காணலாம். ஒவ்வொரு நோயிற்கும் என்ன காரணம் என்பதைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அறியும் வகையில் மருத்துவச் செய்திகளை விரிவாக விளக்கிக் கூறியதால் இதைப் படிக்கும் சிறார்களின் சிந்தனைத் திறன் மேலும் வளர்கிறது. அவர்களின் சிந்தனை மேம்படவும், ஏன், எதற்கு என மேலும் சிந்தித்து செயல்படவும் இக்கதைகள் உறுதுணையாக அமைந்துள்ளன. இக்கதைகள் அனைத்தும் விஞ்ஞான அறிவியல் அடிப்படையில் அமைந்த கதைகளாக இருப்பதால் இவை பரந்துபட்ட அறிவியல் அறிவினை வெளிப்படுத்துவதோடு பல முக்கிய வாழ்வியல் பாடங்களையும் உணர்த்துகின்றது. அது மட்டுமல்லாது ஒவ்வொரு கதையில் வரும் பிரச்சனைகளுக்கு ஒரு அறிவார்ந்த தீர்வு இருப்பதைச் சிறார்களே சிந்திக்கும் படி


**ISBN Number:** 978-81-981078-4-8

வைக்கிறது. ஆக, இக்கதைகள் சிறுவர்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்துகிறது.

**நுட்பமான ஆராய்ச்சித்திறன்**

விஞ்ஞான கதைகள் மூலம் எட்டு விதமான நோய்கள் குறித்து சிறுவர்கள் அறிந்துக் கொண்டனர். மேலும் ஒவ்வொரு நோய் ஏற்பட என்ன காரணம், அதற்கு மருந்து என்ன என்பதையும் இக்கதைகள் வழி உணர்த்தியதால் சிறார்களின் ஆராய்ச்சித் திறன் மேம்பட இது ஊக்குவிக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஒவ்வொரு நோய்க்கான தீர்வினைக் கண்டறிந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் ஓயாத உழைப்பினையும், அவர்கள் சோர்ந்து போகாது தீர்வு கிடைக்கும் வரை போராடியதையும் அதற்காக உயிரைக் கூட விட்டவர்களின் கதைகளைப் படிக்கும் போது இளவயதினருக்கு ஆராய்ச்சி மீது பற்று உண்டாகிறது. நாமும் இதுபோல பல ஆய்வுகளை மேற்கொண்டு மனித வாழ்வுக்கு பல நல்ல விசயங்களைச் செய்ய வேண்டும் என்ற அவா ஏற்படுகின்றது. இங்ஙனம் சிறார்கள் மனதில் நுட்பமான ஆராய்ச்சித் திறனைத் தூண்டிய இந்நூலினை நிச்சயம் பாராட்டித் தான் ஆக வேண்டும்.

**தன்னம்பிக்கையை விதைத்தல்**

இக்கதைகளைப் படிக்கும் போது அதில் வரும் மாந்தர்கள் நோய் குறித்த விழிப்புணர்வு அறிவு இல்லாத

 **ISBN Number:** 978-81-981078-4-8

காரணத்தினாலேயே இறந்து படும் சூழல் உருவாகிறது என்பதைச் சிறார்கள் உணர்ந்து கொள்கிறார்கள். இதன் மூலம் நோய்கள் குறித்த அறிவு இவர்களிடம் இருப்பதால் அது வராமல் தடுக்கும் வழிமுறைகளையும், வந்தால் அதை எதிர்த்து போராடும் முறைகளையும் இக்கதைகள் கற்று கொடுக்கிறது. இதனால் அவர்கள் மனதில் தன்னம்பிக்கை எனும் மாபெரும் சக்தி முளைத்து அது அவர்களுக்குத் துணிச்சலான மனத்தினைக் கொடுக்கிறது. மருத்துவப்படிப்பு படிக்காமலேயே நமக்கும் பல அரிய மருத்துவ அறிவியல் உண்மைகள் தெரிகின்றது, பலருக்கும் அதை எடுத்துரைக்க முடிகின்றது என்ற தன்னம்பிக்கையை இக்கதைகள் வழி ஆசிரியர் சிறார்கள் மனதில் விதைத்துள்ளார்.

**விஞ்ஞானத்தால் வாழ்க்கை வளர்ச்சி மேம்படல்**

விஞ்ஞான கதைகள் அனைத்தும் பல அறிவியல் கண்டுபிடிப்புகள் குறித்து விளக்கமாக கூறியுள்ளது. மருத்துவ உலகில் இங்ஙனம் கண்டுபிடித்த பல கண்டுபிடிப்புகளின் வழி பயனடைந்தோர் ஏராளம். இதனால் கண்டுபிடித்த ஆராய்ச்சியாளரின் வாழ்வும் மேம்படும். அதை எடுத்துக் கொண்ட பயனாளரின் வாழ்வும் மேம்படும். விஞ்ஞான வளர்ச்சியடையாத உலகில் நித்தம் எத்தனையோ உயிர்கள் கண்முன்னே பலியாவதைப் பார்க்கிறோம். ஆனால் இன்று

 **ISBN Number:** 978-81-981078-4-8

அப்படியல்ல அதிஅற்புத விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தாலும் அதற்கு ஈடு கொடுத்து அர்ப்பணிப்போடு உழைத்த ஆய்வாளர்களாலும் தான் அனைவரின் வாழ்வும் மேம்பட்டு வளர்ச்சியடைந்துள்ளது.

**நல் எண்ணங்களை விதைத்தல்**

விஞ்ஞான கதைகள் வழி தவறான பாதையில் சென்றால் எங்ஙனம் சீரழியக்கூடிய நிலை ஏற்படும் என்பதை உணர்த்தி, சிறார்கள் மனதில் நல்ல எண்ணங்களை ஆசிரியர் விதைக்கிறார். ஒவ்வொரு கதையில் வரும் கதைத் தலைவர்களும் ஏதாவது ஒரு கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகி அதனால் மீண்டு வர முடியாத நிலையில் இருப்பதைக் காட்டுகிறார். இதன் மூலம் இவ்வாறான தவறான பழக்கங்களுக்குத் தாங்கள் அடிமையாகக் கூடாது என்ற எண்ணம் சிறார்கள் மனதில் உருவாகிறது. நல்ல எண்ணங்களே நல்வாழ்க்கைக்கு வழி வகுக்கும் என்பதை இக்கதைகள் உணர்த்தி நிற்கின்றன.

**மூடநம்பிக்கையைக் களைதல்**

ஆயிஷா, இரா. நடராசன் அவர்கள் பல நல்ல செய்திகளை இக்கதைகள் வழி எடுத்துரைத்தாலும், அவர்கள் வலியுறுத்திய முக்கிய செய்தி மூடநம்பிக்கை குடிபுகுந்தால் நிச்சயம் வீடும், நாடும் முன்னேறாது என்பதை இக்கதைகள் வழி உணர்த்துகிறார். அனைத்துக் கதைகளிலும் ஏதாவது ஒரு மூடநம்பிக்கையைக் கூறி

 **ISBN Number:** 978-81-981078-4-8

அதனால் வருவது நோயல்ல. அதற்கான உண்மை காரணங்களை அறிவியல் அறிவோடு விளக்கி சிறார்கள் மனதில் பகுத்தறிவினை விதைத்துச் செல்கிறார் ஆசிரியர்.

**வரலாற்று ஆர்வத்தினைத் தூண்டுதல்**

ஆசிரியர் கூறியது விஞ்ஞான கதைகளாக இருந்தாலும் அதை மன்னன் விக்கிரமாதித்தன் வாயிலாக எடுத்துரைத்ததன் வழி சிறார்கள் மனதில் வரலாற்று ஆர்வத்தினைத் தூண்டியிருக்கிறார். சிறார்கள் இயல்பாகவே வரலாற்று ஆர்வம் மிக்கவர்களாக தான் இருக்கின்றனர். அக்கால வரலாற்று மாந்தர்கள் அதாவது விக்ரமாதித்யன், வேதாளம் வழி விறுவிறுப்புடன் கதையைக் கூறிச் செல்வதுடன் இக்கால மருத்துவ செய்திகளையும் விரிவாக கூறியது சுவாரஸம் மிக்கதாக இருந்தது.

**தொகுப்புரை**

விஞ்ஞான விக்ரமாதித்தன் கதைகள் வழி மனிதர்களைத் தாக்கக் கூடிய கொடிய நோய்கள் குறித்தும், அவை வருவதற்கான காரணங்கள் குறித்தும் அறிய முடிகின்றது. மேலும், அந்நோய்களுக்கான மருத்துகளைக் கண்டுபிடிக்கத் தம் வாழ்வைத் தியாகம் செய்த மருத்தவ ஆய்வாளர்களின் வரலாற்றினையும் தெரிந்து கொள்ள முடிகின்றது. அக்கால விக்கிரமாதித்தன், வேதாளம் கதைகள் வழி இன்றைய

 **ISBN Number:** 978-81-981078-4-8

மருத்துவ அறிவியலைச் சிறார்களுக்குக் கொண்டு சேர்க்க நினைத்தது புதிய முயற்சியாகும். அம்முயற்சியில் ஆசிரியர் வெற்றிக் கண்டது பாராட்டுக்குரியதாகும். ஒவ்வொரு கதையின் இறுதியிலும் அக்கதையில் வரக் கூடிய நோய்கள் பற்றிய தகவல்களையும் ஆரோக்கிய வாழ்விற்குப் பின்பற்ற வேண்டிய வழி முறைகளையும் எடுத்துரைப்பது சிறப்பிற்குரியது. இக்கதைகள் வழி சிறார்களின் சிந்தனைத்திறனும் நுட்பமான ஆராய்ச்சித்திறனும் மேம்படுவதைக் காண முடிகின்றது. இத்தகைய அரிய தகவல்களை தரக் கூடிய புத்தகங்களை வாசிக்கவும், நேசிக்கவும் சிறார்களை உற்சாகப்படுத்துவது நம் கடமையாகும்.

**பார்வை நூல்கள்**

[1] அங்கயற்கண்ணி, சி. *குழந்தைப் பாடல்களில் அறிவியல் சிந்தனைகள். சிறகு*, 2012, www.seragu.com. 13 Dec, அன்று அணுகப்பட்டது.

[2] ஆயிஷா நடராசன், இரா. *விஞ்ஞான விக்கிரமாதித்தன் கதைகள்.* பாரதி புத்தகாலயம், சென்னை, 2014.

[3] இப்ராஹிம், ப (தொ.ஆ). *தமிழில் சிறார் இலக்கியம்.* நியூ செஞ்சரி புத்தகநிலையம், சென்னை, 2023.

 **ISBN Number:** 978-81-981078-4-8

[4] இளம்பூரணர் (உ.ஆ). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* கழகவெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 1969.

[5] பாண்டியன், அ. *தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்.* 2015, https://pandianpandi.blogspot.com. 13 Dec, அன்று அணுகப்பட்டது.

[6] பாலையன், அ. பா. (தொ.ஆ,) *சேக்கிழார் அருளிய பெரியபுராணம் மூலமும் உரையும்.* கௌரா பதிப்பகம், சென்னை, 2019.

[7] புலியூர்க்கேசிகன் (உ.ஆ). *புறநானூறு மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2010.

 **ISBN Number:** 978-81-981078-4-8

# 6

# 'Plotagon' செயலி வழி ஒன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு ஆத்திசூடியையும் அதன்பொருளையும் கற்பித்தல்

**புனிதா சுப்பிரமணியம்,** அலகார் தோட்டத் தமிழ்ப்பள்ளி,
துரோங், பேரா, மலேசியா.

**ஆய்வுச் சுருக்கம்**

*ஆரம்பப்பள்ளி மாணவர்களிடையே தமிழ் மொழியின் இனிமையைச் சுவைக்கவும், கற்றல் கற்பித்தலில் மனமகிழ்வை ஏற்படுத்தவும், மாணவர்களின் மொழியறிவை மேம்படுத்தவும் மலேசிய புதிய கலைத்திட்டத்தில் செய்யுளும் மொழியணியும் எனும் திறன் உருவாக்கப்பட்டது. இதன்வழி மாணவர்களிடையே படைக்கும் ஆற்றலை வளர்க்கவும், நற்பண்புகளை விதைக்கவும், மாணவர்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டவும் முடியும். ஒன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ்மொழி கலைத்திட்டத்தில் ஔவையின் ஆத்திசூடியும் இடம்பெற்றுள்ளது. ஒன்றாம் ஆண்டு இறுதியில் மாணவர்கள் 12 ஆத்திசூடியையும்*

 **ISBN Number:** 978-81-981078-4-8

*அதன் பொருளையும் அறிந்து கூற வேண்டும்; எழுத வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் தமிழ் எழுத, வாசிக்கத் தெரியாமல் ஒன்றாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றனர். அவர்களுக்கு அடிப்படை தமிழ் எழுத்து அறிமுகம், வாசிப்புப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, மாணவர்களை மேலும் சிரமப்படுத்தாமல் அவர்களுக்கு எளிய முறையில், மனமகிழ்வை ஏற்படுத்தும் வண்ணம் ஆத்திசூடியையும் அதன் பொருளையும் போதிக்க வேண்டியது அவசியம். ஆரம்ப நிலையில் மாணவர்களுக்கு ஆத்திசூடியைப் போதிக்கும் போது பல சவால்களை எதிர்நோக்கிய போது, அதற்கான தீர்வாக அமைந்தது தான் 'Plotagon' செயலி வழி அசைவூட்டும் படங்களை உறுவாக்கி மாணவர்களுக்கு ஆத்திசூடியையும் அதன் பொருளையும் போதித்தல். 'Plotagon' செயலி வழி மாணவர்களுக்கு எவ்வாறு ஆத்திசூடியையும் அதன் பொருளையும் போதிக்கும் பாடப்பொருளைத் தயாரித்து கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் அமைகின்றது இந்த ஆய்வு.*

**குறிப்புச்சொற்கள்**

**முன்னுரை**

இன்றைய சூழலில் உலகளவிலான நிலையில்

 **ISBN Number:** 978-81-981078-4-8

கல்வி துறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதில் மிக முக்கியமானது 21ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கொண்ட மாணவர்களை உறுவாக்குவதாகும். குறிப்பாகச் சிந்திப்பதிலும் வாழ்வியல் திறனிலும் தொழில் தர்மத்திலும் மேம்பாடடைந்த மாணவர்களின் உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பயன்படுத்திச் சீர்தூக்கிப் பார்த்து மீட்டுணர்ந்து சிக்கல் களையவும் முடிவெடுக்கவும் புத்தாக்கச் சிந்தனையுடன் ஒன்றை உருவாக்கவும் பயன்படுகின்ற சிந்தனை ஆற்றல் கொண்ட மாணவர்களை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியதாகும். (சீரமைக்கப்பட்ட புதிய கலைத்திட்டம், 2017)

ஆசிரியரின் கற்றல்-கற்பித்தல் அணுகுமுறை மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைதல் வேண்டும். விளைபயன்மிக்க கற்றல்-கற்பித்தல், மாணவர் மையமாக இருப்பதோடு சிறந்த நடவடிக்கைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், கற்றல்-கற்பித்தல் அணுகுமுறை மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடையதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அமைதல் வேண்டும். கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளில்

 **ISBN Number:** 978-81-981078-4-8

மாணவர்களின் முழுமையான ஈடுபாடும் முக்கியமாகக் கருதப்படுகிறது. சிறப்பான கற்றல்கற்பித்தலோடு ஆசிரியர் மாணவர்களுக்குத் தலைமைத்துவம், பொறுப்புணர்வு, தன்நிலையுணர்வு போன்ற கூறுகளை வலியுறுத்த வேண்டும். ஆரம்பப்பள்ளி மாணவர்களிடையே தமிழ்மொழியின் இனிமையைச் சுவைக்கவும், கற்றல்-கற்பித்தலில் மனமகிழ்வை ஏற்படுத்தவும், மாணவர்களின் மொழியறிவை மேம்படுத்தவும் மலேசிய புதிய கலைத்திட்டத்தில் செய்யுளும் மொழியணியும் எனும் திறன் உருவாக்கப்பட்டது. இதன்வழி மாணவர்களிடையே படைக்கும் ஆற்றலை வளர்க்கவும், நற்பண்புகளை விதைக்கவும், மாணவர்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டவும் முடியும். ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்குச் செய்யுளையும் மொழியணியையும் போதிப்பதற்கு முன்பாக முதலில் ஆசிரியர் கற்றல்கற்பித்தலுக்கு ஏற்ற பாடப்பொருளைத் தயார்செய்தல் அவசியம்.

**ஆய்வு நோக்கம்**

'Plotagon' செயலி வழி எவ்வாறு ஆத்திசூடியையும் அதன் பொருளையும் போதிக்கும் பாடப் பொருளைத் தயாரித்து கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனபதனை ஆராயும் நோக்கத்தோடு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

 **ISBN Number:** 978-81-981078-4-8

**ஆய்வு சிக்கல்**

ஒன்றாம் ஆண்டு இறுதியில் மாணவர்கள் 12 ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூற வேண்டும், எழுத வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் தமிழ் எழுத, வாசிக்கத் தெரியாமல் ஒன்றாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றனர். அவர்களுக்கு அடிப்படை தமிழ் எழுத்து அறிமுகம், வாசிப்புப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, மாணவர்களை மேலும் சிரமப்படுத்தாமல் அவர்களுக்கு எளிய முறையில், மனமகிழ்வை ஏற்படுத்தும் வண்ணம் ஆத்திசூடியையும் அதன் பொருளையும் போதிக்க வேண்டியது அவசியம். ஆரம்ப நிலையில் மாணவர்களுக்கு ஆத்திசூடியைப் போதிக்கும் போது பாடபொருள்களைத் தயாரிப்பதில் பல சவால்களை எதிர்நோக்கிய போது, அதற்கான தீர்வாக அமைந்ததுதான் ‘Plotagon’ செயலி வழி அசைவூட்டும் படங்களை உருவாக்கி மாணவர்களுக்கு ஆத்திசூடியையும் அதன் பொருளையும் போதித்தல் ஆகும்.

**ஆய்வு முக்கியத்துவம்**

ஒன்றாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் மாணவர்களுக்குக் கல்வியில் நாட்டம் பெறச் செய்வது மிகமிக அவசியம். எளிய முறையிலும் மனமகிழ்வளிக்கும் வகையிலும் நடைபெறும் கற்றல் கற்பித்தலே

 **ISBN Number:** 978-81-981078-4-8

மாணவர்கள் மனதில் ஆழ பதியும். அவ்வகையில் அசைவூட்டும் படங்களின் வழி ஆத்திசூடியைப் போதித்தல் என்பது நிச்சயம் மாணவர்களை ஈர்க்கும். அதிலும் ஆசிரியர் சுயமாக தனது குரல் பதிவையோ அல்லது மாணவர்களது குரல் பதிவையோ கொண்டு உருவாக்கப்படும் அசைவூட்டும் படங்கள் மாணவர்களை வெகுவாக கவர்கின்றன. ஆகவே, ஆசிரியர்கள் சுயமாகப் பாடப் பொருளை உருவாக்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**கற்றல்கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு**

தகவல் தொழில்நுட்பமானது கற்றல் கற்பித்தலின் தேவையை நிறைவு செய்ய முக்கிய பங்காற்றுகின்றது. இத்தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியால் கற்றல்கற்பித்தலைத் தெளிவாகவும், துல்லியமாகவும் திட்டமிட இயலும். பொதுவான கற்றல்கற்பித்தல் முறையை விட தொழில்நுட்பத்தின் வழியாகக் கற்பதையே மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம், பல புதிய முறைகளில் தகவலைப் பயன்படுத்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. மனனம் செய்து கற்பதைக் காட்டிலும், வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல், கற்றலை எளிமையாக்குதல், கற்போரின் வாழ்க்கை சூழ்நிலைக்கு ஏற்ப கல்வி அமைதல் ஆகியவை சாத்தியமாகும்.


**ISBN Number:** 978-81-981078-4-8


**"Plotagon" செயலி**

'Plotagon' என்பது அசைவூட்டுப் படத்தை உருவாக்கப் பயன்படுத்தப்படும் ஒரு செயலி ஆகும். இச்செயலியைக் கைத் தொலைப்பேசியிலும் கணினியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இது இலவசமான செயலி; இருப்பினும், தேவையிருப்பின் ஒரு சில பகுதிகளைப் பணம் செலுத்தியப்பின்பே பதிவிறக்கம் செய்ய முடியும். இச்செயலியின் வழி மாணவர்களுக்குப் பிடித்த கதாபாத்திரங்களை உருவாக்கி அக்கதாபாத்திரங்களைப் பேசவும் செய்யலாம்.




**படம் 1. "Plotagon" செயலியின் வழி காட்சி அமைப்பு முறை**

 **ISBN Number:** 978-81-981078-4-8




**படம் 2. "Plotagon" செயலியைக் கைத்தொலைப்பேசியில் தரவிறக்கம் செய்தல்**


**ஆத்திசூடியைத் தேர்ந்தெடுத்தல்**

ஒன்றாம் ஆண்டு மாணவர்கள் ஔவையார் இயற்றிய மொத்தம் 12 ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூற வேண்டும்; எழுத வேண்டும். ஆகவே, கற்றல்கற்பித்தலில் இடம்பெறும் ஆத்திசூடியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உதாரணத்திற்கு 'அறஞ்செய விரும்பு'.

 **ISBN Number:** 978-81-981078-4-8

## ஆத்திசூடிக்கு ஏற்ற கதையை / சூழலை உருவாக்குதல்

ஆத்திசூடியின் பொருளை விளக்கும் வகையில் கதை / சூழலை உருவாக்க வேண்டும். உருவாக்கப்படும் கதை/சூழல் மாணவர்களை மையமாகக் கொண்டும், அவர்கள் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கின்ற சூழ்நிலையைக் கொண்டிருத்தல் சிறப்பு. அச்சூழ்நிலைகளின் வழியாக மாணவர்களுக்குச் சிக்கல்களைக் களையும் உத்திகளையும் புகுட்டுவது அவசியம்.





**படம் 3. சூழலுக்கு ஏற்ற களம், கதாமாந்தர்களைத் தேர்ந்தெடுத்தல்**

சூழலுக்குப் பொருத்தமான களத்தையும் கதை மாந்தர்களையும் ‘Plotagon’ செயலியில் தேர்ந்தெடுக்க

 **ISBN Number:** 978-81-981078-4-8

வேண்டும். கதை மாந்தர்களை நமது விருப்பத்திற்கு ஏற்றவாறு நாம் தேர்ந்தெடுத்து வடிவமைத்துக் கொள்ளலாம்.




**படம் 4. குரல் பதிவு செய்து பதிவேற்றம் செய்தல்.**




**படம் 5. ஏற்புடைய இசையைச் சேர்த்தல்.**

 **ISBN Number:** 978-81-981078-4-8

காணொலிக்கு ஏற்ற பின்னனி இசையைச் சேர்த்துக் கொள்ளலாம்.




**படம் 6. காணொலியை வலையொலியில் பதிவேற்றம் செய்தல்**

'Plotagon' செயலியில் உருவாக்கப்பட்ட காணொலியை வலையொலியில் பதிவேற்றம் செய்தல். இதன் வழி மாணவர்கள் தேவைப்படும்போது அடிக்கடி அக்காணொலியைக் காண முடியும்.

**கற்றல்-கற்பித்தல் நடவடிக்கையில் காணொலியின் பயன்பாடு**

மாணவர்களுக்குச் செய்யுளைப் போதிக்கும் போது ஆசிரியர்கள் மனமகிழ் நடவடிக்கைகளை அவசியம் கற்றல் கற்பித்தலில் இடம்பெறுவதை உறுதி செய்ய வேண்டும். மனமகிழ் நடவடிக்கைகளை

 **ISBN Number:** 978-81-981078-4-8

மேற்கொள்வதன் வழி மாணவர்களிடையே கற்கும் ஆர்வத்தை மேலிடச் செய்யும், மகிழ்ச்சியான கற்றல்-கற்பித்தல் நடைபெறும், மாணவர்களின் ஆற்றலும் தனித்திறமையும் வெளிப்படும், கற்றவை மனத்தில் நன்றாகப் பதியவும் மனமகிழ் நடவடிக்கைகள் துணைபுரியும். அசைவூட்டுப் படங்களைக் கொண்ட காணொலியைக் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்தும்போது மாணவர்கள் மேற்கூறிய சூழலை உணர முடியும் என்பது திண்ணம்.

இக்காணொலிகள் ஆத்திசூடியைப் போதிக்கச் சிறந்த பாடத்துணைப்பொருளாக அமைகின்றது. இணையத்தில் *ஆத்திசூடி* தொடர்பான பல காணொலிகள் உண்டு. இருப்பினும், அக்காணொலியில் பயன்படுத்தப்படுகின்ற மொழி தமிழ்மொழி பாடத்திற்கு ஏற்றதாக இல்லை என்றே கூறலாம். கற்றல் தரத்திற்கு ஏற்றவாறு நாமே சுயமாக பாடப்பொருளை உருவாக்கும்போது அதன் பயன்பாடு மேலும் சிறப்பாக அமையும். இக்காணொலியை ஆசிரியரின் பாட நடவடிக்கைக்கு ஏற்ப பயன்படுத்தலாம். உதாரணத்திற்கு பாட அறிமுகமாகவும்,பாட நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும் பயன்படுத்தலாம். இக்காணொலியின் வழி மாணவர்கள் ஆத்திசூடியையும் அதன் பொருளையும் மிக எளிய முறையில் அறிந்துகொள்ள முடியும்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

ஆத்திசூடியையும் அதன் பொருளையும் சூழல் வழி, பல உதாரணங்களுடன் கற்பிக்கவும் இக்காணொலியைப் பயன்படுத்தலாம்.

**பரிந்துரைகள்**

இவ்வாய்வு, ஆத்திசூடியைப் போதிக்க பயன்படுத்தப்படும் பாடப்பொருளைத் தயாரித்து எவ்வாறு கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தலாம் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இவ்வாய்வின் தொடர்ச்சியாகத் தயாரிக்கப்பட்ட பாடப்பொருளைக் கொண்டு ஆசிரியர்கள் வகுப்பறையில் ஆத்திசூடியைப் போதிக்கும்போது மாணவர்களின் நிலை எவ்வாறு உள்ளது என்பதனைக் கண்டறிய பரிசோதனை ஆய்வினை மேற்கொள்ளலாம்.

**முடிவுரை**

மாணவர்களின் கல்வி வளர்ச்சி என்பது ஆசிரியரின் கற்றல்-கற்பித்தல் உத்திகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சிறந்த கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் சிறந்த தரமிக்க மாணவர்களை உருவாக்க முடியும். இன்று கல்வியுலகில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் வியப்படையும் வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த நீரோட்டத்தில் விடுபடாமல் தமிழ்க்கல்வியாளர்கள் செயல்பட வேண்டியது காலத்தின்


**ISBN Number:** 978-81-981078-4-8

கட்டாயமாகும். குறிப்பாக 21ஆம் நூற்றாண்டு அணுகுமுறையைக் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கையோடு இணைத்து ஆத்திசூடியைப் போதிக்கும் போது மாணவர்களிடையே மாற்றத்தைக் காண முடிந்தது.

**துணைக்குறிப்புகள்**


[1] *தொடக்கப் பள்ளிகளுக்கான சீரமைக்கப்பட்டக் கலைத்திட்ட தர ஆவணம்.* மலேசியக் கல்வி அமைச்சு, தமிழ்மொழி பாடநூல் ஆண்டு 1, மலேசியா.

[2] *இலக்கண இலக்கிய விளக்கவுரை*, கலைத்திட்ட தர ஆவணம், கல்வி அமைச்சு, மலேசியா.

[3] Cairncross, S., & Mannion, M. (2001). “Interactive multimedia and learning: Realizing the benefits.” *Innovations in education and teaching international*, 38(2), 156-164.

[4] vaathiy 6. *Tamil Tutorial #29 | Make easy Animation in Plotagon* | தமிழ் | May 2020. Accessed on 25 Nov 2024. https://youtu.be/2exo1Z6dAqE?si=poEN5KMq_bXWllbZ

[5] Milkova, S. (2012). “Strategies for effective lesson planning.” *Center for Research on learning and Teaching*, 1(1), 1-29.

[6] Norhayati, A. M., & Siew, P. H. (2004). “Malaysian perspective: designing interactive multimedia learning environment for moral values education.” *Educational Technology & Society*, 7, 143-152.

[7] Singh, V. P. (2007). *A Text Book of Multimedia*. United Stated: Global Media.


 **ISBN Number:** 978-81-981078-4-8

# 7

# சிறார் இலக்கியத்தில் குழந்தைச் செல்வம் படைப்பு

**முனைவர் கு. புஷ்பாவதி**, உதவிப்பேராசிரியர், சீதாலக்ஷ்மி
ராமஸ்வாமி கல்லூரி, திருச்சி - 2

## முன்னுரை

மழலை மொழியைவர்ணிக்க மொழி இல்லை. ஆம்! மழலைகளின் அழகை வருணிக்க இதைவிட வேறு வரிகள் இல்லை. அதிகாலை பூக்களையும் மிஞ்சி விடுகிறது இன்பக் குழந்தைகளின் இனிய புன்னகை. அனைவரின் உள்ளங்களைக் கவரக்கூடியது, துன்பத்திலிருந்து விடுதலை தரும் அரிய மருந்து குழந்தைகளின் புன்னகை. இவர்களை பெருமைப்படுத்தவே தோன்றியது சிறார் இலக்கியம். சிறுவர்களுக்காக எழுதப்படும் இவ்விலக்கியம் அவர்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது.

## சிறார் இலக்கியம்

மொழி நடையிலும் பொருளிலும் நூல் அமைப்பிலும் முற்றிலும் வேறுபட்டதாக சிறார்

 **ISBN Number:** 978-81-981078-4-8

இலக்கியம் அமைகிறது. குழந்தைகளின் கற்பனைச் சார்ந்த உலகத்தை நம் கண்முன் காட்டி பெரியவர்களையும் சிறியவர்களாக தன்னை மறந்து ரசிக்கக் கூடியவர்களாகக் காட்டுவது சிறார் இலக்கியத்தின் அடிப்படை சாராம்சமாகும். பதினாராம் நூற்றாண்டில் ஔவையார் தலைமையில் குழந்தை இலக்கியம் தொடங்கப்பட்டதாக இருப்பினும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சிறார் இலக்கியம் பெரிதும் தோன்றின. இருபதாம் நூற்றாண்டில் சிறந்த வளர்ச்சி பெற்றது. உலக மொழிகளில் தமிழ் மொழியில் தோன்றிய சிறார்களுக்குரிய இலக்கியம் அண்மைக்காலத்தில் வடிவம் பெற்றமை என்றாலும் அரிதிலும் அரிதாகவே நூல்கள் வெளிவருகின்றன. காரணம் இக்காலத்தில் உறவு முறைகள் புறக்கணிக்கப்படுகின்றன. பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையே இடைவெளி அதிகமாகிக் கொண்டு வருவதால் இயந்திரத்தனமான வாழ்க்கையாகிறது. இதில் ஒருவரின் மனநிலையை ஆராய்ந்து ரசித்து ஆராய்ந்து நூல் வெளிவருவது என்பது சிந்தனைக்குரியது. இதனாலே இவ்விலக்கியம் வளர்ச்சிப் பெருவதில் கடுமையாகிறது.

**சிறார் இலக்கியத்தில் முக்கிய படைப்புகள்**

ஔவையாரின் *ஆத்திசூடி*, *கொன்றை வேந்தன்*,


**ISBN Number:** 978-81-981078-4-8

பாரதியின் *ஓடி விளையாடு பாப்பா, பரமார்த்த குரு கதைகள், பீர்பால் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், அழ. வள்ளியப்பா பாடல்கள்,* கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் குழந்தைப் பாடல்கள் போன்றன சிறார் இலக்கியத்தின் முக்கிய படைப்பாக அமைகின்றன. குழந்தைப் பாடலுக்குச் சான்றாக இன்றளவும் அனைவரின் நாவிலும் உலாவிக் கொண்டிருக்கும் நிலா நிலா ஓடி வா, தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு, கை வீசம்மா கை வீசு போன்றவற்றை கூறலாம்.

**சிறார் இலக்கியத்தின் மொழிநடை**

சிறார் இலக்கியத்தைப் பொறுத்தவரை பேச்சு வழக்கையும், எழுத்து வழக்கையும் முக்கியமாகக் கொண்டுள்ளது. மக்களின் பண்பாடு, பழக்க வழக்கம் பொறுத்து நகர்ப்புற குழந்தைகளுக்கும், கிராமப்புற குழந்தைகளுக்கும் வேறுபாடு உண்டு. எனவே வட்டாரங்களுக்கு ஏற்ப குழந்தை இலக்கியப் படைப்புகள் மாறுபடுகின்றன. இந்த வட்டார வழக்குகளில் சில சிக்கல்கள் உண்டு. தாழ்த்தப்பட்டோர் வாழும் மக்களிடையே குழந்தைகளின் பேச்சு நடை வட்டார நடை மாறுபடும். அங்கு படைப்புகளும் இலக்கிய நடையில் மாறுபடும். எனவே இலக்கியம் சார்ந்த படைப்பாக அமையும் போது ஓரளவு சரியானதாக அமையலாம்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

குழந்தைகளுக்காக எழுதும் படைப்புகள் எளிய வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் தராமல் அன்றைய கால பேச்சு வழக்கில் பயன்படும் புது வார்த்தைகளை பயன்படுத்தும் போது குழந்தைகளின் ரசனையும் சிறப்பானதாக அமைகின்றது. இப்புது வார்த்தைகள் கடின வார்த்தைகளாக அமையும் போது பொருள் புரியாததால் குழந்தைகளின் மனதில் இப்பாடல் நிலைத்து நிற்காது. இதையே சுவாமிநாதன் என்ற குழந்தை இலக்கியப் படைப்பாளர் அவர்கள், "சிறுவருக்கு எழுதும் எழுத்தாளர்கள் தமது புலமையை வெளிப்படுத்தாமல், எளிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

வழக்கிலுள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும். வழக்கிலுள்ள சொல் எந்த மொழியிலிருந்து வந்தாலும் அது பற்றிக் கவலைப்படாமல் உபயோகப்படுகிற விதத்திலேயே தம் எழுத்துகளிலும் கையாள வேண்டும்." என்று தம் கருத்தைப் பதிவு செய்கிறார். அதுமட்டுமன்றி, "எந்த மொழியாயினும் அன்றாடப் புழக்கத்தில் வரும் சொற்களைப் பயன்படுத்தும் போது சிறுவர்கள் புரிந்து கொள்வார்கள். புரிந்து கொண்டால் படிக்கும் ஆசை தானாக உருவாகி விடும்" என்று சிறார் இலக்கிய நடை எவ்வாறு இருக்க வேண்டும் என சுவாமிநாதன் விளக்குகிறார். இதையே அழ. வள்ளியப்பா அவர்களும், "கொச்சைச்

சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் சிலர் கையாண்டு வருவது தவறில்லை. ஆனால் அதிக அளவு என்றால் குழந்தைகள் உள்ளத்தில் குழப்பம் ஏற்படும்" என்கிறார். இவர்களின் கருத்து அடிப்படையை நோக்கும் போது குழந்தை இலக்கியம் குழந்தைகளின் உள் உணர்வை தட்டியெழுப்பி ரசிக்க கூடியதாக அமைய வேண்டும். இதற்கு சிறந்த சொல் நடை, புதுமையான சொற்கள், புதுமையான உத்திகள் கையாண்டால் இவ்விலக்கியப் படைப்புகளில் சிறந்து விளங்கலாம்.

**சிறுவர் இலக்கிய முன்னோடிகள்**

**படைப்புப் பல படைத்து பலரோடு உண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்கும்**
**பயக்குறை இல்லை தாம்வாழும் நாளே**

**(புறநானூறு - 188)**

என்ற பாடல் வரியில் பாண்டியன் அறிவுடை நம்பி குழந்தைச் செல்வங்களைக் காட்டிலும் வேறு செல்வம் இல்லை என்கிறார்.

அதிவீர ராம பாண்டியர், உலக நாத பண்டிதர், சிவப்பிரகாச சுவாமிகள், வீரமாமுனிவர் போன்றோர்


**ISBN Number:** 978-81-981078-4-8

சிறார் இலக்கிய உலகிற்குப் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். இவ்வரிசையில் நாம் கவிமணி அவர்களின் படைப்புகளைக் கொண்டு சிறார் இலக்கியத்தின் சிறப்பையும், அவை அமையும் முறையைப் பற்றியும் இனி விரிவாகக் காணலாம்.

**கவிமணி**

கவிமணி தேசிக விநாயகம் 27சூலை 1876 ஆம் ஆண்டு சிவதாணுபிள்ளை ஆதிலட்சுமி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேரூர் கிராமத்தில் பிறந்தார். எட்வின் அர்னால்டின் *The light of Asia* தழுவி ஆசிய ஜோதியை இயற்றியவர். இவை மட்டுமன்றி வரலாற்று நோக்குடைய கவிதைகள், குழந்தைப் பாடல்கள், இயற்கைப் பாடல்கள், வாழ்வியல் போராட்ட கவிதைகள், சமூகப்பாட்டுகள், கையறுநிலைக் கவிதைகள், பல்சுவைப் பாக்கள் போன்றவற்றில் தன் முத்திரையைப் பதித்தவர். 36 ஆண்டுகள் ஆசிரியர் பணியை மேற்கொண்டவர். தமிழில் குழந்தைகளுக்காக தொடர்ச்சியாக பாடல்களை இயற்றியவர். மலரும் மாலையும் என்ற இவரது படைப்புகள் முழுமையும் குழந்தைப் பாடல்கள் பல அமைந்துள்ளன. இவருடைய படைப்புகளின் சிறப்பை உணர்ந்து சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்வேள் உமாமகேசுவரம் ‘கவிமணி’ என்ற பட்டத்தை

 **ISBN Number:** 978-81-981078-4-8

வழங்கினார். அக்டோபர் 2005இல் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டு இவரைச் சிறப்பித்தது.

**இலக்கியம் வளர்த்த கவிமணி படைப்புகள்**

வள்ளுவரின்,

> **பெறுமவற்றுள் யாமவறிவ தில்லை அறிவறிந்த**
> **மக்கட்பேறு அல்ல பிற (குறள் - 70)**

என்ற வாக்கிற்கேற்ப பொருட்செல்வம், கல்விச் செல்வம் யாவற்றையும் காட்டிலும் கல்விச் செல்வமே சிறந்தது என்பதை உணர்ந்து கொண்ட கவிமணி குழந்தைகளுக்கென்று இலக்கியம் படைத்துள்ளார். குழந்தைகள் மீது அன்பு கொண்ட கவிமணி தன் வீட்டுச் சுவர்களில் குழந்தைகள் விரும்பும் மற்றும் குழந்தை ஓவியங்கள் கொண்ட படங்களைத் தொங்கவிட்டிருப்பார். ஊரிலுள்ள குழந்தைகளை எல்லாம் தன் குழந்தையாக பாவித்தவர். **செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க் / கிந்த நூலுரியதாய் என்றும் வாழ்கவே** என்ற தம் கவிதை வரிகளை சிறார்களுக்கு அர்ப்பணம் செய்தவர். மேலும் இவர், *ஆசிய ஜோதி, மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், தேவியின் கீர்த்தனைகள், உமார் கய்யாம் பாடல்கள், குழந்தைச் செல்வம், காந்தளூர்ச் சாலை, தோட்டத்தில் மேயுது வெள்ளை பசு* போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இவற்றில் குழந்தைச் செல்வம் என்ற

 **ISBN Number:** 978-81-981078-4-8

படைப்பின் சிறப்பை ஆய்வது நம் கட்டுரையின் நோக்கமாகின்றது.

**குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**

தமிழன் என்ற பத்திரிகையில் வெளிவந்த மலரும் மாலையும் என்னும் கவிதைத் தொகுதி மழலை மொழி, இயற்கை இன்பம், காட்சி இன்பம், கதைப் பாட்டு, உள்ளமும் உணர்வும் என்னும் ஐந்து தலைப்புகளில் 46 குழந்தைப் பாடல்கள் ‘குழந்தைச் செல்வம்’ என்னும் தலைப்பின் கீழ் அமைந்துள்ளது.

**தாலாட்டு**

கிலுகிலுப்பை ஒலியினைக் கேட்டு மகிழ்ந்த குழந்தையைப் பற்றிய குறிப்பு சிறுபாணாற்றுப்படையில் காணப்படுகின்றன. இலக்கியங்கள் புகழும் மழலைகளுக்கு நாக்கு தான் மிகவும் பிடித்த விளையாட்டுக் கருவி. இதைக் கொண்டு பாடல் பாடும் போது தாலாட்டுப் பாடலாக குழந்தைகள் கேட்கின்றன. பிள்ளைப் பருவங்களில் வரும் பத்துப் பருவங்களுள் ஒன்றானது தாலப்பருவம். இந்தப் பருவங்களில் குழந்தைகளுக்கு ‘ஆராரோ ஆராரோ’ என்னும் சொற்கள் கொண்டு பாடப்படுவது கிளர்ச்சியைத் தரக்கூடியதாக அமைகின்றது.

**நெஞ்சிற் கவலையெலாம்**
**நீங்காத் திருமுகத்தில்**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**புஞ்சிரிப்பைக் காட்டி, எம்மைப்**

**போற்றும் இளமதியோ? (தாலாட்டு பா.எண். 1)**

இந்தப் பாடல்களில் கற்பனையும் பாட்டின் ஓட்டமும் சொற்களின் நடையும் பாராட்டத் தக்கனவாக அமைகின்றன.

**கல்வி**

குழந்தையாக இருக்கும் பொழுதே நல்ல எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் புகட்டி விடுதல் சிறப்பு. நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே நாளை என்னும் தோட்டத்திலே நாளை மலரும் மொட்டுகளே என்ற பாடல் வரிகளுக்கேற்ப சிறு வயதில் நாம் உணரச் செய்யும் நல்ல செயல்பாடுகளே பின்னர் அவனை சிறந்த தலைவனாக உணரச் செய்யும். இதை உணர்ந்த கவிமணி,

**நாமே நமக்குத் துணையானால்**

**நாடும் பொருளும் நற்புகழும்**

**தாமே நம்மைத் தேடி வரும்…"**

குழந்தைகளே நம்மை நம்பி வாழ்தல் சிறப்பு என அறிவுரை செய்கின்றார். அதுமட்டுமன்றி சிறந்த மனிதனாக வாழ்வதில் கல்வி மிகவும் அவசியம் என்பதை கீழ்வருமாறு வலியுறுத்துகின்றார்.

**பாடங்கள் எல்லாம்**

**படித்திட வேண்டுமோ?**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**சீக்கிரம் பள்ளிக்குச்**

**சென்றிட வேண்டாமோ? (அரசே எழுந்திரு)**

ஓடி விளையாடு பாப்பா என்ற பாடலில் காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவுக் கொடுக்கும் நல்ல பாட்டு என்ற வரிகளை உணர்த்தும் விதமாக கல்வியின் மேன்மையை அரசே எழுந்திரு என்ற பாடல் வழி விளக்கியுள்ளார். மேலும் நம் வாழ்வில் ஒவ்வொரு நேரமும் முக்கியம் அதை உறக்கத்தில் வீணடிக்கக் கூடாது என்பதை கீழ்வருமாறு உணர்த்துகின்றார்.

**செந்தாமரைகள் மலர்வதுண்டு**

**மங்கையே! காலைப் பொழுதை யுணர்ந்திட**

**மற்றும் கடிகாரம் வேண்டுமோடி? (கடிகாரம் பா)**

கவிமணி குழந்தைகளுக்கு அறிவுரை சொல்வது மட்டுமன்றி தன்னையும் குழந்தையாக பாவித்து தன் பள்ளி வாழ்க்கையை நினைவுப்படுத்தும் விதமாக கிளியுடன் பேசுவது போல் பாடல்கள் இயற்றியுள்ளார். சான்றாக கீழ்வரும் பாடல்களைக் கூறலாம்.

**சின்னஞ் சிறு பள்ளியில் - எனக்கொரு**

**சிங்காரப் பெஞ்சுமிட்டுத்**

**தின்னக் கனியளித்துப் - பால பாடம்**

**செப்புவன் வா, கிளியே! (கிளி பா.)**

**உழைப்பாளிகளின் நிலை**

**நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்போம்:**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**பெற்ற சுதந்திரத்தைப் பேணுவோம். (நாட்டுக்கே உழைப்போம் - பா. 57)**

ஒவ்வொரு குழந்தையும் எதிர்காலத்தில் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமாயின் நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி உழைக்க வேண்டும். பிறரை ஏமாற்றி வாழ்தல் முறையன்று. ஆளும் வளர வேண்டும், அறிவும் வளர வேண்டும். இது தான் மனித வளர்ச்சி என்ற பட்டுக்கோட்டையார் வரிகளை நினைவில் கொள்வது போல் குழந்தைகளுக்கு உழைப்பின் மேன்மையை விளக்குகிறார்.

**நெற்றியின் வியர்வை – நிதமும்**
**நிலத்தில் வீழ்ந்திடிலே**
**சற்றும் வாடாமல் - சுதந்திரம்**
**தழைத்து வருமப்பா! (உழைக்க வேண்டும் - 56)**

**பொதுவுடைமைச் சிந்தனை**

பாரதியின் வரிகள் போல் எழுத்து அதிர்வு இல்லையாயினும் மென்மையான வருடலாக பொதுவுடைமைச் சிந்தனையை உணர்த்தும் கவிமணி வரிகள் சிறப்பிற்குரியது.

**தருமம் தழைத்திடவே**
**சத்தியம் ஓங்கிடவே**
**பருவமழை பொழிந்த**
**பயிர்கள் செழித்திடவே.**


**ISBN Number:** 978-81-981078-4-8

**திருவளர் கலையெல்லாம்**

**தினமும் வளர்ந்திடவே**

**அருள்வழி போற்றி மக்கள்**

**அனைவரும் வாழ்ந்திடவே...** (திருவடி

**தொழுகின்றோம் - பாடல் எண். 58)**

இந்த உலகம் உய்யும் படியாக இயற்கையை வணங்கிய முறை போற்றுதற்கரியதாகும்.

**உண்ட சோற்றை எண்ணி**

**உயிரும் விடத் துணிபவன்**

**மண்டலத்தில் நாய்போல்**

**வாய்ந்த துணை உண்டோ? (நாய்)**

மனிதன் பிறருக்குத் துரோகம் செய்தல் தவறு. அது நம்மை சிறப்புற வாழ வைக்காது என்பதை நாய்களோடு ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

**சிறையில் வாழும் வாழ்வுக்குச்**

**சிறகும் படைத்து விடுவானோ?**

**இறைவன் அறியாப் பாலகனோ**

**எண்ணி வினைகள் செய்யானோ? (கிளி)**

மிருகங்களை அடிமையாக வைத்திருக்கும் மனிதன் இன்று மனிதர்களை அடிமைத்தனமான நடத்தி வருதலை கண்டிக்கின்றார். பாகுபாடான உலகில் மேலவர், கீழவர் என்ற நிலைமாறி அனைவரும் சமம் என்று சிறகு விரித்து பறக்க மாட்டாரோ என கிளியிடம் கூறுவது போல் தன்

 **ISBN Number:** 978-81-981078-4-8

வேதனையை குழந்தைகளுக்கு உணர்த்துவதாக இந்த பாடல் அமைந்துள்ளது.

**ஜாதிச் சண்டையெலாம் - ஓய்ந்து**
**தணிய வேண்டுமப்பா!**
**நீதி நாடெங்கும் - நிலைத்து**
**நிற்க வேண்டுமப்பா!**
**உலக மக்களெலாம் - அன்போடு**
**ஒரு தாய் மக்களைப் போல்**
**கலக மின்றி வாழும் - காலம்**
**காண வேண்டுமப்பா! (உழைக்க வேண்டும் -**
**பா. எண். 56)**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கிடின் அனைவரின் வாழ்வும் தாழ்வாகி விடும்.

**வெற்றுரை பேசித் திரிய வேண்டாம் - இன்னும்**
**வீணாய்ப் புராணம் விரிக்க வேண்டாம்.**
**சாதி இரண்டலால் வேறுளதோ? – ஔவைத்**
**தாயின் உரையும் மறந்தீரோ! (ஒற்றுமை –**
**பா. எண். 54)**

மேல் சாதி, கீழ் சாதி என பாகுபாடு கருதாது அனைவரும் ஒற்றுமையுடன் பொதுவுடைமைச் சிந்தனையுடன் இருந்து விட்டால் நாடு வளம் பெறும் என்பதை தெளிவாக சிறார்களுக்கு உணர்த்தி இனிவரும்


**ISBN Number:** 978-81-981078-4-8

காலங்களில் ஒற்றுமையுடன் திகழ வேண்டும் என வலியுறுத்துகிறார்.

**தாயிற் சிறந்ததப்பா! – பிறந்த**
**தாய்நா டது பேணார்**
**நாயிற் கடையரென - இந்த**
**நாணிலம் சொல்லும், அப்பா! (வீரத்தாய் - பா. எண். 55)**

எனவே ஒற்றுமையாக உழைத்திடுவோம், நாட்டில் உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம் என்ற கவிமணியின் சொற்களை மனதில் கொண்டு குழந்தைகளே புதியதொரு உலகத்தில் அடியெடுத்து வையுங்கள்.

**பெரியோரைப் போற்றுதல்**

பெரியோர்களின் மீது மரியாதையும் அன்பையும் எடுத்துக் கூறி வளர்க்கும் வேளை குழந்தைகளின் எதிர்காலம் சிறப்படையும் என்பதை கீழ்வருமாறு உணர்த்துகின்றார்.

**கூழுக்காகக் கவிபாடும்**
**கூனக் கிழவி அவளுரையை**
**வாழும் வாழ்வில் ஒருநாளும்**
**மறவோம் மறவோம் மறவோமே!**

**முடிவுரை**

குழந்தைகளின் மனதை அறிந்தவர், பேச்சில் மகிழ்வது மட்டுமன்றி அவர்களோடு உரையாட

 **ISBN Number:** 978-81-981078-4-8

விரும்புபவர் கவிமணி. கூழைக் குடித்தாலும் குளித்த பிறகு உண்ண வேண்டும். இரவில் நன்றாக உறங்க வேண்டும். இது குழந்தைகளுக்கு மட்டுமன்றி பெரியோர்களுக்குக் கூறும் அறிவுரையாகவும் அமைகின்றது. இவ்வாறு குழந்தை விரும்பும் இனிய பாடல் தந்தவரான இவர், அன்னை ஊட்டும் அமுதம் போல் அழகு பட பாடல் புனைவதில் வல்லவர். இவர் பாடல்களை மழலையர் இன்றளவும் பாடுவதால் இவரை குழந்தைக் கவிஞர் என்று புகழ்வதில் மாற்றுக் கருத்து எதுவுமில்லை.

**பார்வை நூல்கள்**

[1] புறநானூறு – 188.

[2] குழந்தை இலக்கிய வரலாறு – பக்.27

[3] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை – பக்.120

[4] சிறுபாணாற்றுப் படை – பாடல். 55

 **ISBN Number:** 978-81-981078-4-8

# 8

# சிறார் இலக்கியங்களில் வெளிப்படும் உணர்ச்சிகள்

**முனைவர் பீ. பெரியசாமி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம். ஜி. ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி, ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா,

**ஆய்வுச்சுருக்கம்**

*உணர்ச்சிகள் நிறைந்ததே உண்மையான படைப்பு. அந்தவகையில், சிறார் இலக்கியங்களில் காணப்படும் கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளை உணர்த்துவதில் உணர்ச்சிச் சொற்கள் சிறந்த பங்கு வகிக்கின்றன. இரு வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்த ஒரே சொல்லை பயன்படுத்தும் போக்கும் இங்குக் காணப்படுகிறது.இவற்றில் சொல்லை உச்சரிக்கும் தொனியே பொருள் வேறுபாட்டை உணர்த்த உதவுகிறது. கதாபாத்திரங்களின் உரையாடல்களில் தான் பெரும்பாலும் உணர்ச்சிச் சொற்கள் உள்ளன. இவை திறமான கதாபாத்திர படைப்பிற்கு அவசியமாகின்றது. எனவே, சிறார் இலக்கிய வகைகளில் உணர்ச்சி சொற்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.*

 **ISBN Number:** 978-81-981078-4-8

**முக்கியச்சொற்கள்:** சிறார் இலக்கியம், குழந்தை இலக்கியம், உணர்ச்சி, மெய்ப்பாடு, குழந்தை.

**முன்னுரை**

சிறார் இலக்கியம் என்பது தனித்த இலக்கியமாக பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் தொடங்கினாலும் அதன் அடிப்படைகள் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களிலேயே நம்மால் காண முடிகின்றது. சிறார் இலக்கியம் என்பது இயைள தலைமுறையினரை முறைப்படுத்துவதற்கு அடிப்படைத் தேவையாக இருக்கின்றது. அதனடிப்படையில் நாம் பாரத்தோமானால் ஔவையின் ஆத்திச்சூடியும் சிறார் இலக்கியம் என்றே கொள்ளலாம். சிறார்களுக்கு தேவையான அறக்கருத்துக்களையும் வாழ்வியல் நெறிகளையும் போதிப்பனவாகவே சிறார் இலக்கியங்கள் இருந்து வருகின்றன. மனிதனின் ஒவ்வொரு செயலில் உணர்ச்சி என்பது பொதிந்திருக்கும் அது சில வேளைகளில் இயல்பாகவும் சில வேளைகளில் செயற்கையாக நாம் வரவழைத்துக் கொள்வதாகவும் இருக்கும். இலக்கிய ஆசிரியர்கள் பெரும்பாலும் தம் படைப்புகளில் உணர்ச்சிகள் மேலோங்கியிருக்க வேண்டும் என்றே கருதுவர். அவ்வாறான உணர்ச்சிகள்

 **ISBN Number:** 978-81-981078-4-8

சிறார் இலக்கியத்தில் எவ்வாறுஉள்ளது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**சிறார் இலக்கியமா? குழந்தை இலக்கியமா?**

சிறுவர்களுக்காக எழுதப்படும் இலக்கியம் சிறார் இலக்கியமா? குழந்தை இக்கியமா என்பது ஒரு சிக்கலாகவே இருந்து வருகின்றது. இதற்கு தீர்வு காணும் வகையில் ஒருசில அறிஞர்கள் முன்வைக்கும் கருத்துக்களை இங்கே காண்போம். முதலாவாக,

> **சிறுவர்இலக்கியம்என்பதுபேசத்துவங்கும்குழந்தைமுதல்சுமார்பதினான்குவயதுவரையிலானகுழந்தைகளுக்கானஇலக்கியம்ஆகும்.**
>
> **ஏழுவயதுவரையிலானோர்க்கானஇலக்கியத்தைக்குழந்தைஇலக்கியம்என்றும்அதற்கும்அதிகமானவயதினருக்கானதைச்சிறுவர்இலக்கியம்என்றுவகைப்படுத்துகின்றனர்.**
>
> **இரண்டுவகையினருக்குமானதேவை, வடிவம், களம், மொழி ஆகியவை நுட்பமாக மாறுபடும். ஆனாலும் பொதுவாக இவை இரண்டும் சிறுவர் இலக்கியம் என்றே பரவலாக வழங்கப்படுகின்றது. (தமிழ்க்களம், சிறுவர் இலக்கியம்)**

என்று *தமிழ்க்களம்* கூறுகின்றது. இதில் ஏழு வயதுவரை உடையோரால் படிக்கும்படி இயற்றப்படுவதை குழந்தை

 **ISBN Number:** 978-81-981078-4-8

இலக்கியம் என்றும் ஏழு வயதுக்குமேல் பதினான்கு வயதுவரை உள்ளோர்கள் வாசிக்குமாறு எழுதப்படுவது சிறுவர் இலக்கியம் என்றும் கூறுகிறது. ஆனால், இந்த பகுப்பு எதனடியில் பகுக்கப்படுகிறது. இதற்கு முன் யாரேனும் இதற்கு அடிப்படையாக ஏதேனும் செய்துள்ளனரா என்பதற்கு எவ்வித விடையும் இல்லை. மேலும்,

> **குழந்தை இலக்கியம் என்னும் பெயரைவிடச் சிறுவர் இலக்கியம் என்னும் பெயரே பொருத்தமாக இருக்கிறது என்பது என் முடிவு. (பூவண்ணன், சிறுவர் இலக்கிய வரலாறு, ப.7.)**

என்கிறார் பூவண்ணன். இவர் நேரடியாகவே எனக்கு இதுதான் சரியெனத் தோன்றுகின்றது என்று சொல்லிவிட்டார். அதனடிப்படையிலேயே நானும் சிறார் இலக்கியம் என்பதே சரியான சொல் எனக்கூறகின்றேன்.

**சிறார் இலக்கியத்தின் தேவை**

இன்றைய இளைய சமுதாயத்தினரிடையே வாசிக்கும் திறன் குன்றி வருகின்றது என்பதை எவராலும் மறுக்கவியலா உண்மையாகும். இவ்வாறான சூழலில் ிறார்கள் வாசிப்பு என்பது மிகப்பெரிய கேள்விக்குரியே. அவ்வாறான சூழலில் நாம் ஏன் சிறார் இலக்கியத்தைப் படைக்க வேண்டும். சிறார் லக்கியத்தின் முக்கியத்துவம் என்ன என்பதைக் காணலாம். இதனை,

 **ISBN Number:** 978-81-981078-4-8

**குழந்தைகளின்கேட்கும்திறனைமேம்படுத்தவும்சிந் தனைத்திறனைவளர்க்கவும்குழந்தைகளிடம்பேச வேண்டியுள்ளது . குழந்தைகளுக்குப் பேச்சின் ஒருகருத்தைப் பதியவைப்பதைவிட பாடல் வழி எளிமையாக புரியவைக்க முடியும். அதனாலேயே அக்காலகட்டத்தில் குழந்தைகளுக்குத் தாலாட்டுப் பாடல் வழி உறவுகளையும், மரபுகளையும், வரலாற்றுச் செய்திகளையும், குடும்பப் பெருமைகளையும் பாடி வெளிப்படுத்தினர். (களஞ்சியம்)**

இது ஆரம்ப கால மரபாக இருந்தது. ஆனால், இன்றைய நிலை இதற்குநேர் மாறாக உள்ளது. எனவேதான்,

**குழந்தை இலக்கியத்தைப் புறக்கணித்தால், வருங்காலத்தில் பிற இலக்கியங்கள் புறக்கணிக்கப்படும். இன்றைய சிறுவர்கள் நாளைய பெரியோர்கள்! வருகாலச் சமுதாயத்தை உருவாக்கும் வன்மை பெற்றவர்கள். இதைத் தான் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவும் கூறுகிறார்.**

**ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார். நாடு காக்கும் நாளைய தலைவர்கள் நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டுமானால் இன்றைய சிறுவர்களின் மனம் பண்பட**

 **ISBN Number:** 978-81-981078-4-8

> **வேண்டும். அதைச் செய்ய வல்லது சிறுவர் இலக்கியம். (பூவண்ணன், சிறுவர் இலக்கிய வரலாறு, பக். 12-13)**

என்று பூவண்ணன் சிறுவர் இலக்கியத்தின் தேவையையும், அதனால் குழந்தைகளிடம் ஏற்படும் தாக்கங்களையும் தெரிவித்துள்ளார். அவர் மேலும்,

> **சிறுவர் இலக்கியம் எங்கே வளர்ந்துள்ளதோ, அங்கே மிகச் சிறந்த சமுதாயம் உருவாகும். ஆம், சிறுவர் இலக்கியம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் சக்தி வாய்ந்தது. (பூவண்ணன், சிறுவர் இலக்கிய வரலாறு, ப. 13)**

என்று கூறி சிறுவர்களுக்கான இலக்கியம் எங்கு அதிகமாகப் படைக்கப்படுகிறதோ வாசிக்கப்படுகிறதோ அங்கு சிறந்த சமுதாயம் உருவாகும் என்ற நம்பிக்கையூட்டியுள்ளார். எனவே, சிறந்த சமுதாயம் உருவாக சிறார் இலக்கியம் மிக முக்கியப் பங்காற்றுகின்றது என்றால் அது மிகையாகா.

**தொல்காப்பியமும் சிறுவர் இலக்கியமும்**

தொல்காப்பியர் காலத்திலேயே குழந்தை இலக்கியம் பற்றிய சுவடுகள் இருந்துள்ளன. அதனை. ‘பிசி’ என்று அழைத்துள்ளனர். இதனை,

> **ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந்**
> **தோன்றுவது கிளந்த துணிவி னானும்**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே. (தொல். பொருள். நூ. 488)**

என்று *தொல்காப்பியம்* கூறுகின்றது.

தன்கண் உள்ள ஒப்புமைக் குணத்தோடு பொருந்தி வருவதை உவமப்பொருளாகவும் ஒன்று கூற ஒன்று தோன்றும் துணிவினதாகவும் பிசி இருவகைப்படும் என்கிறது *தொல்காப்பியம்*. பிசி என்பது விடுகதை. இது சிறுவர்களுக்கே பெரும்பாலும் உரியது. வீட்டிலுள்ள பெரியோர்கள் குழந்தைகளின் அறிவுத்திறன் மேம்பட இந்த விடுகதைகளைப் போட்டனர். எனவே, பிசி என்பது சிறுவர் இலக்கியக் கூறு என்பது தெளிவு. பிசி என்பதற்குப் பேராசிரியர்,

**'பிறை கவ்வி மலை நடக்கும்'**

**'நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடில்**
**ஊராடு நீரில்காக் கை'**

எனும் இரண்டு விடுகதைகளை உதாரணமாகக் கூறியுள்ளார். முறையே, முதலாவது யானையைக் குறிக்கிறது. அதாவது, யானை மலை போல உள்ளது. பிறை போன்ற தந்தங்களை வாயில் வைத்திருப்பது பார்ப்பவர்களுக்கு தந்தங்களைக் கவ்விக் கொண்டுள்ளதைப்போல காட்சி தருகிறது. இரண்டாவது நெருப்பைக் குறிக்கிறது. குளிக்காத பார்ப்பானாம். ஆனால், அவன் குளித்தாலோ ஊரார் குளிக்கும் நீரில்

 **ISBN Number:** 978-81-981078-4-8

காக்கை குளித்தெழுந்தால் எப்படி இருக்குமோ அப்படி கருப்பாக மாறிவிடுவானாம் என்பது நேரடி பொருள். ஆனால், விறகு எரியும் போது பலபலப்பாக இருக்கும். அதன்மீது தண்ணீர் படாதவரை தன்னிலை மாறாது. ஆனால் எல்லோரும் பயன்படுத்தும் நீர் அதன்மீது பட்டால் நெருப்பு அனைந்து கரிக்கட்டையாக மாறிவிடும் என்பதே இதன் உள்ளார்ந்த பொருளாகும். இதன்வழி இளம்பூரணர் பிசி என்பதை விளக்க விடுகதையைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் பிசி என்பது விடுகதையே என்பதும் அறியப்பட்டது.

**காலம் கடந்த சிறார் இலக்கியம்**

மாற்றூர்க்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் பாடிய,

> **முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்**
> **பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி**
> **வருகுவை யாயின் தருகுவென் பால் (அகநானூறு, பா. 54)**

எனும் பாடலில் தாய் தன் மகனுக்கு நிலவை அழைத்துச் சோறு ஊட்டுகிறாள். நிலவாக விளங்கும் இளம் சந்திரனே பொன்னாலாகிய ஐம்படைத் தாலி அணிந்த என் மகனோடு விளையாட நீ வந்தால் நான் உனக்கும் பால் தருவேன் என்று அழைக்கிறாள். தாய்மார்கள் பாடல்பாடி சோறு ஊட்டும் மரபு சங்க காலத்திலேயே இருந்துள்ளது.

 **ISBN Number:** 978-81-981078-4-8

அம்மரபிற்குரிய பாடல்களும் அப்போதே இருந்துள்ளன என்பது இதன்வழி அறியலாகிறது. இன்றும்,

**தம்பி! சோறு! வாய்திற!**

**தளிரே! சோறு! வாய்திற!**

**கொம்புத் தேனே! வாய்திற!**

**குளத்துப் பூவே! வாய்திற! (வாணிதாசன், குழந்தை இலக்கியம், ப. 6)**

எனத் தாய்மார்கள் குழந்தைகளுக்குச் சோறூட்ட அழைப்பதாகப் பாடியுள்ளார கவிஞர் வாணிதாசன். இதன்வழி, எத்தனை காலங்கள் கடந்தாலும் தாய் – மக்கள் (பிள்ளைகள்) பாசப்பிணைப்பு என்பதும் உணர்வுகள் என்பதும் மாறுபடாமல் பண்பாட்டு கலாச்சார மாறுபாடுகளுக்கு ஆட்படாமல் நிலைத்திருக்கின்றன என்பதை நம்மால் அறிந்துக்கொள்ள முடிகிறது. மேலும், தாய் இல்லா விட்டால் சோறு இல்லை என்பதை,

**அம்மா உனக்கு இல்லையா?**

**அழுக்கைப் போக்க வில்லையா?**

**சும்மா எங்கே திரியுறே?**

**சோறு எங்கே உண்கிறே? (அடிகளாசிரியர், ப.22)**

என்று கேட்டு இவ்வுலகில் தாய் இல்லை என்றால் யாவரும் அனாதைகளே. எத்தனை உறவுகள் இருப்பினும் தாய் எனும் உறவு இல்லையெனில் உலகமே வெற்றிடம்


**ISBN Number:** 978-81-981078-4-8

என்பதை உணர்த்தவே அம்மா உணக்கு இல்லையானால் உன் உடலில் உள்ள அழுக்கு போக்கவும், நீ அலைந்து திரிந்தாலும் ஏன் எனக் கேட்கவும், உணவு கொடுக்கவும் யாரும் இருக்கமாட்டார்கள் என்பதை எளிய பாடல்வரிகளில் ஆழந்த பொருளைத் தெளிவு படுத்தியுள்ளார்.

**சிறார் இலக்கிய படைப்பாளர்கள்**

குழந்தைமொழி தெரிந்தவர்களாலேயே சிறார் இலக்கியம் படைக்க முடியும். பொதுவான இலக்கியங்களை எழுதும்போது அந்த பிரச்சினை இல்லை. குழந்தைகளுக்காக எழுதினால் அது குழந்தை மொழியில் தான் இருக்க வேண்டும். பெரியவர்கள் குழந்தைகளுக்காக எழுதும்போது அவர்கள் குழந்தைகள் மொழியை உணர்ந்து அவற்றை தம் படைப்பில் கையாள வேண்டியிருக்கிறது. அவர்கள் பெரியவர்கள் என்கின்ற கூடுவிட்டு சிறார் என்ற கூட்டிற்குள் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால் தான் குழந்தைகளுக்காக எழுதுவது அவ்வளவு எளிதானதல்ல என்று கூறுகிறார்கள். மேலும், அதனை எழுதுபவர்களும் வாசிப்பவர்களும் வெளியிடுபவர்களும் பெருமளவு குறைந்துவிட்டனர். இதனை,

> **குழந்தை இலக்கியம் படைப்பதற்கான படைப்பாளர்களும் இன்று வெகுவாகக் குறைந்து**

 **ISBN Number:** 978-81-981078-4-8

> **விட்டார்கள். அவர்களுக்கான பதிப்பகங்களும் இன்று இல்லை. புத்தகச் சந்தையில் இன்று பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கும் மற்றும் கொடுக்க நினைக்கும் பல நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவையாகவே உள்ளன. தங்களின் உயர்வை அது காட்டும் என்ற வெகுசன மக்களின் மனநிலையை இங்குக் காணமுடிகிறது. (ஜான்சன்)**

என்கிறார் ஜான்சன். மேலும், சிறார் இலக்கியப் படைப்பாளிகள் வட்டார மொழிகளையே பயன்படுத்த வேண்டும் என்பதை,

> **வட்டாரமொழியே குழந்தையின் வாழ்க்கை மொழியாக இருக்கிறது. செயற்கையானவாக்கிய கட்டமைப்பும் சொல்லாட்சிகளும் வாழ்க்கை மொழியான வட்டாரமொழியில் கிடையாது. (சுகுமாறன்)**

என்கிறார் சுகுமாறன்.

**குழந்தைச் செல்வம்**

எல்லா செல்வங்களைக் காட்டிலும் உயர்ந்த செலர்வமாக இன்றளவும் போற்றப்படக்கூடியது இக்குழந்தைச் செல்வம். மழலையின் பேச்சை கேட்காதவர்கள் தான் கிளியின் பேச்சை அழகென்பர். மழலை பிசைந்து ஊட்டும் சோற்றின் சுவையறிதார்தான்


**ISBN Number:** 978-81-981078-4-8

மற்ற உணவினை சுவையென்பர். இப்படியிருக்க அடிகளார் குழந்தைச் செல்வம் குறித்து,

**காற்றும் மழையும் விரவி உழவர்க்குக்**
**காட்சி அளித்ததென**
**ஆற்றலும், அன்பும் அடைந்த குழந்தைகள்**
**அண்டை இருந்திடிலோ,**
**ஏற்ற மனத்தில் எழுந்த கவலைகள்**
**ஏக நலம்பெறுவோம்**
**சாற்று பெரும்பொரு ளாவன நன்னெறிச்**
**சாரும்நம் பிள்ளைகளே. (அடிகளாசிரியர், ப.4)**

என்கிறார். இதில் நம் பிள்ளைகளை தூரத்தில் வைத்திடலாமா? பெரும்பொருளாக இருப்பது நம் பிள்ளைகளே எனப் பிள்ளைகளின் பெருமைகளை எடுத்துரைக்கின்றார். மேலும்,

**காட்டுக் குயிலிசை வெண்ணில வோடு**
**கலந்து கலிப்பதென**
**பாட்டும், சிரிப்பும் படைத்த குழந்தைகள்**
**பக்கம் இருந்திடிலோ,**
**வாட்டம் சிறிதும் மனத்திடை இல்லை;நம்**
**வாழ்வும் நலம்பெறுமோ,**
**நாட்டுப் பெருஞ்செல்வ மாவன என்றைக்கும்**
**நம்முடைப் பிள்ளைகளே. (அடிகளாசிரியர், ப.4)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

என்கிறாரவர். இதில், குழந்தைகளின் சிரிப்பு நம் வாட்டத்தைப் போக்கும். அவர்களே நம் வாழ்வின்பெருஞ் செல்வங்கள் என்கிறார். எனவே எல்லா செல்வத்தைக் காட்டிலும் குழந்தை செல்வமே நம் வாழ்வு நலம் பெற உதவும் என்பது அறியலாகின்றது.

**மெய்ப்பாடு**

இலக்கியம் வெளிப்படுத்தும் உணர்ச்சியானது, குழந்தைகளைத் தொடும் ஆற்றல் பெற்றதால் தான், இலக்கியம் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இதனை, **"இலக்கியத்தின் உயிர்நிலை அதில் பொதிந்துள்ளதும், அதனின்று வெளிப்படுவதுமாகிய உணர்ச்சி. உணர்ச்சியற்ற இலக்கிய வடிவம் உலகில் நிலைகொள்வதில்லை." (செந்துறைமுத்து. தமிழின் வடிவங்கள், ப. 101)** என்பர். இலக்கிய மாந்தர் அடையும் உணர்ச்சிகளை குழந்தைகளும் பெற எழுத்தாளர்கள் பல வெளிப்பாட்டு முறைகளைக் கையாளுகின்றனர். அவற்றில் ஒன்று பாத்திரப்படைப்பு. அந்த பாத்திரம் என்ன உணர்ச்சியை அடைகிறது என்பதை சுட்டிக்காட்டலாகும்.ஒருவர் படைப்பில் பாத்திரங்களின் கூற்றோ, உரையாடலோ இடம்பெறும் போது, பாத்திரத்தின் சொற்கள் எத்தகு உணர்ச்சியில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை படைப்பாளர் சுட்டிக்காட்டுகிறார்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

'காட்டுக்கு யார் ராஜா?' என்று சிறுகதையில் புலியானது, சிங்கத்தின் கூட்டத்தைப் பார்த்து யார்? என்னுடன் மல்யுத்தம் செய்ய வருகிறீர்கள் என்று ஆவேசமாகக் கேட்கிறது. சிங்கம் நரியுடன் இது பற்றி கலந்தாசிக்கிறது. காலதாமதமானதால் புலி,

> **என்னுடன் மோத உங்களில் யாருக்குமே தைரியம் இல்லையா? நான் தான் இனிமேல் இந்தக் காட்டின் தலைவனா?" என்று அகங்காரத்துடன் கேட்டது. (கஸ்தூரிரங்கன், காட்டுக்கு யார் ராஜா?, ப. 4)**

இவ்வுரையாடலில் ஆசிரியர் பயன்படுத்தியுள்ள 'அகங்காரம்' என்ற சொல் புலி எத்தகைய உணர்ச்சியில் பேசியது என்பதை உணர்த்த உதவுகிறது.

'வணக்கம் செய்த வளையாபதி' என்ற நாவலில் சிங்கமணியும், தங்கமணியும், புதிர் நிறைந்த கெட்டிக்காரனான வளையாபதியை கோட்டைக்குள் அனுப்பிவிடுகின்றனர். எப்படியும் விரைவில் திரும்ப வந்துவிடுவான் என்று நினைத்தனர். ஆனால் பலநாள் ஆகியும் அவன் திரும்ப வரவில்லை. இதனால் தங்கமணி, **"அந்த வளையாபதி இவ்வளவு மக்கு என்று நமக்குத் தெரியாதே! கெட்டிக்காரன் கோட்டையைப் பற்றிச் சொல்லாமல் இருந்திருக்கலாமே." (மோகனரங்கன், கோ. வணக்கம் செய்த வளையாபதி, ப. 90)** என்று

 **ISBN Number:** 978-81-981078-4-8

சிங்கமணியிடம் கூறுகிறான். இக்கூற்று வருத்தத்தோடு அமைந்திருப்பதை நம்மால் உணர்ந்துக் கொள்ள முடிகின்றது. 'இசையைக் கேட்குமா பாம்பு' என்ற நூலில், பாம்பாட்டி பாம்பின் தலையில் நாகரத்தினம் இருக்கு என்று கூறியதைப் பெரியவர் கண்மூடித்தனமாக நம்புகிறார். உடனே அவர் பாம்பாட்டியிடம், அந்தப் பாம்பையே எனக்குக் கொடுத்துடேன். நீ கேட்கிற பணம் தர்றேன். அது இறந்ததும் நானே அந்த இரத்தினத்தை எடுத்துக்கறேன் என்கிறார். இதை ரேவதி, **"பெரியவர் அடக்கமுடியாத ஆவலுடன் கேட்டார்" (ரேவதி. இசையை கேட்குமா பாம்பு? ப. 6)** என்று கூறுகிறார். ஆசிரியரின் நேரடியானப் பங்களிப்புக்கு இடந்தரும் நாவல், சிறுகதை, அறிவியல் படைப்புகள் ஆகிய இலக்கிய வகைகளைக் காட்டிலும்நாடகத்தில் உணர்ச்சி அதிகளவில் காணப்படுகிறது. இவ்விளக்கிய வகையில் பாத்திரம் என்ன உணர்ச்சியில் பேசுகின்றது என்பதைப் படைப்பாளி தம் படைப்பில் அடைப்புக்குறிக்குள் இட்டுக் காண்பிக்கிறார். 'வீரப்பதக்கம்' என்ற நாடகத்தில், வரும் விடுதி மேனேஜர், விடுதியில் சிகரெட்டும் தீப்பெட்டியும் இருப்பதைக்கண்டறிகிறார். இதுபற்றி மாணவர்களிடம் கேட்கிறார்.

> **மேனேஜர் (கோபத்துடன்) இந்த சிகரெட்டுப் பாக்கெட்டையும், தீப்பெட்டியையும் யார்**


**ISBN Number:** 978-81-981078-4-8

**வைத்திருந்தாங்க? நீங்களா உண்மையைச் சொல்லிடுங்க? (நாகப்பா நாச்சியப்பன். வீரப்பதக்கம், ப. 33)**

இவ்வாறு அனைத்து இலக்கிங்களிலும் படைப்பாளியின் உணர்ச்சியானது அவன் படைக்கும் படைப்பினூடாகவே வெளிப்படுகின்றது. இதனால் வாசகனும் அதை வாசிக்கும் போது உணர்ச்சி வயப்பட்டு அந்த படைப்பினூடாகவே தன்னை பயணிக்க வைத்துக் கொள்கிறான். எனவே, படைப்பின் முக்கிய கூறு உணர்ச்சியே என்றால் அது மிகையாகா. இதுவே படைப்பாளியின் படைப்பினை வாசிக்கும் வாசகனை படைப்பினுள் கட்டிப்பிணைக்கின்றது.

**உணர்ச்சி சொற்கள்**

சிறார் இலக்கியத்தில் உணர்ச்சிகளைச் சுட்டிக்காட்டும் முறை பெரும் அளவில் பயன்படுத்தப்படுகிறது. ‘முட்டாள்’ என்ற சொல், செல்லமாக அழைக்கவும் பயன்படுகிறது. கோபத்தில் பேசும்போதும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, ஒரே சொல் கூட மனிதர்களின் உணர்ச்சிகளுக்கு ஏற்ப வெவ்வேறு பொருளை அடைவதைக் காணலாம். எனவே, படைப்பில், பாத்திரங்கள் என்ன உணர்ச்சியில் பேசுகின்றனர் என்பதை அறிவது அவசியமாகிறது. படைப்பாளி சுட்டும் உணர்ச்சிகளைப்பாத்திரங்களின்

 **ISBN Number:** 978-81-981078-4-8

கூற்றில் ஏற்றி, சிறார்கள் கற்பனையில் காட்சிப்படுத்திக் காண்கின்றனர். இதன் மூலம் படைப்பாளி வெளிப்படுத்தக் கருதிய உணர்ச்சியைச் சிறார்கள் அடைகின்றனர். மேலும், இதுபாத்திரத்தின் இயல்பினை உணர்த்தவும் உதவுகிறது.

> **கவிதையின் உயிர் போன்ற பகுதி அதில் பொதிந்துள்ள உணர்ச்சி. உணர்ச்சி இல்லாத கவிதை வெற்றெனத் தொடுக்கப் பெற்ற ஒரு சொற்கோவையே. (சுப்புரெட்டியார், நா. பாட்டுத்திறன், ப. 6)**

என்பர் ந. சுப்பு ரெட்டியார். கவிதைக்கு மட்டுமின்றி எல்லா இலக்கிய வகைகளுக்குமே உணர்ச்சி இன்றியமையாதது. படைப்பாளர்கள் தங்கள் எண்ணத்தில் உருவாக்கிய உணர்ச்சியைக்சிறார்கள் பெறுவதற்குப் பல வெளிப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். படைப்பாளர்கள் காட்டிய உணர்ச்சியோடு சிறார்கள் ஒன்றும் போது, அப்படைப்பு சிறப்படைகிறது.

> **சுருக்கமாகச் சொன்னால் ஒவ்வொரு இலக்கியத்திற்கும் உருவம், கற்பனை, நடை, கருத்து எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது உணர்ச்சி. (பிச்சமுத்து, ந.**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும். ப. 81)**

என்கிறார் ந. பிச்சமுத்து. அதற்காக எழுத்தாளர்கள் கையாளும் பல உத்திகளில் ஒன்று தான் உணர்ச்சி சொற்களைப்பயன்படுத்தவாகும்.மனித வாழ்க்கையில் மகிழ்ச்சி, துன்பம் வியப்பு என ஒவ்வொரு உணர்வைஅடையும்போதும் மனிதன் அவற்றை வெளிப்படுத்த சில சொற்களைப் பயன்படுத்துகிறான். அவற்றைக் கூர்ந்து நோக்கிய படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளிலும் அவற்றை அவ்வாறே பயன்படுத்துகின்றனர்.

**நகைச்சுவை**

நகைச்சுவை சிறார்களால் மிகவும் விரும்பக்கூடிய ஒன்று. எனவே, இது சிறார் படைப்புகளில் பரவலாக காணப்படுகிறது. தொடக்க கால ஏட்டிலக்கியங்கள் சில சிறார்களுக்கு நகைச்சுவை ஊட்டுவதாகவே அமைந்தன. சிறார்களுக்காக கூறப்படும் முன்னோடி கதையான வீரமாமுனிவரின், ‘பரமார்த்த குரு கதை’ முழுவதும் நகைச்சுவையை மையமாகக் கொண்டுள்ளது. மரியாதை ராமன் கதை, தெனாலிராமன் கதை போன்றவும் நகைச்சுவையைத் தூண்டுவனவாகும். படைப்புகளில் நகை உணர்வை தோற்றுவிக்க எழுத்தாளர்கள் திட்டமிடுகின்றனர். இருப்பினும், அதை பொருத்தமான

 **ISBN Number:** 978-81-981078-4-8

சொற்களிலும் தொடர்களிலும் வெளிப்படுத்தும்போதே நகைச்சுவை உணர்ச்சியை சிறார்களிடம் தோற்றுவிக்க முடிகிறது. சிறந்த மொழி ஆற்றல் பெற்றவரே நல்ல நகைச்சுவையைத் தோற்றுவிக்க முடிகிறது. இதற்கு தமிழ் இலக்கியத்தில் காலமேகப்புலவரை எடுத்துக்காட்டாக கருதலாம். இன்றைக்கு சிறார்கள் இலக்கியங்களை விரும்புமாறு செய்ய பரவலாக நகைச்சுவை பயன்படுத்தப்படுகிறது.

**சொல்லால் உண்டாகும் நகைச்சுவை**

ஒரு சொல்லுடன் தொடர்புடைய பிற சொற்களை மாற்றி மாற்றி சொல்வதன் மூலமாகவும் நகைச்சுவை தோற்றுவிக்கப்படுகிறது. 'பஞ்சேந்திரப் புராணம்' எனும் நாடகத்தை அறிமுகப்படுத்த வருகிறார் கோமாளி. அவர்,

> **கனதனவான்களே! இன்னிக்குச் சுபயோக சுபதினத்தில், பெரியோர்களால் நிச்சயத்த படி 'பஞ்சபாண்டவர் நாடகம்' நடக்கப்போவுது. 'அட தப்பு! தப்பு!' (என்று தாடையில் போட்டுக்கொண்டு) 'பஞ்சபாண்டவர் நாடகம்' இல்லையே அது மகாபாரத்திலேன்னா வருது. 'பஞ்சபூதம்'. ஊகும் அதுவுமில்ல! 'பஞ்சாட்சரம்' .......... ஊகும், 'பஞ்சதந்திரம்' தந்திரமாவது மந்திரமாவது! 'பஞ்சாமிருதம்' ........ சே! அது சாமிக்கு படைக்கிறது ஆச்சே. நோட்டை**


**ISBN Number:** 978-81-981078-4-8

> **விட்டுகிட்டு சாப்பிடுகிறது ஆச்சே! ‘பஞ்சலோகம்!’ அது உருக்கு வேலைக்கன்னா பயன்படும்? ‘பஞ்சாங்கம்’ அது நாள் நட்சத்திம் பாக்குறதாச்சே! ‘பஞ்சகல்யாணி’ அதுவு மில்லையே? எத்தினே பஞ்சமடா! ...... (கோபாலகிருஷ்ணன். கல்வி, பஞ்சேந்திரிய புராணம், ப. 11)**

என்று தடுமாறுகிறார். இவ்வாறு நாடகத்து பெயரை மறந்து விட்டு, கோமாளி ‘பஞ்ச’ என்ற சொல்லை அடியாக கொண்டு குழம்பி கொண்டு செல்வது நகைச்சுவையைத் தோற்றுவிப்பதாக உள்ளது. இதுபோன்று ‘மிட்டாய் பாப்பா’ என்ற படைப்பில் ஓர் ஆந்தை ஒரு பாப்பாவின் பெயரை வினவுகிறது.அந்த பாப்பா கூறிய பெயரைக் கேட்டவுடன் ஆந்தை வியந்து பேசுகிறது.

> **மிட்டாய் பாப்பாவா? ஆ… ஆ… நல்ல பெயர்! மனிதர்களுக்கு பெயர் வைக்கக் கூடத்தெரியாதோ? என் பெயர் ஆந்தையாம்! ஆந்தை! கந்தை, மொந்தை, சந்தை என்று வைக்காமல் விட்டார்களே! (கோபாலகிருஷ்ணன். கல்வி, மிட்டாய் பாப்பா, ப. 25)**

இப்பேச்சில் காணப்படும் ஆந்தை, கந்தை, மொந்தை, சந்தை எனும் சொற்கள் நமக்கு நகையூட்டுவதாக


**ISBN Number:** 978-81-981078-4-8

அமைந்துள்ளன. புதிதாக கூட்டல் கணிதம் புதிதாக அம்மாவிடம் கற்று வந்த சிறுமி, தன் அம்மாவிடம் சொல் விளையாட்டு செய்கிறாள். அதற்குச் சற்றும் சலைக்காமல் அம்மாவும் சொல் விளையாட்டு மூலம் சிறுமையை வியக்க வைக்கிறாள். அது படிக்கும் குழந்தைகளை நகைச்சுவைக்கு ஆளாக்குகிறது.

**இதையும் அதையும் கூட்டிப்பார்**
**இரண்டும் ஒன்றும்? - மூன்றம்மா!**
**அம்மா சொன்னால் சிரிப்புடனே**
**அடடா பெரிய வித்தைதான்!**
**அம்மாவுக்கு முதல் தோசை**
**அப்பாவுக்கு மற்றொன்று**
**மொத்தம் தோசை மூன்றன்றாய்**
**மூன்றாம் தோசை உனக்கேதான்!**
**சத்தம் ஒன்றும் செய்யாதே**
**சமத்தாய் சுவைத்தே தின்றுவிடு! (தம்பி சீனிவாசன், சிவப்பு ரோஜாப்பூ, பக். 70-71)**

என்பதிலிருந்து சிறார் இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் சொல் நகை படைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்தோம்.

**காலத்தால் உண்டாகும் நகைச்சுவை**

கதாபாத்திரங்களின் உரையாடல்களுக்கு இடையே கால அறிவோடு புகுத்தும் சொற்றொடர்கள் நகைச்சுவையைத் தோற்றுவிக்கின்றன. ராமு வெளியூரில்

 **ISBN Number:** 978-81-981078-4-8

நடைபெற்ற மிகப்பெரிய விழாவில் கலந்துகொண்டு பரிசு பெற்று திரும்புகிறான். அவனுடன் நண்பர்கள் உரையாடுகின்றனர். இவ்வுரையாடலில்,

**குமார்: ஏன் ராமு! விழா ரொம்ப ஜோரா நடந்திச்சா?**

**ராமு அதை ஏன் கேட்கிற, போ!**

**பெரியசாமி: ஏன் கூட்டமே இல்லையோ (திருச்சி பாரதன், அப்பாவின் ஆசை, ப. 19)**

என்கின்றனர். ‘அப்பாவின் ஆசை’ என்ற நாடகத்தில் இடம்பெறும் இந்த உரையாடலில் விழா சிறப்பாக நடந்தது எனும் பொருள்பட அதை ஏன் கேட்கிற, போ! என்று நீட்டி முழங்கி கூறுகிறான் ராமு. ஆனால், பெரியசாமி ராமுவின் கூற்றுக்கு பொருந்தும்படி அதே வேளையில் அவன் தொனித்த பொருளுக்கு நேர்மாறான பொருள்படும் படியும் பேசுகிறான். இது வாசகர்கள் மனதில் நகைச்சுவையை ஏற்படுத்துகிறது. இது போன்ற மற்றொரு நகைச்சுவை‘பயம் கொள்ளலாகாது பாப்பா’ என்ற நாடகத்திலும் இடம் பெற்றுள்ளது. சிவகுருவைக் கண்டாலே சுநிதாபயந்து நடுங்குகிறாள். அவன்சொற்படி நடக்கிறாள். ஒருமுறை சிவகுரு சுநிதாவிடம் கட்டளை இடுகிறான்.

**சிவகுரு: நாளைக்கு வரும்போது நாங்க திங்கறதுக்கு ஏதாவது நிறைய கொண்டு வா .....**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**சுநிதா: எங்கப்பா நிறைய பிஸ்கட் வாங்கி வந்திருக்கிறார்.**

**சிவகுரு: அப்படியா?**

**சுநிதா: நாய்க்குட்டி உயிரோடு இருந்தா அதுக்குப் போடலாம்னு இருந்தேன்.**

**சிவகுரு: அப்படியா?**

**சுநிதா: பரவாயில்லை. உனக்கே அதுக்கு பதிலாக தரேன். (கூத்தபிரான், பயம் கொள்ளலாகாது பாப்பா, ப. 26)**

இதில், சுநிதா, பயந்து கூறுபவை அவனரியாமலேயே, சிவகுருவை நாய் உடன் ஒப்பிடும்படி அமைந்து வாசகர்களுக்கு நகை ஊட்டுகிறது.

**சொல்லும் பொருளும்**

படைப்பாளிகள், ஒவ்வொருவரும் தம் படைப்புகளில் உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு ஒருசில சொற்களைப் பயன்படுத்துகின்றனர். இருப்பினும் சில படைப்புக்களில் ஒரே சொல்லே வெவ்வேறு உணர்ச்சியை உணர்த்தவும் பயன்படுத்துகின்றனர். ‘வீரப்பதக்கம்’ என்ற நாடகத்தில் மாவட்ட இணை ஆட்சித் தலைவர் தன் மகன் குடித்ததனால் சான்றிதழ் அனைத்தையும் நடுத்தெருவில் போட்டுவிட்டு மயங்கிக்கிடக்கிறான் என்று கூறுகிறார். இதைக் கேட்ட தலைமையாசிரியர், **“அடடா! சரி, அப்புறம்” (நாகப்பா**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**நாச்சியப்பன், வீரப்பதக்கம், ப. 53)** என்கிறார். இதில் அடடா! என்ற சொல் அவரின் வருத்தத்தை உணர்த்துகிறது.

‘இருப்பவனே இல்லாதவன்’ நாடகத்தில் கண் பார்வை இல்லாத ரங்கன், பேசுபவர்களின் குரலை வைத்தே யார் யார் பேசுகின்றனர் என்பதைக் கூறுகின்றான். இதைப் பார்த்த சுந்தரம்,

> **அடடா! என்ன அற்புதமான திறமை! கண்ணாலே கண்டுபிடிக்க வேண்டிய ஒன்னைக் காதாலேயே கண்டுபிடிக்கிறாயே (பூவண்ணன், கோமதியின் கோபம், ப. 32)**

என்கிறான். இதில், அடடா! என்ற சொல் வியப்புணர்வை உணர்த்துகிறது.

### சிறார் இலக்கியத்தின் இன்றைய நிலை

சிறார் இலக்கியங்கள் இன்று மிகவும் குறைந்து கொண்டே வருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சி, நேரமின்மை, பெற்றோர்கள் இருவரும் பணிக்குச் செல்லுதல், ஆர்வமின்மை, தொலை தொடர்பு சாதனங்களின் பெருக்கம், ஆங்கிலமொழி மோகம் போன்றவற்றால் தமிழ் மொழியில் சிறார் இலக்கியங்களின் வரவும் வரவேற்பும் குறைவாகவே உள்ளது. இதனை,

 **ISBN Number:** 978-81-981078-4-8

**தொலைக்காட்சி, திரைப்படங்கள், வீடியோக்கள், இசை, வீடியோ கேம்கள் மற்றும் கற்றல் மற்றும் விளையாடுதல் ஆகிய இரண்டிற்கும் இன்றியமையாத கணினிகள் ஆகியவற்றுடன் இன்றைய காலகட்டத்தில் ஒரு குழந்தையின் இருப்புக்கான பல மின்னணு ஊடக வடிவங்கள் நுணுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளன. ஊடாடும் தொழில்நுட்பம் மற்றும் அதன் மூலம் வழங்கப்படும் அறிவுறுத்தல் உள்ளடக்கத்திற்கு இளைஞர்கள் எதிர்வினையாற்றும் விதம் அவர்கள் மீது உடனடி மற்றும் நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மீடியாவின் இந்த நன்மைகளுக்கு இணங்க, இளம் குழந்தைகள் ஊடக பயன்பாட்டின் பாதகமான விளைவுகளுக்கு மிகவும் எளிதில் பாதிக்கப்படுகின்றனர் என்பது ஒரு துரதிர்ஷ்டவசமான உண்மையாகும், இதன் விளைவாக உடலுறவு, ஆக்ரோஷமான நடத்தை, பதட்டம் மற்றும் தூக்கமின்மை போன்ற பிரச்சனைகள், சமீபத்தில் இருத்தலியல் ஆபத்தாக மாறியுள்ளன. (நபீலா முஸ்தபா, ப்ரீத்தி நவநீத் & ரோனாரீசாகுரியன்)**

என நபீலா முஸ்தபா, ப்ரீத்தி நவநீத் மற்றும் ரோனாரீசாகுரியன் ஆகியோர் கூறியுள்ளனர்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

**முடிவுரை**

இன்றைய சூழலில் சிறார் இலக்கியங்களின் படைப்பும் வாசிப்பும் குறைந்துள்ளதை நம்மால் அறிய முடிகின்றது. இருந்த போதிலும் சிறார் இலக்கியம் என்பது நமக்கு புதிதல்ல *தொல்காப்பியம்* தொடங்கி சங்க இலக்கியம் தொட்டு சிறார் இலக்கியக் கூறுகளை நம்மால் காண முடிகின்றது. இருந்த போதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தமிழ் சிற்றிலக்கியம் தனி இலக்கிய வகையாக மலர்ந்தது. அவற்றில் சிறார்களுக்குரிய வாழ்வியல் கருத்துக்களை பல்வேறு உணர்ச்சிகளின் வெளிப்பாட்டின் வழி படைப்பாளர்கள் வழங்கியுள்ளனர் என்பதை இக்கட்டுரையின்வழி அறிந்துக்கொள்ள முடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**

[1] அடிகளாசிரியர். *குழந்தை இலக்கியம்*. மகாலிங்கம் அச்சகம்.

[2] இளம்பூரணர் (உரை). *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், சென்னை, 2014.

[3] “வாணிதாசனின் குழந்தை இலக்கியம்.” *களஞ்சியம்*, Vol: 1, Issue: 1. ngmtamil.in/article/வாணிதாசனின்-குழந்தை-இலக்/

 **ISBN Number:** 978-81-981078-4-8

[4] கூத்தபிரான். *பயம் கொள்ளலாகாது பாப்பா.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1994.

[5] கோபாலகிருஷ்ணன். *கல்வி, பஞ்சேந்திரிய புராணம்.* அறிவியல் நிலையம், சென்னை, 1989.

[6] கோபாலகிருஷ்ணன். *கல்வி, மிட்டாய் பாப்பா.* அறிவொளி பதிப்பகம், சென்னை, 1990.

[7] சுகுமாறன். "குழந்தை இலக்கியத்தின் மொழி." *கீற்று,* வெளியீடு: 13 மே 2019.

[8] சுப்புரெட்டியார், நா. *பாட்டுத்திறன்.* ஸ்டார் பிரசுரம், சென்னை, 1988.

[9] செந்துறைமுத்து. *தமிழின் வடிவங்கள்.* திருமகள் நிலையம், சென்னை, 1980.

[10] செயபால், இரா. (உ. ஆ) *சங்க இலக்கியம். அகநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.

[11] தம்பி சீனிவாசன். *சிவப்பு ரோஜாப்பூ.* வானதி பதிப்பகம், சென்னை, 1985.

[12] தமிழ்க்களம். *சிறுவர் இலக்கியம்.* www.tamizhkalam.com/siruvar-ilakkiyam/ 12/12/2024.

[13] திருச்சி பாரதன். *அப்பாவின் ஆசை.* தமிழ் நிலையம், புதுக்கோட்டை, 1970.

[14] நபீலா முஸ்தபா, ப்ரீத்தி நவநீத் & ரோனாரீசாகுரியன். "சமையல் பன்முகத்தன்மை:

 **ISBN Number:** 978-81-981078-4-8

இந்தியா குழந்தைகள் இலக்கியத்தில் சமையல் கதைகள்." *ருப்கதாஜர்னல்*, Vol: 16, Issue: 3. Year: 2024. https://doi.org/10.21659/rupkatha.v16n3.09g

[15] நாகப்பா நாச்சியப்பன். *வீரப்பதக்கம்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988.

[16] பிச்சமுத்து, ந. *திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்.* சக்தி வெளியீடு, சென்னை, 1983.

[17] பூவண்ணன். *கோமதியின் கோபம்.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1982.

[18] பூவண்ணன். *சிறுவர் இலக்கிய வரலாறு.* வானதி பதிப்பகம், சென்னை, 1980.

[19] மோகனரங்கன், கோ. *வணக்கம் செய்த வளையாபதி.* வசந்தா பதிப்பகம், சென்னை, 1986.

[20] ரேவதி. *இசையை கேட்குமா பாம்பு?* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1992.

[21] வசந்தன், வி.ர. *காட்டுக்கு யார் ராஜா?* (தொ.நூ.), பப்ளிகேஷன் டிவிஷன், செய்தி ஒளிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு, 1992.

[22] வாணிதாசன். *குழந்தை இலக்கியம்.* வள்ளுவர் பண்ணை, சென்னை, 1998.

[23] ஜான்சன், போ. *குழந்தை இலக்கியம்: எஸ். ரா. வின் பங்களிப்பு. வளன் ஆயம்*, Issue: 3, Volume:1, November: 2022.

# 9

# சிறார் ஆளுமை உருவாக்க நோக்கில் ‘தன்வியின் பிறந்தநாள்’

**முனைவர் சு.வினோத்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

மேலை நாடுகளில் குழந்தை இலக்கியம், சிறார் இலக்கியம் எனத் தனித்தனி இலக்கிய வகைகள் உள்ளன. தமிழில் இத்தகைய வகைப்படுத்தல்கள் இல்லை. நூற்றாண்டாகக் குழந்தை இலக்கியம் என்றே சுட்டப்பெற்று வந்துள்ளது. நவீன இலக்கியப் படைப்பாளர்களே ‘சிறார் இலக்கியம்’ என்ற பெயரிடுதலைச் செய்துள்ளனர். சிறார் இலக்கிய உருவாக்க முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர். தமிழில் குழந்தை இலக்கியம் என்று அழைக்கப்பெற்ற இலக்கியங்களைச் சிறார் இலக்கியமாகக் கொள்ளலாம். கவிமணி தொடங்கி யூமாவாசுகி வரைத் தமிழில் சிறார் இலக்கியப் படைப்பாளர்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். சிறார் இலக்கியங்கள் சிறார் ஆளுமை உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

 **ISBN Number:** 978-81-981078-4-8

2024 ஆம் அண்டிற்கான சாகித்ய அகாதெமியின் பாலபுரஸ்கார் விருது பெற்ற யூமாவாசுகியின் ‘தன்வியின் பிறந்தநாள்’ எனும் நூல் 10 சிறுகதைகளை உள்ளடக்கிய சிறார் கதைகளின் தொகுப்பு ஆகும். சிறார் ஆளுமை உருவாக்க நோக்கில் இந்நூலை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**கதைகளும் சிறாரும்**

சிறார்களின் இலக்கியம் ‘கதைகள்’ என்றே கூறிவிடலாம். எவ்வயதிலும் கதை கேட்பவர்கள் சிறார் ஆகிவிடுகின்றனர். கதை கேட்கும் ஆர்வமும் கதை சொல்லும் ஆர்வமும் சிறார்களிடம் காணப்படும் முக்கியப் பண்பு ஆகும். கதைகள் வழியாகச் சொல்முறையைக் கற்றுக்கொண்ட சிறார்கள் ஆளுமை மிக்கவர்களாகத் திகழ்வார்கள். எதனையும் கதைபோல் தொடர்புபடுத்தி உரைக்கின்ற கற்பனை ஆற்றல் இல்லாத சிறார்கள் ஆளுமை குறைந்தவர்களாக இருக்க வாய்ப்பு உண்டு. “குழந்தை என்பது பதினான்கு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒருவர் என்று பொருள்படும். இளம்பருவத்தினர் என்பது பதினான்கு வயதுடைய அல்லது அதற்கு மேற்பட்ட, ஆனால், பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒருவர் என்று பொருள்படும். (1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், ப. 3) என்ற கருத்தைக் கவனத்தில் கொள்வது அவசியம் ஆகும். அவ்வகையில் சிறார் மனநிலைக்கு ஏற்ப

 **ISBN Number:** 978-81-981078-4-8

எழுதப்படுகின்ற கதைகளைச் சிறார்கதைகள் எனலாம். அக்கதைகளில் சிறார் தலைமைப் பாத்திரங்களாகத் திகழ்வர்.

**தன்வியும் ஜெய்யும்**

சிறார் இலக்கியத் தன்மைகளில் ஒன்று சிறாரைத் தலைமைப் பாத்திரங்களாகக் கொண்டமைவது. ‘தன்வியின் பிறந்தநாள்’ தொடங்கி ‘வலியினால் அல்ல’ வரையிலுமான 10 கதைகளை உள்ளடக்கிய ‘தன்வியின் பிறந்தநாள்’ தொகுப்பில் ஆறாம் வகுப்பு பயிலும் தன்வியும் ஒன்பதாம் வகுப்பு பயிலும் ஜெய்யும் தலைமைப் பாத்திரங்கள். இவ்விரு உடன்பிறந்தோரின் வாழ்க்கை நிகழ்வுகளின் தொகுப்பாக நீளும் இக்கதைகளைப் புதின வடிவாகவும் கருதி வாசிக்கலாம். இவ்விரு சிறார்களின் ஆளுமை உருவாக்கமும், வளர்ச்சியும்கதைகளாக வடிவம் கொண்டுள்ளன. தன்னையும் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் புரிந்து கொள்ளும் மனத்திறனை அறிதல் திறன் (Cognitive ability) என்கிறோம். அறிதல் திறனில் சிந்தித்தல், நினைவுகூர்தல், மொழியைப் பயன்படுத்துதல், படைப்பாற்றல், நுண்ணறிவு, புரிந்து கொள்ளுதல், பிரச்சனையைத் தீர்த்தல், முடிவு செய்தல் போன்ற பல திறன்கள் அடங்கியுள்ளன. (பாலசுப்பிரமணியன், P. S., கற்கும் குழந்தை, ப. 11) இத்திறன்களைப் பெற்றதன்

 **ISBN Number:** 978-81-981078-4-8

அடிப்படையில் ஆளுமை கொண்ட சிறார்களாகத் தன்வியும் ஜெய்யும் திகழ்கின்றனர். இக்கதைகள் வழியாக அத்திறன் வாசகச் சிறார்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பெறுகிறது.

**இயற்கை நேசம்**

'தன்வியின் பிறந்த நாள்' எனும் தலைப்புக் கதையில் பிறந்தநாள் காண உள்ள தன்வியின் மூச்சிலிருந்து குருவி, மயில், வானவில், மழை, காடு என ஒவ்வொன்றாகத் தோன்றுகின்றன. அவை தன்னைத் தன்வி மிகவும் நேசித்ததாகக் கூறுகின்றன. தாவரங்களின் இடையே தன்வி ஆடிப்பாடி மகிழ்ந்ததை நினைவுகூரும் காடு தற்பொழுது தான் வனமாக இல்லாமல் தொழிற்சாலையாக மாறியிருப்பதைக் கூறி வருந்துகிறது. இருந்தாலும் தன்வியின் நினைவில் இப்பொழுதும் தான் வனமாக இருப்பதாக மகிழ்கிறது. பிறந்தநாள் பரிசாகத் தன்விக்கு முத்தம் தர விரும்புவதாகவும் கூறுகிறது. உறங்கும் தன்வியின் மூச்சிலிருந்து வெளிப்பட்ட இயற்கைப் பொருட்கள் ஒவ்வொன்றும் அவ்வாறு தம்மை அறிமுகம் செய்கின்றன. தாங்கள் தன்வியை நேசிப்பதையும் தன்வி தம்மை நேசிப்பதையையும் கூறுகின்றன. அவைகளின் விருப்பம் எல்லாம் இணைந்து ஒற்றை ரோஜாவாக வீட்டின் முற்றத்தில் மலர்ந்து காத்திருக்க, தன்வி உறக்கம் நீங்கி எழுந்து வந்து மலரை

 **ISBN Number:** 978-81-981078-4-8

முத்தமிடுகிறாள். அவைகள் அவளுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள் கூறுகின்றன.

‘தன்வியின் பூந்தோட்டம்’ சிறுகதையில் பள்ளிவிட்டு வரும் வழியில் வீடொன்றில் கண்ட பூச்செடிகளைப் பார்க்கும் தன்வி தன் வீட்டிலும் பூந்தோட்டம் அமைக்க விரும்புகிறாள். அந்த வீட்டினரிடம் பூச்செடிகளைப் பெற்றுப் பூந்தோட்டம் அமைக்கிறாள். அப்பாவும் அவர் பங்கிற்குப் பூச்செடிகளை வாங்கித் தருகிறார். தன்வியின் பூந்தோட்டத்தைப் பார்த்துப் பள்ளி ஆசிரியை பாராட்டுகிறார். நாய்க்குட்டி ஒன்று பூந்தோட்டத்தைச் சேதப்படுத்தி அதனிடையே சென்று படுத்துக் கொள்கிறது. தன்வி நாய்க்குட்டியை விரட்டுகிறாள். நாய்க் குட்டி மீண்டும் மீண்டும் செடிகளிடையே சென்று துயில்கிறது. வெப்பம் தாங்காது ஈரப்பதமான இடம்தேடிச் செடிகளின் இடையில் துயிலும் நாயின் செயலைத் தன்வி புரிந்துகொன்கிறாள். அதற்கு வாசலின் அருகில் மரத்தடியில் நீர்தெளித்து உறங்க இடம் ஏற்பாடு செய்து தருகிறாள். தன்வி பூச்செடிகளையும் காத்து நாய்க்குட்டிக்கும் அடைக்கலம் தருகிறாள். **“திண்ணையில் உட்கார்ந்து அவ்வப்போது பூக்களைப் பார்த்துக்கொண்டே படிப்பதில் தன்விக்குப் பெரிய சந்தோஷம்.” (தன்வியின் பூந்தோட்டம், ப. 38)** என்பது

 **ISBN Number:** 978-81-981078-4-8

கதையில் வரும் வரி. இதுபோல் பல கதைகளில் சிறுமி தன்வி இயற்கை மீது கொள்ளும் நேசத்தைச் சொல்லும் வரிகள் உள்ளன.

> **கரையோர நாணற்புதர்கள் காற்றில் அசைந்து கொண்டிருக்கும். ஏரி நடுவில் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருப்பார்கள். பக்கத்து மரத்திலிருந்து மீன்கொத்தி யொன்று விருட்டென்று பறந்தது. அதைப் பார்க்கும் போது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.**
>
> **(குட்டிநாய்க்குப் பெயர் வந்தது எப்படி? ப. 32)**

என்று ‘குட்டிநாய்க்குப் பெயர் வந்தது எப்படி?’ கதையில் ஜெய் இயற்கையை ரசிப்பதை யூமா. வாசுகி காட்சிப்படுத்தியுள்ளார். இயற்கையை ரசிப்பதில் இருந்தே இயற்கையைப் பாதுகாக்கும் சிந்தனை சிறுவர்களிடம் வளர்கிறது. இயற்கையை அறிவதில் இருந்தே சிறுவர்கள் தம்மை அறிந்துகொள்கின்றனர். ‘தன்வியின் பூந்தோட்டம்’ கதை அதற்குச் சிறந்த சான்று. குழந்தைகள் இயற்கையோடு நெருங்கிய உறவு உடையவர்களாக இருக்கிறார்கள். இது ஆதிமனிதன் இயற்கையை ஒட்டி வாழ்ந்த வாழ்க்கைக்கு நிகரானது.

**உயிர்நேயம்**

சிறார் இலக்கியங்களில் இடம்பெறும் மற்றொரு கூறு குழந்தைகள் விரும்பும் தாவரங்களும் விலங்குகளும்

 **ISBN Number:** 978-81-981078-4-8

பறவைகளும் கதைப்பாத்திரங்களாவது. தன்வியின் பிறந்தநாள்' கதைத் தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு உயிரினம் அறிமுகமாகிறது.

குட்டிநாய்க்குப் பெயர் கிடைத்தது எப்படி? என்ற கதையில், விபத்தில் தாயை இழந்த நாய்க்குட்டியின் உணவு தேடலும் பெரிய நாய்களுடன் போட்டியிட முடியாத அதன் இயலாமையும் பதிவாகியுள்ளன. வளர்ப்பு நாய்களுக்கு உரிமையாளர் பெயரிட்டு அழைப்பதைப் பார்த்துக் குட்டிநாய் ஏங்குகிறது. "**தொருவில் அலைந்து திரியும் நாய்க்கு யார் பெயர் வைக்கப்போகிறார்கள்" (குட்டிநாய்க்குப் பெயர் வந்தது எப்படி? ப. 27)** என்ற வரி தெருநாயின் ஏக்கத்தைக் கூறும்.

கதையில் நாய்க்குட்டியும் சிறுவன் ஜெய்யும் அறிமுகமாகும் இடம் அழகானது. "அடடா, இந்தப் பரிதாபமான குட்டி நாயின் குரலுக்கு அஞ்சியா ஓடினேன்' என்று நினைத்துச் சிரித்துக்கொண்டான். குட்டிநாயும் நின்று திரும்பிப் பார்த்து **"அடடா இந்த நல்ல பையன் குரலைக் கேட்டா நான் பயப்பட்டேன் என்று நினைத்து அன்புடன் வாலாட்டியது." (குட்டிநாய்க்குப் பெயர் வந்தது எப்படி?, ப. 33)** சிறு உயிர்களுக்கும் சிறுவர்களுக்கும் இடையில் உள்ள உறவின் அடிப்படை அன்புதான். **"தன் நோட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு வெற்றுத் தாள் கிழித்து தரையில் வைத்தான். தன்**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**சாப்பாட்டு டப்பாவில் மிச்சமிருந்த இரண்டு சப்பாத்திகளைப் பிய்த்துக் காகிதத்தில் போட்டான். வாலை ஆட்டிக்கொண்டே பேராவலுடன் சாப்பிட்டது குட்டிநாய்" (குட்டிநாய்க்குப் பெயர் வந்தது எப்படி? ப. 33)** குழந்தைகள் யாவரும் சிறு உயிரினங்களுக்கு உணவிட விரும்புகின்றனர். இயற்கையிடம் இருந்தே குழந்தைகள் பல நல்ல பண்புகளைக் கற்றுக்கொள்கின்றனர்.

**உயிர்மொழி**

அன்பு என்பது உயிர்மொழி. தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என மொழியற்றவைகளின் மொழி அன்பே ஆகும். அவ்வுயிர்கள் அன்பிற்காகக் காத்திருக்கவும் செய்கின்றன. 'குட்டிநாய்க்குப் பெயர் கிடைத்தது எப்படி?' என்ற கதையில் நாயின் குரைப்பு ஒலி ஜெய்க்குப் பாடலாகக் கேட்கிறது.

> **நாய்களில் நல்லவன் நானே**
> **நன்மை செய்யக் காத்திருப்பேனே – என்னைக்**
> **காப்பவர் யாரோ உலகினிலே. (குட்டிநாய்க்குப்**
> **பெயர் வந்தது எப்படி?, ப. 35)**

நாய்க்குட்டியின் குரலுக்கு ஆசிரியர் தரும் விளக்கம் இல்வாறு அமைகிறது.

> **நண்பனொருவன் வந்தானே**
> **நல்ல பெயரும் தந்தானே (குட்டிநாய்க்குப் பெயர்**
> **வந்தது எப்படி?, ப. 36)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

என்று தனக்குப் பெயர் கிடைத்த மகிழ்ச்சியில் ஏக்கம் தனிந்த நாய்க்குட்டி பாட்டுப் பாடுகிறது.

'அன்பளிப்பு' கதையில், உணவின் மீதங்களை ஆடுகளுக்கு வழங்கும் தன்வி - ஜெய்க்கு ஆட்டுக்காரப் பாட்டி ஆட்டுக்குட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்குகிறாள். அக்கதையில், **"அன்புடையீர், ஆடுகள் நாங்கள் வந்திருக்கிறோம். எங்களுக்குச் சாப்பாடு தருகிறீர்களா?" என்று கேட்டு ஆடுகள் வாசலில் மே... மே... என்று கத்தும் போது அண்ணனும் தங்கையும் அதற்கான வேலையை ஆரம்பித்துவிடுவார்கள்" (அன்பளிப்பு, ப. 53)** ஆடுகளின் மொழியைத் தன்வியும் ஜெய்யும் புரிந்துகொள்கிறார்கள். இங்கு அன்பே மொழியற்றவைகளின் மொழி ஆகிறது.

**அற்புதங்களின் உலகம்**

லூயிஸ் கரோல் எழுதிய 'ஆலிஸின் அற்புத உலகம்' (*Alice in Wonderland*) என்ற ஆங்கிலப் புதினம் சிறுவர்கள் கற்பனை ஆற்றலால் புதிய உலகைப் படைத்துப் புதுமைகளைச் சந்திப்பதை அடிப்படையாகக் கொண்டது. அதுபோல், 'எண்ணல்' கதையில் தன்வி அரளிச்செடியில் உள்ள பூக்களைப் பறித்து எண்ணிவிட முயற்சிக்கிறாள். பூவில் தொங்கும் நீர்த்துளி, வண்ணத்துப்பூச்சி, புழு, பனித்துளி, தும்பி எனக் கவனிக்கத் தொடங்கி ஒவ்வொருமுறையும்

 **ISBN Number:** 978-81-981078-4-8

எண்ணிக்கையைத் தவறவிடுகிறாள். ஒவ்வொருநாளும் அவள் மேற்கொள்ளும் முயற்சியை முடிக்கவிடாமல் அவளைச் சுற்றி அற்புதங்கள் நிகழ்ந்தபடி இருக்கின்றன எனக் கதை முடிகிறது. வாழ்வில் அற்புதங்களைத் தேட வேண்டியதில்லை. அற்புதங்கள் நம்மைச் சூழ்ந்துள்ளன. குழந்தைகள் அவற்றை எளிதாகக் கண்டுவிடுகின்றனர். பெரியவர்கள் எண்ணலில் வெற்றிபெற்று அற்புதங்களை இழக்கின்றனர். தன்வி எண்ணலைத் தவறவிட்டு அற்புதங்களைத் தரிசிக்கின்றாள். **“கற்போரின் செயலையோ, உணர்ச்சியையோ, எண்ணத்தையோ மாற்றுவதே கல்வியெனப் படுகிறது” (ந. சுப்பு ரெட்டியார், கல்வி உளவியல் கோட்பாடுகள், ப.19)** என்பது கல்விச் சிந்தனை. அவ்வகையில் கதைகளில் வரும் தன்வியும் ஜெய்யும் அத்தகையக் கல்வியைப் பெறுகின்றனர். இக்கதைகள் வழியாக அத்தகைய கல்வியை ஆசிரியர் கற்பிக்கின்றார்.

**முடிவுரை**

சிறார் இலக்கியங்கள் சிறார்களின் ஆளுமையை வளர்க்கின்றன. அதிலும் கதைகள் ஆளுமை வளர்ப்பதில் முதன்மை வகிக்கின்றன. இயற்கை மற்றும் உயிர் நேசத்தின் மூலம் சிறார்களைப் பண்புடையவர்களாகவும் பிறர் துன்பத்திற்கு இரங்கும் அறிவுடையவர்களாகவும் மேம்படச் செய்திட முடியும்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

**துணை நூல்கள்**

[1] யூமா வாசுகி. *தன்வியின் பிறந்தநாள்.* பாரதி புத்தகாலயம், சென்னை, 2024.

[2] சுப்பு ரெட்டியார், ந. *கல்வி உளவியல் கோட்பாடுகள்.* தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2009.

[3] பாலசுப்பிரமணியன், P. *கற்கும் குழந்தை.* தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை, 2008.

[4] “1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகள் சட்டம்.” தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை, 1979.

 **ISBN Number:** 978-81-981078-4-8

# 10

# சிறுவர் இலக்கியத்தில் கல்வி தாக்கம்

**க. ஜான்சி ராணி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக் கழகம், சென்னை-78.

**முனைவர் க. அமலா கார்த்திகா,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக் கழகம், சென்னை -78.

**ஆய்வுச்சுருக்கம்**

*குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தது விளையாட்டுக் கருவி. விளையாட்டுக் கருவிகள் பல. அவற்றுள் ஒன்று புத்தகம். விளையாட்டுக் கருவி குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டும், மகிழ்ச்சி தரும். புத்தகம் அவற்றோடு விவேகத்தையும் வளர்க்கும் என்பதை நமக்கு வலியுறுத்துகிறது. படிக்கத் தெரியாத குழந்தை, புத்தகத்தை வைத்துக் கொண்டு விளையாடத் தொடங்கும், பிறகு குழந்தைகளைப் புத்தகங்களுடன் விளையாட விட வேண்டும். இவ்வாறு விளையாடும் குழந்தை தான் பிறகு விரும்பிப் படிக்கும். இப்படிப் பழக்கம் ஏற்படக் குழந்தைகளைப் புத்தகங்களுடன் பழகவும், விளையாடவும் விட வேண்டும். இவற்றில்*

 **ISBN Number:** 978-81-981078-4-8

*எதைக் கற்கவும் ஏற்ற பருவம் இளமையே! மொழியைப் பொறுத்த வரையில் ஒருவன் சிறுவனாக இருக்கும் போது கற்கும் அறிவே பெரிது என்று மொழி நூல் அறிஞர்கள் கூறுகின்றனர். இளமையில் கற்பது எளிதில் மனத்தில் பதியும். பெரியவர்களாக மாறிய பிறகும் மறக்காமல் இருப்பவை இளமையில் கற்றவையே. இதனால் தான் **'இளமையில் கல்'** என்று புலவர்கள் கூறிச் சென்றனர். இதன் அடிப்படையில் சிறுவர் கல்வி, சிறுவர் பிரச்சினைகள், சிறுவர் உரிமைகள், சிறுவர் நூலகம், எழுத்தாளர் மற்றும் சிறுவர் பாடல்கள் முதலியனவற்றைக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச் சொற்கள்:** சிறுவர் இலக்கியம், கல்வி தாக்கம்.

**முன்னுரை**

எழுத்து இலக்கிய வரலாற்று வரிசையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக் கூற்றிலிருந்து சிறுவர் இலக்கியம் பற்றிய சிந்தனை உருவாகிறது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார சமூக கலாச்சார மாற்றங்களும், கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களும் சிறுவர் இலக்கியத்தின் தேவையை உணரச் செய்தது. கூட்டுக் குடும்பத்தின் சிதைவு, இயந்திரமயமான வாழ்க்கை, பெண்கள் வேலைக்குச் செல்லல் முதலிய காரணிகளால்

 **ISBN Number:** 978-81-981078-4-8

சிறுவர்களுக்கான கல்வியில் கவனம் குறைந்தது. வாய்மொழி மரபினடியாக சிறுவர்களுக்குப் பாடல், கதை கூறும் மரபு, சிறுவர் கல்வி, சந்திக்கும் சிக்கல்கள் மற்றும் உரிமைகள், எழுத்தாளர்களின் கவனம், சிறுவர் கல்வியின் பக்கம் திரும்பாமை மேலும் சிறுவர் இலக்கியம் வராமைக்குக் காரணங்களாகக் குறிப்பிடலாம். சிறுவர்களிடையே படிப்பையும், பண்பையும் வளர்க்கப் பெறவில்லை என்றால், வாழ்க்கை பயனற்றதாகும். நல்லொழுக்கத்தை இளமையில் பயின்றால் அது இறக்கும் வரை கைவிடாமல் பின்பற்றி இருக்கும். இதைத் தான் '**தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்**' என்னும் பழமொழி குறிக்கிறது. இளமை போன பிறகு முதுமையில் கற்றல் அரிது என்பதைத் தான் **"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா!"** என்னும் முதுமொழி எடுத்தருளியது. இதன் அடிப்படையில் சிறுவர் இலக்கியத்தின் கல்வி தாக்கம் என்னும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**சிறுவர் இலக்கியத்தின் தேவை**

ஓடி விளையாடும் சிறுவர்களுக்கும் ஓய்வு பெற்ற பெரியவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு, வளர்ச்சி என்பதாகும். பெரியவர்கள் வளர்ந்து விட்டார்கள். இனி மேற்கொண்டும் வளர்ச்சி பெற முடியாதவர்கள்; தளர்ச்சிதான் அவர்களை எதிர்நோக்கியிருக்கும், ஆனால் சிறுவர்கள் வளர்ப்பவர்கள் ஆவர். இதனால் தான்

 **ISBN Number:** 978-81-981078-4-8

இளமையில் படிப்பைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் கற்றுத்தருகின்றனர். நற்குணங்களையும், வீரத்தையும், வேகத்தையும் இளமையில் சிறுவர்களுக்கு எளிதாக கற்றுத் தருவது ஒன்று உண்டு. அதுதான் நல்ல முறையில் உருவாகும் சிறுவர் இலக்கியம் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

**சிறுவர் பாடல், எழுத்து மொழி மரபு:**

சிறுவர் பாடல்களில் வாய்மொழி மரபுக்கும், எழுத்து மொழி மரபுக்கும் இடைப்பட்ட ஒரு பாரம்பரியம் இருப்பதை அவதானிக்க முடிந்தது. வாய்மொழியாக உருவாகி வாய்மொழியாக வழங்கி வருபவை வாய்மொழிப்பாடல்கள் எனவும், எழுத்து மூலம் உருவாகி எழுத்தில் பயின்று வருபவை எழுத்திலக்கியம் எனவும் குறிப்பிடப்படுகின்றன. சிறுவர் பாடல்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் தோற்றுவாய் வாய் மொழியாகவே காணப்பட்டது எனலாம்.

குழந்தையைத் துயிலச் செய்வதற்காகவும், அதனை மகிழ்வூட்வதற்காகவும், தாய் தாலாட்டுப் பாடல்களை வளர்ப்பதற்காகவும், உணவு ஊட்டுவதற்காகவும் பாடல்களை வாய்மொழியாகப் பாடுகிறாள். இவ்வாறு தாயால் வாய்மொழியாகப் பாடப்பட்ட பாடல்களிலிருந்தே சிறுவர் பாடலும், அதன் மூலம் எழுத்தும், தோற்றமும் பெறத் தொடங்குகின்றது.


**ISBN Number:** 978-81-981078-4-8

இவ்வாறு வாய்மொழி மரபுக்கும், எழுத்து மொழி மரபுக்கும் இடைப்பட்ட பாரம்பரியம் சிறுவர் பாடல்களில் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

**வடிவங்களும், வகைகளும்**

சிறுவர் இலக்கியங்களை அவற்றின் தன்மைகளுக்கேற்ப சிறுவர் பாடல்கள், சிறுவர் அறிவு நூல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாவல்கள், கதைப்பாடல்கள், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் பத்திரிக்கைகள், சிறுவர் கட்டுரைகள், சிறுவர் நாடகங்கள், துணைப்பாட நூல்கள் எனப்பல வகைப்படுத்த முடியும். அதில் சிறுவர் பாடல்களில் அறிவியல் பாடல்கள், விளையாட்டுப்பாடல்கள், கதைப்பாடல்கள் என்பன அடங்கும். மேலும் சிறுவர் கதைகளை சித்திரக் கதைகள், வரலாற்றுக் கதைகள், பொது அறிவுக் கதைகள், புத்திக் கதைகள், நீதிக் கதைகள், வேடிக்கைக் கதைகள், உருவகக் கதைகள், அறிவியல் கதைகள், விழுமியக் கதைகள் என வகைப்பாட்டிற்குள் அடக்கலாம்.

**மனப்பாடக் கல்வி முறை**

தற்காலத்தில் மாணவர்களுக்கு அளிக்கப் பெறும் கல்வி புரிந்து கொள்ளும் அளவிலும் வாழ்க்கைக்கு உபயோகிக்கும் அளவிலும் இல்லை. அனைத்தும் மனப்பாடம் செய்யும் முறையை மட்டுமே

 **ISBN Number:** 978-81-981078-4-8

அடிப்படையாகக் கொண்டு இருக்கிறது என்பதை, **"உழைப்பவர்களை அவமதிப்பது, அறிவுச் செருக்கு, தேச நலனில் அக்கறையின்மை, சோம்பேறித்தனம் போன்ற பண்புகள் மாணவர்களிடம் வெளிப்படக்காரணம் அதிகாரிகளை உருவாக்குவதற்கான மனப்பாடக் கல்வி முறை இந்தியாவில் நீடிக்கிறது என்பது தான்"** (ரூபா) எனும் கருத்து சிந்தித்தற்குரியது. பாடத்திட்டத்தில் மரபு இலக்கியம், புதுகவிதை, உரைநடை, இலக்கணம், துணைப்பாடம் என்று கொடுக்கின்றனர். ஆனால் அவற்றை மாணவர்களின் மனநிலைக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றவாறு கொடுப்பதே சிறந்த பயனுடையதாகும். மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாடத்திட்டக்குழு அமைப்பில் சேர்த்து பாட திட்டம் வகுத்தால் மேலும் பயனுடையதாக அமையும்

**ஆரம்பப் பள்ளிகளில் கற்பிக்கும் முறை**

நு. செந்தோல் (sendall) என்பவர் குழந்தைகளுக்கென எழுதிய ஆரம்பப் பாடநூல்களைப் பற்றிக் கூறுகையில் அடிகளார் சில தவறுகளை எடுத்துக் காட்டுகின்றார். பள்ளிக்கூடத்திற்குச் செல்லாத தொடக்கநிலையில் உள்ள குழந்தைகளுக்கு ஔ, ஃ என்ற எழுத்துகளைச் சொல்லிக் கொடுப்பது பயனற்ற செயல், இக்குறியிடுகள் அக்குழந்தைகளின் தேவைகளுக்கும், அனுபவத்திக்கும் அப்பாற்பட்டவை என்பர் அடிகள்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

இக்காலகட்டத்தில் கிராமப்புற, நகர்புற இடங்களில் வாழ்கின்ற எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுவான ஒரு சொல் தொகையைக் கையாள வேண்டும் என்பார் அடிகள். ஐவர், ஒப்பந்தம் போன்ற சொற்கள் மூலம் வகுப்பில் படிக்கின்ற குழந்தைகளின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட சொற்களாகும். ஈசன், ஓடம், ஔவை, ஔடதம், எஃகு, அஃது போன்ற சொற்கள் அசாதாரண சொற்களாகும். முதலாம் வகுப்பிற்குப் பிறகு இச்சொற்களைப் பயன்படுத்தலாம். உறி, எருது, ஏற்றம், இரதம், ஈச்சமரம் போன்ற சொற்கள் பட்டணத்துக் குழந்தைகளுக்குச் சாதகமான சொற்களாக இல்லை என்பது அவரின் கருத்தாக அமைந்துள்ளது.

மிருகக்காட்சிச் சாலைக்குப் போய்ப் பார்த்திருந்தால் கூட இச்சொற்களில் 24 சொற்கள் கேள்விக்குரியன. பாடநூலில் உள்ள சில சொற்களான ஈஞ்சு, ஆயுள், இல்லம், ஒற்றர், ஓலம், கௌதாரி, யௌவனம், ரௌத்திரி, லௌக்கம், சௌக்கியம் போன்ற சொற்கள் குழந்தைகளின் அனுபவத்துக்கும், ஆர்வத்துக்கும் அப்பாற்பட்ட சொற்களாகும். இந்தத் குழந்தைகளின் ஆரம்ப பாட நூல்களில் தெரிந் தெடுக்கப்பட்டாற்கலெல்லாம் பெயர்ச் சொற்களாகவே இருக்கின்றன. குழந்தைப்பருவத்தில் குழந்தைகளின் செயலை எடுத்துக்காட்டுகின்ற வினைப் பெயர்கள்


**ISBN Number:** 978-81-981078-4-8

குறைவாகும். இரு, ஓடு, ஆடு, ஏறி, ஏறு போன்ற குழந்தைகளின் செயலை விளக்குகின்ற சொற்கள் பலவற்றை அடிக்கடி குழந்தைகளுக்கான பாட நூல்களில் சேர்க்க வேண்டும் என்பர். குழந்தைகளின் பேச்சு வழக்கில் வருகின்ற சொற்களை அதிகமாக எழுத்து வழக்குக்கு சொல்லக் கூடாது. அவர்கள் காணும் பருப்பொருள் மூலம், அவர்கள் சந்திக்கும் ஆட்கள் மூலம், செயல்கள் மூலம், நிகழ்ச்சிகள் மூலமே உணர்த்தலாம் என்னும் பேராசிரியர் ஆ. ரூபா அவர்களின் கருத்துகளும் உற்று நோக்கத்தக்கவையாகும். மேற்கண்ட அனைத்தும் தமிழ்ப்பாடம் கற்பிப்பதில் உள்ள சிக்கல்களை முன் வைக்கின்றன. இவற்றையெல்லாம் கற்பிக்கும் முறைகளில் மாற்றத்தைக் கொண்டு வந்தால் சிக்கல்களைத் தீர்க்க இயலும் என்பது ஆய்வாளரின் கருத்தாக அமைகிறது.

**எண்ணும் எழுத்தும்**

சிறுவர் பாடல் வடிவங்களில் அகவரிசைப் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன, ஒளவையாரின் ஆத்திசூடி, பாரதியாரின் புதிய ஆத்திசூடியின் அமைப்புக்களைப் பின்பற்றிச் சிறுவர் பாடல்கள் பாடப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். பேரா. உ. நிசாரின் எழுதிய நட்சத்திரப் பூக்கள் என்ற தொகுப்பில் இடம் பெறும் *புதிய ஆத்திசூடி* அமைந்துள்ளன.

 **ISBN Number:** 978-81-981078-4-8

**அன்புக்கு அடிபணி**
**ஆதவனுக்கு முன் எழு,**
**இறைவனைத் தொழு,**
**ஈனச் செயல் தவிர்**
**உண்மை உரை**
**ஊனமுற்றோருக்கு உதவு**
**எண் எழுத்து கல்**
**ஏமாற்றம் அடையாய்**
**ஐக்கியம் பேணு,**
**ஒற்றுமையாய் உயர்,**
**ஓயாமல் உழை,**
**ஔவை சொல் கேள் (நட்சத்திர பூக்கள், பக். 19)**

என்னும் கவிதையில் ஔவை உரைப்பது சிறுவர்களின் மனதை உலுக்கும் கல்விப்பாடல்களாக அமைந்துள்ளன.

**வருங்கால சமுதாயம்**

குழந்தை இலக்கியத்தைப் புறக்கணித்தால் வருங்காலத்தில் பிற இலக்கியங்கள் புறக்கணிக்கப்படும். சிறுவர்கள் வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் வன்மை பெற்றவர்கள். இதைத் தான் குழந்தை கவிஞர் வள்ளியப்பாவும் கூறுகிறார். இதனை,

**ஏடு தூக்கிப் பள்ளியில்**
**இன்று பயிலும் சிறுவரே**
**நாடு காக்கும் தலைவராய்**


**ISBN Number:** 978-81-981078-4-8

**நாளை விளங்கப் போகிறார்! (வள்ளியப்பா)**

என்ற பாடலில் நாடு காக்கும் நாளைய தலைவர்கள் நற்பணிகளைப் பெற்றிருக்க வேண்டுமானால் இன்றைய சிறுவர்களின் மனம் பண்பட வேண்டும்! அதைச் செய்ய வல்லது சிறுவர் இலக்கியம் என்பது புலனாகிறது. "சொர்க்க லோகத்தின் திறவுகோல் சிறுவர்களே என்று கூறுகின்றனர். அந்தத் திறவுகோலைச் செம்மையாக வைத்திருப்பது, பழுதடையாமல் பாதுகாப்பது சிறுவர் இலக்கியமேயாகும். இச்சிறுவர் இலக்கியம் எங்கே வளர்ந்துள்ளதோ, அங்கே மிகச் சிறந்த சமுதாயம் உருவாகும். சிறுவர் இலக்கியம் சிறந்த இலக்கியத்தை உருவாக்கும் ஆற்றல் வாய்ந்தது! என்பது உண்மை நிலையாகும்.

**பெண் கல்வி புறக்கணிப்பு**

கல்வியானது மன இருளை அகற்றி, அறிவு, ஒளியை ஏற்படுத்தக்கூடியதாகும். கல்வி என்பதற்கு அறிவு, கற்றல், நூல், வித்தை, பயிற்சி, உறுதி, கேள்வி, சால்பு, தேர்ச்சி என்றெல்லாம் **தமிழ் அகராதி** பொருள் கூறுகிறது.

**குஞ்சி யழகும் கொடுந்தானைக் கேட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு. (நாலடியார், 131)**

 **ISBN Number:** 978-81-981078-4-8

என்ற *நாலடியார்* பாடலில், கல்வி மட்டும் தான் அழகு என்று குறிப்பிடுகிறது. அத்துணைச் சிறப்புப் பெற்ற கல்வியானது, ஆண், பெண், ஏழை, செல்வந்தர் என்று எவ்விதப் பாகுபாடுமின்றி அனைவருக்கும் கிடைத்திடுவது தானே சமூக நீதியாக இருக்க இயலும். ஆனால் நாட்டுப்புறத்தில் பெண்களுக்கானக் கல்வி மறுக்கப்படுவதாக அம்மக்கள் சார்ந்த பதிவுகள் உள்ளன.

**பள்ளிக்கூட பாடம் எல்லாம் - இவள்**
**படிக்கக் கூடாதா**
**பச்சபுள்ள கத்தி அழுதா – அத**
**தூக்கி சுமக்கணுமா (நாட்டுப்புறப் பாடல்)**

என்ற நாட்டுப்புறப் பாடலில் பெண்ணானவள் குடும்ப சுமையைச் சுமக்க வேண்டுமே தவிர புத்தகச் சுமையைச் சுமக்கக் கூடாது என்ற சிந்தனையை மேற்கண்ட பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

**தாய், குழந்தைக்கு உணவு மற்றும் கல்வி ஊட்டும் முறை**

சங்க காலத்தில் சிறுவர்களைப் பற்றிய இலக்கியம் இருப்பதை நமக்கு உணர்த்துகிறது. குழந்தை இன்பத்தைப் பற்றிப் பல புலவர் பெருமக்கள் அழியாத பாடல்களைப் பாடிச் சென்றுள்ளனர். ஆனால் சிறுவர் பாடல்களை நாம் எங்கும் காணமுடியவில்லை. அதில் அகநானூறு என்னும் தொகை நூல் ஒன்றில் ஒரு குறிப்பு வருகிறது. மாற்றூர்க் கிழார் மகனார் கொற்றங்

 **ISBN Number:** 978-81-981078-4-8

கொற்றனார் என்னும் புலவர் பாடியது 54-வது பாடலில் தாய் ஒருத்தி தன் மகனுக்கு உணவு ஊட்டுகிறாள். வானத்தில் பவனி வரும் வண்ண நிலவைக் காட்டி உணவு ஊட்டுகிறாள். நிலவு விளங்கும் இளம் சந்திரனே! பொன்னாலான ஐம்படைத் தாலியை உடைய என் மகனை நினைத்து (அவனுடன் விளையாட) நீ இங்கே வந்தால் உனக்கும் பால் தருவேன் என்று இனிய மொழிகள் பல கூறி உணவை ஊட்டுகிறாள்.

**முகிழ் நிலாத் திகழ்தரும் மூவர்த் திங்கள்**
**பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி**
**வருகுவை யாயின் தருகுவென் பால்." (அகம் 54: 17-19)**

என்ற பாடலில் உணவு ஊட்டுவதன் மூலம் கல்வி அறிவையும், இனிய மொழிகளையும் கூறி ஊட்டுகிறாள்.

**சிறுவர்களின் மெய்ப்பொருள்**

சிறுவர்களுக்கு மெய்ப்பொருளாவது கல்வி என்பதும், பெரியோரைக் கண்டால் அவர்களுக்கு வணக்கம் எனச் சொல்ல வேண்டும் என்பதும், வழியில் ஓரமாகச் செல்ல வேண்டும் என்பதும், பள்ளிக்கு நேரம் கடந்து செல்லக்கூடாது என்பதும், கற்றுத் தெளிவு பெற்று நற்பெயர் எடுக்க வேண்டும் என்பதைக் கவிஞர் வாணிதாசன் தன் பாடல்களில் சிறுவர்களின் கல்வி,


**ISBN Number:** 978-81-981078-4-8

ஒழுக்கம் பற்றி மிக அழகாக கூறியிருப்பது நமக்கு புலானாகிறது.

**நிறைவாக**

கல்வி என்பது ஒரு மனிதனை முழுமையானவனாக உருவாக்குகின்றது. கல்வியானது வாழ்க்கை முழுவதும் நிலையாக இருக்கக்கூடிய செல்வமாகும். இளமையில் கல்வி கற்பது **சிலையில் பொறிக்க பட்ட எழுத்து** போன்று மனதில் பதியும், அதே போல் அழியாமலும் இருக்கும். இதனால் தான் இளம் வயதில் கல்வி கற்பது பசு மரத்தில் ஆணி போல் பதியும் என்றும் குறிப்பிடப்படுகிறது. இன்றைய உலகில் சிறுவர் இலக்கியம் மிகக் குறைந்து காணப்படுகிறது. இதனை மேம்படுத்தும் விதமாகச் சிறுவர்களுக்குத் தேவையான கல்வி, ஒழுக்கம், பழக்கவழக்கங்கள், மெய்ப்பொருள், எண்ணும் எழுத்தும், கற்பிக்கும் முறை, பெண் கல்வி போன்றவை குழந்தைகளுக்கு ஏற்றவையாக அமையும் என்பதே சிறந்த சிறுவர் இலக்கியமாகும்.

கல்வியை சிறுவர்களுக்குக் கொண்டு சேர்க்காவிட்டால், இச்சிறுவர்கள் மனிதர்களாகலாமே தவிர நல்ல குடிமகன்களாகவும், வருங்கால உலகை வாழ்விக்கும் சான்றோர்களாகவும் திகழ முடியாது. இதனால் தான் சிறுவர்களின் கல்வி தாக்கத்தை மிகுதியாக உள்ளடக்கி, அனைத்து உணர்வுகளை

 **ISBN Number:** 978-81-981078-4-8

வெளிப்படுத்தும் விதமாகப் பாடத்திட்டங்கள் அமைதலே சிறந்த வழி என்பதை இவ்வாய்வுக் கட்டுரை உணர்த்துகிறது.

**பயன்பட்ட நூல்கள்**


[1] அசோக், தே. "நாட்டுப்புறப்பாடல்களில் பெண்களின் நிலைப்பாடுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி – 2, ஜீலை 2019.

[2] கலாநிதி வானதி பகீரதன். *ஈழத்து சிறுவர் கதைப்பாடல்களின் வளர்ச்சி*. தமிழ்ப் புதுவை, புதுச்சேரி, முதற்பதிப்பு, 2022.

[3] கலாநிதி வானதி. *ஈழத்து சிறுவர் பாடல்களின் தோற்றமும், வளர்ச்சியும்*. வேலூர், பரிதி பதிப்பகம், முதற்பதிப்பு, 2022.

[4] பூவண்ணன். *சிறுவர் இலக்கிய வரலாறு*. வானதி பதிப்பகம், சென்னை – 17, முதற்பதிப்பு, 1980.

[5] வாணிதாசன். *குழந்தை இலக்கியம்*. வள்ளுவர் பண்ணை, சென்னை-35, 2ஆம் பதிப்பு, 1998.

[6] ரூபா, ஆ. "தமிழ் மொழியும் பாடத்திட்டமும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி-1, ஜனவரி 2019.


 **ISBN Number:** 978-81-981078-4-8

# 11

# அழ. வள்ளியப்பாவின் பாடல்களில் கல்வி கற்கும் குழந்தைகளுக்கான அறிவுரைகள்

**முனைவர் இரா. ஜீவாராணி**, உதவிப் பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

## முன்னுரை

குழந்தைகளுக்கான பாடல் குழந்தைப் பாடலாகும். குழந்தைகளுக்கான பாடல் மிகவும் எளிமையாகவும் பொருள் தெளிவாகப் புரியும் வகையிலும் இருக்க வேண்டும். வள்ளியப்பாவின் குழந்தைப் பாடல்கள் மலரும் உள்ளம் என்ற பெயரில் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. இவ்விரு தொகுதிகளிலும் கல்வி கற்கும் குழந்தைகளுக்கான அறிவுரைகளை மிகவும் எளிமையாகவும், எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் எடுத்துரைத்துள்ளார். அதனைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கல்வி – விளக்கம்

கல் என்றால் தோண்டி எடுத்தல் என்று பொருள்படும். மனிதனுக்குள் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணரும் தீவிர முயற்சியே கல்வியாகும்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

“ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்” என்று அறநூல் கூறுகிறது. “கேடில் விழுச்செல்வம் கல்வி” என்கிறார் வள்ளுவர். கல்விச் செல்வத்தின் புகழ் எக்காலத்திலும் அழியவே அழியாது. தொல்காப்பியர் கல்வியின் பெருமையைத் ‘பெருமிதம்’ என்னும் மெய்ப்பாட்டியலைப் குறிப்பிடும் போது எடுத்துரைத்துள்ளார்.

**கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**
**சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே (தொல். மெய்ப்பாட்டியல், நூ. 253)**

என்ற நூற்பாவின் வாயிலாக, ஒருவனுக்குப் பெருமிதத்தை ஏற்படுத்தக் கூடிய நான்கு அம்சங்களுள் முதன்மை இடத்தைப் பெறுவது கல்வியாகும் என்று கல்விக்குத் தலைமையிடத்தைக் கொடுத்துள்ளதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும்**
**அவன் கண்படுமே (புறநானூறு, 183)**

என்ற புறநானூற்றுப் பாடலின் வாயிலாக, கல்வி ஒன்று தான் மனிதனை மனிதன் நிகராக மதிக்கும் பண்பை வளர்க்கும் என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.

**பள்ளியும் குழந்தைகளின் நடத்தையும்**

கல்வியே அழியாச் செல்வம் ஆகும். கல்வி என்னும் நல்லறிவினை ஒருவன் பெற்றிருந்தால்

 **ISBN Number:** 978-81-981078-4-8

அவனிடம் எல்லா இன்பங்களும் வந்து சேரும். ஏனெனில் அக்கல்வியே ஒருவனுக்கு நடத்தையைக் கற்பிக்கிறது. அத்தகைய நடத்தையைக் கற்பிக்கும் இடமாகப் பள்ளிக்கூடம் விளங்குகின்றது என்பதனை,

**எங்கள் பள்ளிக்கூடமே**
**எளிமை மிக்க நிலையமே**
**அங்கே சென்று கற்பதால்**
**அறிவு மேலும் வளருமே... (வள்ளியப்பா, அ. ழ., ம. உ. இ. தொ. ப. 114)**

என்னும் பாடல் அடிகளின் வாயிலாகப் பள்ளிக்குச் செல்வதால் அறிவு வளரும் உள்ளமும் பண்படும் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் மிகவும் உற்சாகத்தோடு பள்ளிக்குச் செல்ல வேண்டும்; என்பதனை,

**பையைத் தோளில் மாட்டுவேன்**
**பள்ளிக்கூடம் செல்லுவேன்**
**பள்ளிக்கூடம் செல்லுவேன்**
**படிதத பாடம் சொல்லுவேன் (மேலது, ப. 5)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. எனவே பள்ளிக்கூடமே குழந்தைகளின் அறிவு வளரவும், மனது பண்படவும், குழந்தைகளின் மனது எப்போதும் உற்சாகத்தோடு இருப்பதற்கும் வழிவகை செய்கிறது என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.


**ISBN Number:** 978-81-981078-4-8

**பள்ளியும் கல்லூரியும்**

ஆரம்பக்கல்வியே மிகவும் இன்றியமையாதது ஆகும். நாம் கல்வி கற்று எவ்வளவு உயரத்திற்குச் சென்றாலும் கல்வி கற்ற ஒருவனுக்குப் பணிவுடைமை அவசியமான ஒன்றாகும். இளமையில் கற்கும் கல்வியே நம் வாழ்நாள் முழுமைக்கும் ஆணி வேராக இருக்கின்றது என்பதனை, "ஆரம்பப் பள்ளியும் கல்லூரியும்" என்னும் பாடல் வழி வலியுறுத்துகிறார். இதனை,

**உயிரெழுத்தும் மெய்யெழுத்தும்**
**ஒன்று ஒன்றாய்க் கூறவே**
**உயிரெடுக்கும் பள்ளியே இவ்**
**உலகில் நீ தான் உயர்வோ சொல்? (மேலது, ப. 137)**

என்று ஆரம்பப் பள்ளியைப் பார்த்துக் கல்லூரி கேள்வி கேட்கிறது. அதற்கு ஆரம்பப்பள்ளி,

**கழுத்தில் டையும் தலையில் ஹேட்டும்**
**காலில் பூட்ஸம் அணிவோரும்**
**எழுத்துக் கூட்டிக் கற்றிடாமல் எப்படி முன்னேறினர். (மேலது, ப. 5)**

என்று அரிச்சுவடியைப் படிக்காமல் எப்படி கல்லூரிக்கு வர முடியும்? என்று கேட்கிறது. மேலும்,

**ஏணியாக என்னை வைத்தே**
**ஏறி வந்தார் உன்னிடம்**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**வீணில் ஏனோ சண்டை? நான் தான்**

**வித்து என்பதுணருவாய் (மேலது, ப. 137)**

என்று சமாதானமாகப் பேசுவது போல் ஆசிரியர் படைத்துள்ளார். இவ்வாறு பள்ளியும கல்லூரியும் பேசிக்கொள்வது போன்று கற்பனையாகப் பாடல் இருந்தாலும் ஆரம்பப்பள்ளியே ஏணியாக நின்று பலரையும் மேற்படிப்பிற்கு அழைத்துச் செல்கிறது என்பதனைக் குழந்தைகள் உணரும் வகையில் தன் பாடல்களில் பாடியுள்ளதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**தேர்வில் பார்த்து எழுதுதல்**

தேர்வில் பார்த்து எழுதுவது தவறான செயலாகும். “பரிட்சை முடிவு” என்னும் பாடலில் சுந்தர் என்னும் சிறுவன் தன் நண்பன் சோமுவிடம் தேர்வில் பார்த்து எழுத உதவுமாறு வேண்டுகிறான். சோமுவும் அவனுக்கு உதவுகிறான். இறுதியில் சோமுவைப் பார்த்து எழுதிய சுந்தர் தேர்வில் தேர்ச்சி பெற்றுவிட்டான். ஆனால சோமு தோல்வி அடைந்து விடுகிறான். இதனை,

**சுந்தர் என்ற பையனைத்**

**துணிந்து பார்த்து எழுதியே**

**இந்தப் பரிட்சை தேறவா,**

**என்று கோட்டை கட்டினாய்....**

**...கெட்டிக்காரச் சோமுவோ**

 **ISBN Number:** 978-81-981078-4-8

**கேட்டான் இந்த சொற்களை**

**தட்டிக் கூற எண்ணினான்**

**தவறோ அவனைத் தடுத்தது (மேலது, ப. 179)**

என்ற பாடல் அடிகளின் வாயிலாக, தான் செய்த தவறுக்கு வருந்தும் சிறுவனை அறிந்து கொள்ள முடிகிறது. மேற்கணட் பாடலின் வாயிலாக, உண்மையில் பாடுபட்டு உழைத்துப் படித்துத் தேர்வினை எழுதி வெற்றி பெறும் மாணவர்களின் கடின உழைப்பு இப்படித் தேர்வில் பார்த்து எழுதுகின்ற மாணவர்களின் செயல்களால் வீணாகி விடக்கூடாது என்பதனைத் தன் பாடலின் வாயிலாக விளக்கியுள்ளதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**விடுமுறை எடுத்தல்**

பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் விடுமுறை எடுத்தால் விடுமுறைக் கடிதம் கொடுக்க வேண்டும் என்ற நற்பழக்கத்தை வளர்க்க வேண்டும் என்று கூறுகிறார். இதனை,

**அன்புடைய ஆசிரியர்**

**அவர்களுக்கு என் வணக்கம்**

**காலை முதல் தலைவலியால்**

**கஷ்டமிகப் படுகின்றேன். (மேலது, ப. 63)**

என்ற பாடல் வாயிலாக, பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பள்ளிக்குத் தவறாமல் சென்றிட வேண்டும்.


**ISBN Number:** 978-81-981078-4-8

அவ்வாறு பள்ளிக்குச் செல்ல முடியவில்லை என்றால், விடுமுறைக் கடிதம் கொடுக்க வேண்டும் என்ற ஒழுக்க நெறியை மாணவர்கள் கடைபிடிக்க வேண்டும் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**ஆசிரியரை மதித்தல்**

அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க வேண்டுமெனில் அது ஆசிரியர்களால் மட்டும் தான் முடியும். வருங்காலத் தலைமுறையினரை நல்ல முறையில் உருவாக்கும் பணியினை ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். எனவே தான் ஆசிரியப் பணியை அறப்பணி என்று நாம் கருதுகின்றோம். அப்படிப்பட்ட அறப்பணியை மேற்கொள்ளும் ஆசிரியர்களை நாம் மதிக்க வேண்டும். பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராக நானிருநதால் என்ன செய்வேன் என்று குழந்தை கற்பனை செய்து காட்டுகிறது. இதனை, ‘‘**வாத்தியாராய் நானிருந்தால் வகுப்பில் பாடம் நடித்திடுவேன் (மேலது, ப. 59 - 60)** என்று ஆசிரியர் பாடம் நடத்துவதைப் போல் நடித்துக் காட்டும் குழந்தையைத் தன் பாடல்களின் வாயிலாகக் காட்டுகிறார்.

**தொகுப்புரை**

கல் என்றால் தோண்டி எடுத்தல் என்று பொருள்படும். மனிதனுக்குள் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணரும் தீவிர முயற்சியே கல்வியாகும்.

 **ISBN Number:** 978-81-981078-4-8

பள்ளிக்கூடமே குழந்தைகளின் அறிவு வளரவும், மனது பண்படவும், குழந்தைகளின் மனது எப்போதும் உற்சாகத்தோடு இருப்பதற்கும் வழிவகை செய்கிறது என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது. ஆரம்பப்பள்ளியே ஏணியாக நின்று பலரையும் மேற்படிப்பிற்கு அழைத்துச் செல்கிறது. உண்மையில் பாடுபட்டு உழைத்துப் படித்துத் தேர்வினை எழுதி வெற்றி பெறும் மாணவர்களின் கடின உழைப்பு தேர்வில் பார்த்து எழுதுகின்ற மாணவர்களின் செயல்களால் வீணாகி விடக்கூடாது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பள்ளிக்குத் தவறாமல் சென்றிட வேண்டும். அவ்வாறு பள்ளிக்குச் செல்ல முடியவில்லை என்றால், விடுமுறைக் கடிதம் கொடுக்க வேண்டும் என்ற ஒழுக்க நெறியை மாணவர்கள் கடைபிடிக்க வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் - பொருளதிகாரம்.* சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

[2] முனைவர் பாலசுப்ரமணியன், கு. வெ. & விசுவநாதன். அ., *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2011.

[3] அழ. வள்ளியப்பா. *மலரும் உள்ளம்*, தொகுதி – 2. குழந்தை புத்தக நிலையம், அண்ணா நகர், சென்னை, பத்தாம் பதிப்பு – 1996.

 **ISBN Number:** 978-81-981078-4-8

[4] அழ. வள்ளியப்பா. *மலரும் உள்ளம்*, தொகுதி – 2. குழந்தை புத்தக நிலையம், அண்ணா நகர், சென்னை, முதல் பதிப்பு – 1961.

 **ISBN Number:** 978-81-981078-4-8

## குறிப்புகள்



 **ISBN Number:** 978-81-981078-4-8

## குறிப்புகள்




**ISBN Number:** 978-81-981078-4-8